
# என் வீடு



'லக்ஷ்மி'

பூங்கொடி பதிப்பகம்

## ''லக்ஷ்மி''யின் பூங்கொடி வெளியீடுகள்

| | |
|---|---|
| அடுத்த வீடு | 100.00 |
| அரக்கு மாளிகை | 125.00 |
| இரண்டாவது மலர் | 90.00 |
| ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 75.00 |
| பண்ணையார் மகள் | 85.00 |
| பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு நூல்) | 50.00 |
| ஸ்ரீமதி மைதிலி | 95.00 |
| இரண்டு பெண்கள் | 27.00 |
| இருளில் தொலைந்த உண்மை | 37.00 |
| உறவுகள் பிரிவதில்லை | 20.00 |
| உறவின் குரல் | 31.00 |
| கடைசி வரை | 25.00 |
| கதவு திறந்தால் | 54.00 |
| கழுத்தில் விழுந்த மாலை | 36.00 |
| கூறாமல் சன்னியாசம் | 32.00 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 24.00 |
| கை மாறிய போது | 42.00 |
| திரும்பிப் பார்த்தால் | 30.00 |
| தை பிறக்கட்டும் | 21.00 |
| நிற்க நேரமில்லை | 38.00 |
| நீதிக்குக் கைகள் நீளம் | 50.00 |
| பவள மல்லி | 50.00 |
| பவானி | 42.00 |
| புதை மணல் | 32.00 |
| மாயமான் | 15.00 |
| மீண்டும் பிறந்தால் | 60.00 |
| மீண்டும் பெண்மனம் | 40.00 |
| முருகன் சிரித்தான் | 24.00 |
| மோகத்திரை | 32.00 |
| வனிதா | 36.00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 39.00 |
| வடக்கே ஒரு சந்திப்பு | 18.00 |
| வாழ நினைத்தால் | 18.00 |
| வீரத்தேவன் கோட்டை | 18.00 |
| ஜெயந்தி வந்தாள் | 24.00 |


# என் வீடு

"அதோ பார்! சட்டுனு பார் பச்சை வண்ணப் பட்டுச் சேலையில் மினுக்கிட்டு நிக்கிறாளே அந்தப் பொண்ணை நல்லா பார்த்துக்கோ.''

அந்தச் சிறப்பு அங்காடியின் மற்றொரு பகுதியில் நின்று கொண்டிருந்த வசுந்தரா திகைப்புடன திரும்பினாள்.

சற்றுப் பருமனாக இருந்தவள்தான் தனது அருகில் நின்று கொண்டிருந்த உயரமான ஒடிசலான பெண்ணிடம் அப்படிக் கூறினாள்.

அவள் சுட்டிக் காட்டிய பெண் வேறு யாருமல்ல. அவள் அருமை மகள் அஞ்சனாவேதான். அப்படியென்ன அவளைப் பற்றிய ரகசியம்?

உற்றுக் கேட்டாள். ஆனால், நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

''வானவில் வண்ணங்கள்'' என்கிற சுவர்ச் சாயக் கம்பெனியைக் கேள்விப்பட்டிருக்கியோ?''

''கண்களில் அறைகிறாப்போல தினமும் பல பத்திரிகைகளில் முழுப் பக்கத்தையும் அடைச்சுக்கிட்டு விளம்பரம் போடுறாங்களே, அந்த நிறுவனத்தைத்தானே சொல்றே?''

''அதேதான். என்மகன் இரண்டு மாசத்துக்கு முன்னாடித்தான் அதிலே வேலைக்குச் சேர்ந்திருக்கான். விற்பனைப் பகுதியிலே வேலை பார்க்கிற முரளி என்கிறவனோட கொஞ்சம் சிநேகம். அவனோட மனைவிதான் அந்தப் பெண். கல்யாணமாகிப் புக்ககம் வந்ததும் முதல் வேலையா மாமியாரை வீட்டை விட்டு அடிச்சுத் துரத்தி விட்டாள். அந்தக் கிழவி பம்பாயில் இருக்கும் தன் மகள் வீட்டிலே போய்த் தங்கிவிட்டதாகக் கேள்வி. நல்ல வேளை இவள் வலது காலை எடுத்து வீட்டுக்குள்ளே வைக்கிறதுக்கு முன்னாலே மாமனார் மானத்தோட மறைஞ்சு போனார்.''

''ரொம்பப் பொல்லாத பொண்ணுன்னு சொல்றே?''

''பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்கத் தெரியலைன்னாக்கூட மன்னிச்சுடலாம். ஆனால், அவள் நடத்தையிலே ரொம்ப மோசமாம். ஆண்பிள்ளைகள் மேலே விழுந்து பழகிற விதம் ரொம்ப அசிங்கமா இருக்கும்.''

''கட்டினவன் என்ன களிமண்ணா? சும்மா பார்த்துக்கிட்டே இருப்பானா?''

''முரளி சுபாவத்திலே கொஞ்சம் மக்கு. அழகான மனைவி தனக்குக் கிடைச்சுட்டான்னு ஒரே மயக்கம்.''

''அப்படி அவள் ஒண்ணும் பேரழகியாகத் தெரியலையே! எல்லாம் ஒப்பனை செய்கிற வேலை.''

''அது இந்தக் காலத்துப் பசங்களுக்கு எங்கே புரிகிறது. தன் மனைவி எப்பவும் அழகியா இளமையோடு இருப்பாள்னு நினைப்பு. காலம்னு ஒண்ணு இருக்கு. அது



கொஞ்சம் கொஞ்சமா இந்த வெளி அழகைக் குடிச்சுடும்னு தெரிஞ்சாத் தானே?''

''கணவனும்-மனைவியும் மகிழ்ச்சியா வாழ்ந்தால் போதும்னு மாமியார் ஒதுங்கிட்டாங்க போல இருக்கு.''

''பாவம் அந்த அம்மா பல தடவை சொல்லிப் பார்த்தாங்க. கேட்டால்தானே இந்தப் பெண்? ஒரே அடங்காப் பிடாரி. இவளைப் பெத்த மகராசி...''

வசுந்தராவின் முகத்தில் அனல் பற்றி எரிந்தது. அவமானத்தில் சுருங்கிப் போனாள்.

''தன் மகள் அஞ்சனா. புக்ககம் போனபின் இப்படியா பெயர் எடுக்க வேண்டும்?'' என்று எண்ணி வேதனைப் பட்டாள்.

''பெத்தவங்களுக்கு ஒரே மகளாம். செல்லங் கொடுத்துக் குட்டிச்சுவராக்கி வச்சிருக்காங்க.''

நாக்கைக் கடித்துக் கொண்டாள் வசுந்தரா. 'பொய்! பொய்! நான் என் மகளைக் கண்டிப்பும் கறாருமாக வளர்த்தேன். அவள் அப்பா என்னோட ஒத்துழைச்சிருந்தால் இப்படிப் பேர் வாங்கியிருக்க மாட்டாள்' என்று கத்த வேண்டும் போன்ற ஆத்திரம்.

மூச்சைப் பிடித்துக்கொண்டு அவர்கள் மேலே பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றாள்.

''எப்போ பார்த்தாலும் முரளி வீட்டிலே பார்ட்டியும் கூத்துமாக ஒரே கலாட்டாவாகத்தான் இருக்குமாம். என் மகன் கூடச் சில தடவை அவங்க வீட்டுக்குப் போயிருக்கானாம், அவனுக்கு அந்தச் சூழ்நிலை பிடிக்காமல் போயிடுச்சாம். இப்போ போறதில்லை.''

''இந்தப் பெண் சுத்த மோசமாம். அந்தப் பார்ட்டியிலே வருகிற ஒரு பையனோட ரொம்ப நெருக்கமா பழகிட்டிருக்காளாம்.''

''யார் அந்தப் பையன்?''

''நம்ப மாதர் சங்கத்து உறுப்பினர் கோதைநாயகியின் அக்கா மகன் ஆனந்தன்தான் அவன். சபரிநாதன் அன் கோவிலே வேலை. எம்.பி.ஏ. பட்டத்துக்குப் படிச்சுட்டுச் சில மாசத்துக்கு முந்தித்தான் இங்கே திரும்பி வந்திருக்கான். அவனை இந்தப் பெண் வளைச்சுகிட்டிருக்கான்.''

''பலே ஆசாமியா இருக்காளே-பார்த்தா சின்னவளாத் தெரியரா...''

''பெரிய இடத்துக்குக் கண்ணி வச்சிருக்கா.''

''கணவன் கண்டுக்கலையா? கோவிச்சுக்கிட்டு அவளை அடக்க மாட்டானா, மக்குப் பயல்!''

''திரும்பிப் பதிலுக்குக் கத்துவாளேன்னு அந்தக் கோழைக்கு பயம். நேத்து என்கிட்டே கோதை ஒருமூச்சு அழுதாள். அவள் அக்கா மகனுக்குப் பல இடங்களில் இருந்து வரன் வருதாம். யாரையும் கட்டிக்க மாட்டேன்னு மறுக்கிறானாம்.''

''இதென்ன கூத்து? கல்யாணமான பெண் மேலே ஆசைப்பட்டால் என்ன நடக்கும்? ரொம்பத் தப்பாச்சே!''

''கல்யாணமானவள் மத்தவன் மனதிலே மயக்கத்தை உண்டாக்கிறது அதைவிடத் தப்பு.''

''இதெல்லாம் கேட்டால் என் தலை சுத்துது. எனக்கும் கல்யாண வயசிலே ஒரு மகன் இருக்கான். படிச்ச பெண்ணுன்னு நம்பி எந்தக் குப்பையிலாவது விழுந்து விடுவானோன்னு பயமா இருக்கு.''

''பெண்ணைக் குத்தம் சொல்லாதே. வளர்க்கிற முறையில்தான் எல்லாம் இருக்கு. இவளை ஆளாக்கிய தாயைத்தான் நான் சாடுவேன். சில அம்மாக்கள் தங்களது இளமையில் அனுபவிக்காத சில நாகரிகங்களை மகளாவது அனுபவிக்கட்டுமே என்று நினைக்கிறாங்க. பெண்ணை நம் நாட்டுப் பாணியில் அழகான காஞ்சீபுரம் பட்டுச்



சேலையில் பார்க்கிறதை விட்டு மாக்சி, பாண்ட், சட்டை, சுரிதார், கம்மீஸ் என்ற கோலத்தில் பார்த்து மகிழ்கிறாங்க. பெண் என்ன நினைக்கிறாள். உடுத்தத் தனக்குக் கிடைத்த சுதந்திரத்தை, நடத்தையிலும் எதிர்பார்க்கிறாள்.''

அதற்குமேல் அங்கே நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டால் தலை சுற்றிக் கீழே விழுந்துவிடுவாள் போன்ற ஒரு திகிலில் வசுந்தரா அங்கிருந்து அகன்றாள்.

அன்று கூட, அஞ்சனா, தன் பிறந்த வீட்டுக்கு ஒரு பாண்ட் சட்டையில்தான் வந்திருந்தாள். தன் சிநேகிதி ஒருத்தியின் கல்யாணத்திற்குப் பரிசுப் பொருள் வாங்க அம்மாவின் உதவியைத்தேடிப் பிறந்த வீட்டிற்கு வந்திருந்தாள்.

அந்தக் கோலத்தில் தன்னுடன் வெளியே புறப்பட்டவளைத் தாய் கண்டித்துத் தனது காஞ்சீபுரம் பட்டுச் சேலை ஒன்றைக் கொடுத்து உடுத்திக் கொண்டு வரச் செய்தாள்.

அஞ்சனாவுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்தபோதே, வசுந்தராவின் மனதில் ஒரு நெருடல். ''உள்ளூரிலேயே மாப்பிள்ளை வேலை பார்க்கிறானே!,' என்று கவலைப்பட்டாள். அஞ்சனா நினைத்தால் பிறந்த வீட்டில் வந்து நிற்பாளே என்ற அச்சம்.

வசுந்தராவுக்கு கல்யாணமாகி இருபத்தெட்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டிருந்தன.

மதுரையில்தான் பிறந்த வீடு இருந்தது. அவள் தன் திருமண வாழ்வில் இதுவரை சில தடவைதான் தன் பிறந்த வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். அங்கே தங்கியிருந்தது, மூன்றே தடவைதான். அதுவும் காரணத்தோடு தான்.

''தாயாருக்கு உடல்நிலை அபாயமாகிவிட்டிருக்கிறது. பம்பாயில் இருந்து அக்கா வந்துவிட்டாள்'' என்ற

கடிதத்தைக் கண்டதும், கணவனுடன் மதுரைக்குப் புறப்பட்டுப் போய் நான்கு நாள் பிறந்த வீட்டில் தங்கியிருந்தாள்.

அந்த நோயில் தாய் பிழைத்து எழுந்து விட்டாள்.

அடுத்த முறை தாயின் இறுதிக் காரியங்களுக்குத்தான் அவள் பிறந்த வீட்டிற்குப் போயிருந்தாள். அப்போது கணவனுடன் பத்து நாள் தங்கியிருக்க நேரிட்டது.

மூன்றாவது தடவை சினன அண்ணன் மகளின் கல்யாணத்தின்போது பிறந்த வீட்டில் சில நாள் தங்க நேரிட்டது.

கல்யாணத்திற்கு மறுநாளே அவள் கிளம்பினாள்.

''இதென்ன காலில் கஞ்சியை ஊத்திக்கிட்டு வந்திருக்கே!'' அண்ணி கோபித்துக்கொண்டதை அவள் பொருட்படுத்தவில்லை.

''அண்ணி! அவரைக் கவனிச்சு ஆபீசுக்கு அனுப்ப என் மாமியாரால் முடியாது. ஒரே நாளில் அலுத்துக்குவாங்க. நான் போகாவிட்டால், வீடு வீடாக இருக்காது.''

அது உண்மைதான். அந்தச் சில நாட்களுக்குள் அவள் வீடு அமர்க்களப் பட்டுவிட்டது.

கல்யாணத்திற்கு அவளை மட்டும் அனுப்பிவிட்டு வீட்டில் தங்கிக்கொண்ட அவள் கணவன், மாமியார் இருவரும் வீட்டையா கவனித்தார்கள்?

பல வருடம் வேலை செய்து வந்த வேலைக்காரி திடீரென்று நின்றுவிட்டாள்.

மளிகைச் சாமான்களை உரிய காலத்தில் வாங்க மறந்து விட்டதினால் அவள் வீட்டுக்கு வந்ததும் உப்பில்லை பருப்பில்லை என்ற இல்லாமைப் பாட்டு.

பள்ளிக்கூடம் சரிவரப் போகாது அஞ்சனா மட்டம் போட்டதை அறியாது அவள் கணவன் வியாபாரத்தில் மூழ்கிக்கிடந்தார்,



''பிறந்த வீட்டைப் பத்தியே உனக்கு நினைப்பில்லை.'' அண்ணன் ஆதங்கப்பட்டதை அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''என் வீடு, என் கணவர், என் வாழ்க்கை என்று பந்தங்கள் இருக்கும்போது எப்படி இன்னொரு இடத்தில் நிம்மதியாக இருக்க முடியும்?'' அண்ணனுக்கு அப்படித்தான் பதிலளித்தாள்.

''இந்தப் பெண் அஞ்சனாவுக்கு ஏன் அப்படி ஒரு கடமை உணர்ச்சியே ஏற்படவில்லை?''

அவள் கூடிய மட்டும் கட்டுப்பாடாகத்தானே வளர்த்தாள்? கல்யாணமாகும் வரை அஞ்சனா பாண்ட் சட்டை பக்கம் திரும்பிக்கூடப் பார்த்ததில்லை அவைகளை அணிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்துவதும் இல்லை. நீண்ட கூந்தலை வழவழ என்று வாரிப் பின்னலிட்டுக் கொண்டிருப்பவள், இப்போது முடியைக் கழுத்து வரை கத்தரித்துக் கொண்டு விட்டாளே!

மயில் தோகை போல முதுகிலே புரண்டுவிழும் கூந்தலைப் பாவிப் பெண், மொட்டையாக வெட்டிக்கொண்டு வந்து நிற்கிறாளே...!

எல்லாம் முரளி தந்த இடம். இதெல்லாம் நாகரிகம் என்று மனைவிக்குச் சொல்லிக் கொடுத்துக் கொடுத்து அவளைக் குட்டிச் சுவராக்கிவிட்டான். இப்போது சமாளிக்கத் தெரியாது விழித்துக் கொண்டு இருக்கிறான்.

உள்ளூரில் பிறந்தகம் இருந்தால், நினைத்தபோது வந்து நிற்கணுமா? சே? இந்தப் பெண்ணுக்கு ஏன் இங்கிதமே தெரியவில்லை?'

அஞ்சனா வேல்லக்குப் போகும் மனைவி அல்ல. வீட்டை ஒழுங்காக வைத்துக்கொண்டு,வேளைக்கு வேளை கணவனுக்குச் சுவையாகச் சமைத்துப் போட்டு, வாழத்

தெரிந்து கொள்ளாமல் எதற்கும் அம்மாவின் உதவியை நாடிப் பிறந்த வீட்டுக்கு ஓடி வந்து விடுகிறாளே... ரொம்பத் தவறு.

முரளி தன் தந்தை விட்டுட்போன சொத்தில் இருந்து தான் அந்த அழகான வீட்டை வாங்கிவிட்டிருந்தான்.

நகரத்தில் புதிதாக உருவாகியிருந்த குடியிருப்புப் பகுதியில் சோமேசுவரன் காலனியும் ஒன்று.

பிறந்த வீட்டிற்கு வெகு தொலைவில் இல்லாது அருகிலேயே சோமேசுவரன் காலனி அமைந்துவிட்டது பெரும் தொல்லையாகிவிட்டது.

மூச்சுவிட்டால் போதும்! அஞ்சனா ஒரு ஆட்டோவைப் பிடித்துக்கொண்டு வந்து சேர்ந்துவிடுகிறாள்.

''அம்மா! சாம்பார் பொடி வேணும். காரக் குழம்பு கொஞ்சம் செய்து கொடுங்கள். தையல் கடை வரை போகணும். நீங்களே கொஞ்சம் சப்பாத்தி செய்து தொட்டுக்கச் சட்டினி வச்சுக் கொடுத்திடுங்க. ராத்திரி சாப்பாட்டுக்கு ரொம்ப உபயோகமாக இருக்கும்.''

''காலையில் இருந்து மாலை வரை தையல் கடையில் உனக்கு என்ன வேலை?''

''ஏம்மா ஒரு பத்து சப்பாத்தியும் ஒரு கிண்ணம் சட்டினியும் செய்து தந்தா குறைந்தா போயிடுவீங்க?'' அஞ்சனா அழுகை தொனிக்கும் குரலில் கேட்டாள்.

''குறைஞ்சு போகமாட்டேன். நீ இந்தப் பொறுப்பையெல்லாம் எப்போ தெரிஞ்சுக்கறது?''

''நான் சப்பாத்தி செய்தால் அட்டையைப் போல விரைப்பா இருக்கு. நீங்க செய்து தந்தா பூவா இருக்குன்னு முரளி சொல்கிறார்.''

''செய்து பழகினால்தானே திறமை வரும்?''

''குழந்தை கேட்கிறதே. செய்து கொடேன். ஏன் தர்க்கம் பண்றே...'' வீட்டிலே ஒரு பக்கம் கட்டிலின் மீது



சதா முடங்கிக் கொண்டு, எல்லா நோய்களும் தன்னிடம் குடிகொண்டிருப்பதாக எண்ணிப் புலம்பிக்கொண்டிருக்கும் அவளது மாமியாரின் உத்திரவு.

பேத்திக்காகப் பரிந்துகொண்டு பேசும் கிழவியின் வார்த்தையை எப்படி மறுக்க முடியும்.

அன்று காலை அவள் வரப்போவதைத் தொலைபேசி மூலம் முன்னதாகத் தெரிவித்துவிட்டுத்தான் அஞ்சனா புறப்பட்டு வந்து இருந்தாள்.

வசுந்தராவுக்குத் தொலைபேசி வசதி கிடையாது. மாமனார் விட்டுப்போன பழைய ஓட்டுக் கூரை வீட்டில் கணவன் செய்து வந்த சிறு வியாபாரத்தில் வந்ததை வைத்துக்கொண்டு செட்டும் கட்டுமாக வாழ்கிறவள்.

பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்த வகையில் ஏற்பட்டிருந்த கடனை அடைக்க அவள் இன்னமும் பாடு பட்டுக் கொண்டிருந்தாள்.

அடுத்த வீட்டுக்காரரிடம் தொலைபேசி இருந்தது. ஆனால், வசுந்தரா அதை உபயோகிக்க விரும்பியதில்லை. அவசரச் சங்கதி என்றால் தெருக்கோடியில் இருந்த மளிகைக் கடைக்குச் சென்று தொலைபேசியைக் காசு கொடுத்து உபயோகிப்பாள்.

முரளிக்கு அவனது கம்பெனி கார், தொலைபேசி, வீட்டு வாடகை போன்ற வசதிகளைச் செய்து கொடுத்து இருந்தது.

அஞ்சனா நினைத்தபோது அம்மாவை அடுத்த வீட்டுத் தொலைபேசி எண்ணில் அழைத்து விடுவாள். அடுத்த வீட்டுக்கார அம்மாளின் முகம் பரங்கிக்காயாக உப்பி விடும்.

''உங்க பொண்ணு கூப்பிட்டிருக்கா. சீக்கிரம் பேசி முடியுங்கோ. என் மகன் துபாயில் இருந்து டிரங்கால் போடறேன்னு சொல்லியிருக்கான்.''

வெட்கத்திலே துவண்டு போவாள் வசுந்தரா. பல தடவை சொல்லியும் அஞ்சனாவுக்கு ஏன் புத்தியில்லை. அடுத்த வீட்டவர்களை ஏன் தொந்திரவு செய்ய வேண்டும்? அப்படி ஒன்றும் தலைபோகிற காரிய மில்லையே!''

அன்று காலை அவள் சமையலறையில் வேலையாக இருந்தாள். அவள் கணவர் காலையிலேயே புறப்பட்டு வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டார். நகரத்தில் இருந்த ஒரு தோல் மண்டியில் அவர் ஒரு சிறு பங்குதாரர். தினமும் மொத்த வியாபாரக் கிடங்கிற்குச் சென்று, கணக்கு வழக்குகளைக் கவனிக்க வேண்டியது, அவர் பொறுப்பு. மாதத்திற்கு ஒரு குறித்த தொகையைத் தமது பங்கு லாபத்திற்குச் சம்பளம்போல எடுத்துக்கொண்டார். ஆண்டுமுடிவில் கணக்குப் பார்த்து, எடுத்த பணத்துடன் தமது பங்கு லாபத்தை ஈடுசெய்யும்போது, சில சமயங் களில் வரவு கையைக் கடித்தது. ஆனால், அதற்கென்று வியாபாரத்தை உதற முடியவில்லை. புலி வாலைப் பிடித்துக் கொண்டவன் நிலையில் வாழ்ந்து கொண் டிருந்தார் கணபதி.

வசுந்தரா மட்டும் சிக்கனமாக இல்லாவிடில், அவர் கதி அதோகதிதான்.

வாயிற்கதவைப் பக்கத்து வீட்டுப் பொடிப்பயல் தட்டினான். ''உங்கள் மகள்கிட்டேயிருந்து போன் வந்திருக்கு.''

காஸ் அடுப்பை மூடிவிட்டு, சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு வேகமாக அண்டை வீட்டுக்குள் ஓடினாள்.

''அம்மா! கடைக்குப் போகணும். நீங்கள்கூட வரணும். என் சிநேகிதிக்குக் கல்யாணம். ஒரு பரிசு வாங் கணும். நான் அங்கே வந்துடறேன் பகலுக்கு முரளி ஓட்ட லில் சாப்பிட ஒத்துக் கொண்டுவிட்டார். நான் உங்க



ளோட இன்னிக்கும் முழுசும் தங்கிவிட்டு, சாயங்காலம் போகும்போது நீங்க சமைச்சுக் கொடுக்கிறதை எடுத்துக் கிட்டு...''

தாடை இறுக போனை வைத்தாள் வசுந்தரா.

''காலை வேளையிலே வந்து உங்களுக்குத் தொந்திரவு கொடுத்துட்டேன். மன்னிச்சுக்கோங்க.'' அடுத்த வீட்டுக் காரியிடம் குழைவாகச் சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும் பினாள்.

மகள் வந்ததும் ஒரு மூச்சு இரைந்தாள்.

''இனி அடுத்த வீட்டுக்கு போன் செய்தே, நான் வந்து பேசமாட்டேன். மானம் போகுது எனக்கு'' என்று மகளை எரிச்சலோடு எச்சரித்தாள்.

பின்னர் சமையலை முடித்துவிட்டு, மாமியாருக்கு டிபன் காப்பி தந்து உபசரித்து, வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு மகளுடன் கடைக்குக் கிளம்பி யிருந்தாள்.

வந்த இடத்தில்தான் இந்தப் புதிய தகவல்!

வம்பளந்து கொண்டிருந்த அந்த இரு பெண்களும் வேறு பகுதிக்குப் போய்விட்டனர்.

''அம்மா! இந்தப் பரிசு எப்படி இருக்கு?'' கேட்டபடி' தான் வாங்கி வந்த ஒரு கண்ணாடி பொம்மையை அதன் அட்டைப் பெட்டியில் இருந்து எடுத்துக் காட்டினாள் மகள். ''நூற்று எழுபத்தஞ்சு ரூபாய்தான் அம்மா!''

வசுந்தரா திகைத்துப் போனாள். அஞ்சனாவுக்கு இப்போது பணம்கூடத் துச்சமாகி விட்டிருக்கிறதே?

''இத்தனை பணத்தைப் போட்டு, உடைஞ்சு போற இந்தக் கண்ணாடிப் பொருளையா வாங்குவே?''

''ஏம்மா இது அழகா இருக்கே?''

''பார்க்க அழகாகத்தான் இருக்கு. கை தவறி விழுந்தாத் தூளாகிவிடும் கண்ணாடி பொம்மையில் போட்ட பணத்தை ஒரு பாத்திரத்தில போட்டு இருந்தால், அந்தப் பெண் கால முச்சூடும் உபயோகிப்பாள்.''

''அதெல்லாம் ரொம்பப் பழங்காலத்து சங்கதி. இது ஒரு அழகான பொம்மை. அவள் தனது வீட்டு முன்னறையில் வைத்தால். பார்க்கிறவங்க எல்லாம் புகழ்வாங்க. அலங்காரமா இருக்கும்.''

''அலங்காரத்தைத்தான் நீ பார்க்கிறே! அவசியத்தை நினைத்துப் பார்க்க மாட்டேங்கிறே?''

''என்னம்மா ரொம்பக் கட்டுப்பெட்டியா இருக்கிங்க?''

''எப்படி வாழறதுன்னு தெரிஞ்சுகிட்டிருக்கேன். உன்னைப் போல நான் வெளிப்பகட்டுக்காக வாழறதில்லை. உன் கல்யாணத்தின்போது நல்ல விலை கொடுத்து ஒரு குத்துவிளக்கு வாங்கி தந்தேன். பூஜை அறையிலே வச்சு அதை ஏத்துவேன்னு நினைச்சேன்.''

''அதுக்கு இப்போ என்ன? முன்னறையிலே பளபளன்னு அலங்காரமா வச்சிருக்கேன்.''

''பூஜை அறையில் மங்களமா எரியவிட வேண்டிய விளக்கை முன்னறையில் அலங்காரமா வச்சிருக்கே. அவ்வளவுதான் உன் புத்தி. சரி வீட்டுக்கு வந்ததும் ஒரு வாய் சாப்பிட்டுட்டு, உன் உடைகளைப் போட்டுகிட்டு நீ வேகமா வீட்டுக்குப் போகணும்.''

''என்னம்மா என்னை அடிச்சுத் துரத்துறிங்க?''

வசுந்தரா கண்டிப்பாக இருந்தாள். வீட்டிற்குத் திரும்பியதும், மகளுக்கு சாப்பாடு போட்டு, உடனடியாக அனுப்பி விட்டாள்.

''குழந்தை வந்திருந்தாளே, அவள் கையிலே ஆவக்காய் ஊறுகாய் கொஞ்சம் பாட்டிலிலே போட்டுக் கொடுத்திருக்கலாமே! புதினாத் துவையல் செய்தியே, அதைக் கொடுத்து அனுப்பினியா?'' மாமியார் கிழவி அனுதாபத்துடன் விசாரித்தபோது வசுந்தராவுக்கு ஒரே எரிச்சல்.



''இனிமே அஞ்சனா அவள் வீட்டுக்குத் தேவையானதை அவளே செய்துக்கத் தெரிஞ்சுக்கணும். நம்மை எதிர்பார்த்திட்டு வாழக்கூடாது. அவள் பச்சைக் குழந்தையில்லை...'' முணுமுணுத்துவிட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கப் புறப்பட்டாள்.

மறுநாள் காலை. மருமகன் முரளி வந்து அழைப்பு மணியை அழுத்தினான்.

''வாங்கோ! உட்காருங்கோ'' மரியாதை தந்து உபசரித்தாள்.

''நானும் அஞ்சனாவும் நாளை காலை காரில் பெங்களூருக்குப் போகப் போகிறோம். அதனால்...'' என்று இழுத்தபடி மருமகன் கூடத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

அவசரமாகக் காப்பியைக் கலக்கிக்கொண்டு வந்து அவன் முக்காலி மீது வைத்தாள்.

''பெங்களூருக்கு என்ன விசேஷம்?''

''அஞ்சனாவின் தோழிக்கு நாளை மறுநாள் கல்யாணம். அதுக்குப் போய்விட்டு அப்படியே மைசூரில் ரெண்டு நாள் ஓட்டலில் ஓய்வா தங்கியிருந்துவிட்டுத் திரும்பலாம்னு யோசனை.''

''உங்களுக்கு விடுப்பு நாட்கள் அதிகம் இருக்கு போலிருக்கு.''

''இல்லை எல்லாத்தையும் ஆண்டு ஆரம்பத்திலேயே ஐதராபாத், டெல்லின்னு ஒரு சுற்றுப்பயணம் செய்து முடிச்சிட்டோமே. இப்போ கம்பெனிக் காரியத்தை இதோட பிணைச்சுக்கிட்டுப் புறப்பட்டிருக்கிறேன்.''

''அஞ்சனா, இந்தக் கல்யாணத்துக்கு அவசியமா உங்களோட வாணுமா?''

''அவளுடைய தோழிக்குக் கல்யாணம். இந்த யோசனையே அவள் தான் கொடுத்தது.''

கணவன் தவறான வழியில் சென்றால், தடுக்க வேண்டியது மனைவியின் கடமை. கம்பெனிக் காரியத்திற்குப் போவதாகக் கணக்கு எழுதி அந்தச் செலவில் கல்யாணத்திற்குப்போக வழிகாட்டுகிறாளே அஞ்சனா! பிறர் பொருளை மனதாலும் தீண்ட ஆசைப்படாத வசுந்தராவுக்கு இப்படி ஒரு மகளா? தில்லுமுல்லுகளில் தீவிரமாக இறங்கி விட்டிருக்கிறாளே!''

''மாப்பிள்ளை! அஞ்சனா உலக அறிவு இல்லாதவள். அவள் பேச்சை நீங்கள் கேட்டுக்கிட்டுக் கம்பெனி காரியங்களில் தவறு செய்யக்கூடாது.''

முகம் மாறிப்போனான் முரளி.

''என்னவோ எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னேன். எப்போ கிளம்பறதாகத் தீர்மானம்?'' சட்டென்று பேச்சை மாற்றினாள்.

''நாளை விடியற்காலை கிளம்பிப் போறோம். நாங்க வரும்வரை வீட்டை ஒரு கண் பார்த்துக்கணும்'' மறு சாவியை அவளிடம் கொடுத்துவிட்டு, காப்பியை வேகமாகப் பருகிவிட்டுக் கிளம்பினான்.

வாட்டசாட்டமாக, பார்க்கக் கச்சிதமாக இருந்தான் முரளி. எம்.பி.ஏ. படித்தவன். திறமைசாலி என்ற பெயருடன் வேலைக்கு அமர்ந்த இரண்டு ஆண்டுகளிலேயே வேலை உயர்வு-சம்பள உயர்வு சலுகைகள் எல்லாம் அடைந்தான். கைநிறையச் சம்பாதிக்கிறான். ஆனால் மனைவியை அடக்கித் தன் போக்கிற்குக் கொண்டுவரத் தெரியாத கோழை.

பெருமூச்செறிந்தாள், வசுந்தரா.

## 2

மறுநாள் பிற்பகல் வசுந்தராவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. புத்தம் புதிய வீடு, கடன்பட்டுச் சாமான்களை வாங்கிப் போட்டிருக்கிறான். பொறுப்பில்லாத அஞ்சனா, வீட்டைப் பூட்டிக்கொண்டு போய்விட்டாளே? வீட்டில் யாருமில்லை என்பது தெரிந்தால், களவாடுகிறவர்களுக்குச் சுலபமாயிற்றே?

வீடு கூட்டும் வேலைக்காரி முருகம்மாளின் கணவன், வயதானவன் வீட்டோடு சும்மா தானே இருக்கிறான்?

இந்தச் சில நாட்கள் வீட்டைக் கவனித்துக் கொள்ளும்படி அவனை ஏற்பாடு செய்தால்?

பலவும் எண்ணியபடி, ஒரு ரிக்ஷாவில் ஏறிப் புறப்பட்டாள்.

வெளி வாசலைத் திறந்துகொண்டு உள்ளே தோட்டத்திற்குள் நுழைந்தபோது அவள் மனம் மிக வேதனைப்பட்டது.

மகளின் பிறந்த நாளுக்காக அருகிலிருந்த நர்சரியிலிருந்து வாங்கி வந்து தன் கையால் தோட்டத்து மதில் சுவர் ஓரமாக நட்டுவிட்டுப் போயிருந்த விருச்சிச் செடி தண்ணீர் காணாது உலர்ந்துவிட்டிருந்தது. முரளி வீட்டை வாங்கிய புதிதில் ஆசையுடன் தான் நட்டுவிட்டுப் போன மல்லிகை, செவ்வந்தி, நித்யமல்லி எல்லாம் கருகிக் காணப்பட்டன! வெட்டப்படாத புல் புதர்கள்! தோட்டம் கவனிப்பார் இன்றிக் காணப்பட்டது.

கோபத்துடன் கதவைத் திறந்து உள்ளே புகுந்தாள். தோட்டத்தைவிட வீட்டுக்குள் ஒரே அலங்கோலம். முன்னறையின் சோபாக்களின் மீது கழற்றிப் போட்ட சட்டை, காப்பி மேசை மீது காலியான கோப்பைகள், தம்ளர்கள்.

சமையலறையின் கதி அதைவிட மோசமாக இருந்தது. மேடையைத் துடைத்து யுகம் ஆகிவிட்டது போன்று எண்ணெய்ப் பிசுக்கு. தொட்டியில் கழுவாத பாத்திரங்கள். அலமாரி திறந்து கிடந்தது. அழகாக மகளுக்கு அடுக்கிச் கொடுத்த சாமான், பாத்திரங்கள், டப்பாக்கள் எல்லாம் தாறுமாறாக வைக்கப்பட்டு சில திறந்து கிடந்தன.

இது தனிக்குடித்தனம் அல்ல. தடித்தனம் என்று வெருண்டபடி எல்லாவற்றையும் சீராக்கத் தொடங்கினாள்.

முன்னறை மூலைகளில் தெரிந்த ஒட்டடைகளைத் தட்டி,சாமான்கள் மேல் படிந்து கிடந்த தூசியை அகற்றி, முன்னறையில் தரையில் கிடந்த கம்பளத்தை உதறி, வீடு முழுவதும் பெருக்கிச் சுத்தப்படுத்திப் பாத்திரங்களைத் தேய்த்து, அலமாரியை மூடி, படுக்கைகளைச் சீராக்கி, புதிய விரிப்புகளைப் பரத்தி, அழுக்காகி விட்ட துணிகளைத் துவைத்துக் கொடியில் போட்டுவிட்டு, தோட்டத்துக் குப்பைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, காய்ந்துபோன செடிகளுக்கு நீர்வார்த்து நிமிர்வதற்குள் மாலை வெயில் மஞ்சளாகி, பொழுது தாழ்ந்துகொண்டுவரத் தொடங்கியது. முதுகு இரண்டாகிவிடும் போல வலித்தது.

நடைவிளக்கைப் போட்டுவிட்டுக் கிளம்ப நினைத்த போது, கவனிக்காது விட்டுப்போன புத்தக அலமாரி கண்ணில் பட்டது.

தாறுமாறாக அதனுள் புரட்டிக்கிடந்த புத்தகக் குவியலை வெறுப்புடன் பார்த்தபடி அதையும் ஒழுங்காக்க நெருங்கினாள்.

அஞ்சனாவுக்கு ஒரு கெட்ட பழக்கம். புத்தகங்களைப் படித்தால் பாதியில் விட்டுப்போன பக்கங்களை நினைவு படுத்த அடையாளமாக ஒரு சிறு துண்டு அட்டையையோ காகிதத் துண்டையோ வைக்கமாட்டாள். பக்கத்தின் முனையை மடித்து விடுவாள். பணத்தைப் போட்டு



வாங்கும் புத்தகங்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ளத் தெரியாத மக்கு.

கோபத்துடன் புத்தகங்களை எடுத்து வரிசைப் படுத்திக் கொண்டிருந்தபோது கை தவறி ஒரு புத்தகத்தில் மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதம் நழுவி, சற்று தூரத்தில் பறந்து விழுந்தது.

''கடைக்காரர் தந்த பில்லில் இருந்து சகலத்தையும் புத்தகத்திற்குள் சொருகிவிடும் கெட்ட பழக்கம் வேறு'' என்று மகளை மனதில் திட்டிக்கொண்டே,குனிந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள். பலத்த அதிர்ச்சிக்குள்ளானாள்.

அந்தக் கடிதத்தை நிதானமாக மறுபடி ஒருமுறை படித்துப் பார்க்க அவளுக்கு நேரம் இல்லை.

சட்டென்று அதை மடித்துப் பர்சுக்குள் வைத்துக் கொண்டு நடைவிளக்கைப் போட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

அக்கம்பக்கத்தவர்களைக் கொஞ்சம் வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லலாம் என்றால், அது கம்பெனிகளின் தயவிலே வாடகைச் சலுகையும், கார் வசதியுமாக வாழ்கின்ற அலுவலர் பலர் வசித்த குடியிருப்புப் பகுதி. கணவனும், மனைவியும் வேலைக்கு ஓடிக்கொண்டு பக்கத்து வீட்டார்களைப் பற்றி நினைக்க முடியாது, அவர்களது வாழ்க்கை உண்டு என்று வாழ்கிற கூட்டம்.

நாளைக்குக் காலையில் வேலைக்காரி முருகாயியின் கணவனை வீட்டைப் பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்தாகணும் என்று தனக்குள் எண்ணியபடி சாலைக்குள் புகுந்தாள். சோதனையாக வீட்டுக்கு அவசரமாகப் போக ரிக்ஷா ஒன்றும் கிடைக்கவில்லை.

அவள் கணவர் கணபதி, அந்த நேரத்திற்குள் வீடு திரும்பி விடுவார். சொந்த வியாபாரம் என்றாலும்

அவரால் ஐந்து மணிக்கு மேல் அலுவலகத்தில் இருப்புக் கொள்ளாது. வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு மாற்றுடை அணிந்துகொண்டு அருகிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்குப் போய் வணங்கிவிட்டு விரைவில் வந்துவிடுவார். அதற்குப்பின் அவருக்குக் காப்பி சாப்பிட்டாக வேண்டும். காப்பியை மெல்லப் பருகியபடியே கையோடு கொண்டு வந்த மாலை நாளேட்டைப் படிக்காவிடில் தலை வெடித்துவிடும்.

கோவிலில் இருந்து வந்தவர் கூடத்துச் சாய்வு நாற்காலியில் உட்காருவதற்குள் அவள் காப்பியைக் கொண்டு வந்து முக்காலி மீது வைத்துவிடுவாள். சற்றுத் தாமதமானாலும் மனிதனுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும்!

வெளியில் இருந்து வரும்பொழுது வசுந்தரா வீட்டில் இல்லாவிடில் கணபதிக்குக் கோபம் வந்துவிடும்.

ஓட்டமும் நடையுமாக அவள் வீட்டை அடைவதற்கும் அவள் கணவன் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

''எங்கே போயிட்டு வராப்பல?'' அதட்டியபடி பெட்டியை மேசைமேல் வைத்தார்.

கணவருக்குப் பதில் சொல்லாமலே சோப்பு, துவாலை மாற்று வேட்டி, பனியன் எல்லாவற்றையும் குளியலறையில் கொண்டு வைத்துவிட்டு, கை, கால், முகம் கழுவித் துடைத்துக்கொண்டு, அவசரமாகச் சமையலறைக்குள் புகுந்துவிட்டாள்.

காப்பியை மெல்லப் பருகியபடி, காலை நீட்டி நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தவரிடம், அவர் அம்மா சிவகாமி மெல்ல உள்ளே வந்து கலந்து கொண்டாள்.

''அஞ்சனா பெங்களூருக்குப் போயிருக்காள். அவள் வீட்டைச் சீராக்கிவிட்டு வரப் போயிருந்தாள் வசுந்தரா.''



கணபதியின் முகத்திலிருந்த கடுமை மாறிப் புன்னகை படர்ந்தது. மகள் பெயரைக் கேட்டால்கூட அவர் வாயெல்லாம் பல்லாகிவிடும். அத்தனை ஒரு பாசம். பாட்டி சிவகாமியும் அப்படித்தான். ''ஒரே ஒரு பெண் குழந்தை..! அது கண்கலங்கப் பார்க்க முடியுமோ?'' என்று எதற்கும் பரிந்துகொண்டு வந்து விடுவாள்.

பெற்றவருக்கும் பாட்டிக்கும் அஞ்சனாவின் குற்றங்கள் எதுவுமே கண்ணில் படாது. இன்னமும் அவளை அவர்கள் இருவரும் ஒரு பாப்பாவாகத்தான் நினைத்தார்கள்.

ஆனால் வசுந்தராவால் அப்படி இருக்கவே முடியவில்லை.

பொன் கத்தி என்று யாரும் கழுத்தை அறுத்துக் கொள்ள முடியாதே! மகள் என்ற பாசத்திற்காக அவள் செய்யும் மோசங்களைக் காணாது இருந்துகொண்டு அவளைக் கொண்டாட முடியவில்லை.

இரவு உணவுக்குப் பின் கணபதி படுக்கை மீது சரிந்து கொண்டுவிட்டார்.

சிறிது நேரம் மருமகளைத் தொண தொணத்துக் கொண்டிருந்த கிழவிக்குத் தூக்கம் கண்களை அழுத்தவே, போர்வையை இழுத்துத் தலைமேல் வழிய விட்டுக் கொண்டு, லேசான குறட்டையுடன் நித்திரையில் அமிழ்ந்திப் போனாள்.

ஒருவழியாக வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டுக் கூடத்து விளக்கடியில் வந்து உட்கார்ந்தாள் வசுந்தரா.

இப்பொழுதுதான் அந்தக் கடிதத்தை அமைதியாக மறுபடியும் படிக்க முடிந்தது.

அன்புள்ள ஆனந்தனுக்கு,

நேற்று நீங்கள் வந்து போன பின்பு நான் வெகுநேரம் உங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். நாம் எதிர்பாராத விதமாகச் சந்தித்தோம். ஆனால், இந்தக் குறுகிய காலத்திற்குள் எத்தனை அன்பான நண்பர்களாகி விட்டிருக்கிறோம்! இதற்குக் காரணம் இல்லாது போகவில்லை. இலக்கியம், ஓவியம், கவிதை, சங்கீதம் இவைகளில் உங்களுடைய ரசனை, என்னுடையதைப் போலவே இருக்கிறது. சாப்பிடும் உணவு, பிடித்த வண்ணங்கள், சினிமாப் படங்கள் என்ற பலதிலும் நமக்குள் அதிக ஒற்றுமை உள்ளது. சிங்கப்பூர் பயணத்தில் இருந்து திரும்பி வந்ததும், என்னைப் பார்த்துப் போக நீங்களே வண்டி ஓட்டிக்கொண்டு வந்தது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. வெறும் கையுடன் வரவில்லை. நீங்கள் மேசை மீது எனக்காக விட்டுப்போன பரிசுப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்து நான் மகிழ்ச்சியில் பூரித்துப போனேன். உங்களுக்குப் பெண்களுக்குப் பிடித்த அழகிய பொருள்களைத் தேர்ந்தெடுத்து வாங்கத் தெரிந்திருக்கிறதே என்று வியந்து போனேன். எனக்காக நீங்கள் வாங்கி வந்திருக்கும் ஆரஞ்சு வண்ண சைனா பட்டுச் சேலை மிகவும் அழகாக இருக்கிறது. அத்துடன் கூட எனக்கு அளித்திருக்கும் சார்லி செண்டிற்கும் லாவண்டர் பவுடருக்கும் மிக்க நன்றி. நானும் முரளியும் பெங்களூருக்குப் போக வேண்டியுள்ளது. திரும்பி வந்ததும், நீங்கள் விரும்பியபடி நாம் எல்லோரும் சேர்ந்து ஒருநாள் பிக்னிக் போய் வரலாம். தங்களை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லி, இந்தக் கடிதத்தை அவசரமாக முடிக்கிறேன்.

இங்கனம், அன்புள்ள அஞ்சனா.

கோபத்தில் நெஞ்சு துடிக்க, பற்களை அழுந்தக் கடித்துக் கொண்டாள் வசுந்தரா. கல்யாணமான பெண், வேறு ஒருவனுக்கு இப்படியா கடிதம் எழுதுவது.



யாருக்கு யார் பரிசுகள் வாங்கித் தருவது? பிற ஆணிடம் இவைகளை ஏற்கக்கூடாது என்ற அளவுக்கு விவேகம் இல்லாதவளா? சேலை, பவுடர் இவைகளை வாங்கிக்கொண்டு வந்தானாமே...படிக்கவே அசிங்கமாக இருக்கு! முரளி இவளுக்கு என்ன குறை வச்சிருக்கான்? கேட்டதை வாங்கித் தருகிறான். இவள் போக்குக்குப் பெருமாள் கோயில் மாடு போலத் தலையசைக்கிறான். ஏமாந்தவன் கணவன் என்று ஏறி மிதிக்கிறாளே, பாவிப் பெண்!

கடிதத்தை மடித்துப் பத்திரமாக அலமாரியில் ஒரு புத்தகத்திற்குள் செருகி வைத்துப் பூட்டினாள். கூடத்தில் விடிவிளக்கை எரிய விட்டுவிட்டு, மற்ற விளக்குகளை அணைத்துவிட்டுப் படுக்கைமீது சாய்ந்துகொண்டாள்.

மகளைப் பற்றிப் பேசிய அவதூறுகள் உண்மை என்று உடனடியாகக் கண்டுபிடித்துவிட்டதின் அதிர்ச்சியை அவளால் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

அஞ்சனாவிடம் காணப்படும் இந்தத் தாறுமாறான போக்கு பிறவிக் குணமா?

வசுந்தராவைப் பற்றியவரை, அவளது குடும்பத்துப் பெண்கள் எல்லோரும் மிகவும் அடக்கமானவர்களாச்சே? அவளது சகோதரி பொறுமையின் இலக்கணம். அவளது தாய் அடக்கத்தின் இருப்பிடம்.

அத்தை மிகவும் கண்டிப்பானவள். பெரியம்மா கடவுள் பக்தி அதிகம் கொண்ட பெண்மணி.

யாரும் குடும்ப கவுரவத்தைப் பாழாக்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ததில்லை.

நாற்பத்தேழு தலைமுறைக்கு முன் உள்ள உறவினர்களின் கெட்ட குணங்கள் பாரம்பரியமாக வாரிசுகளைத் தாக்க முடியும் என்கிறார்களே விஞ்ஞானிகள், அதுபோல ஒருசமயம் அவர்கள் குடும்பத்தில் பாட்டிக்கு முப்பாட்டி,

அவளுடைய முப்பாட்டி யாராவது இப்படி அதிகப் பிரசங்கித்தனமான பெண்மணியாக இருந்து தொலைந் தாளோ? எங்கிருந்து இந்தக் கெட்ட குணம் வந்திருக் கிறது?

கடிதத்தைப்பற்றிக் கணவனிடம் ஏதும் பேச முடி யாது. அவர் முன்கோபக்காரர். உடனே சபரிநாதன் அன் கோவுக்குப் புறப்பட்டுப் போய்விடுவார். ஆனந்தனை அழைத்துப் பேசாததெல்லாம் பேசி அமர்க்களப்படுத்தி விடுவார். மகளின் பிசகு அவர் கண்களுக்குத் தெரியாது. ஆனந்தன் மேல்தான் குற்றம் என்று குதிப்பார்.

மாமியாரிடம் கலந்து ஆலோசிக்கலாம் என்றாலோ பெரும் ஆபத்தாய் முடியும் அது.

சியாமளாவுக்கு ரகசியங்களைக் காப்பாற்ற முடியாத பலவீனம். தன்னைக் காண வரும் தோழிகளிடம் நடந்ததைக் கூறி ஒருமூச்சுக் கண்ணீர் விடுவாள். பிறகு கேட்பானேன், ஊரே பரவிவிடும். இந்தச் சங்கடமான நிலையை அவள் தனியாக நின்று சமாளிக்க வேண்டும்.

உறக்கம் பிடிக்காது படுக்கையில் புரண்டாள்.

கல்யாணமாகி மூன்று ஆண்டுகள் சென்றும் அவள் தாய்மை அடையாது போகவே, எல்லோருக்கும் கவலை ஏற்பட்டுவிட்டது.

டாக்டரிடம் பரிசோதனை செய்துகொண்டு, பல மருந்துகள் சாப்பிட்டு அறுவைச் சிகிச்சை செய்து, எல்லா தெய்வங்களையும் வேண்டி, பத்தியமாகச் சாப்பிட்டு, விரதம் இருந்து பெற்றெடுத்த மகள், அஞ்சனா. அவளுக்குப் பின்னர் வேறு குழந்தைகள் பிறக்காது போகவே, ஒண்ணே ஒண்ணு—கண்ணே கண்ணு என்று அப்பாவும் பாட்டியும் கொண்டாடினார்கள்.

அப்பாவும் பாட்டியும் தன் பக்கம் என்ற துணிவில் அஞ்சனா சின்ன வயதில் இருந்து பலவிதமான சிக்கல் களில் மாட்டிக் கொண்டிருக்கிறாள்.



கடிதம் எழுதுவது அவளுக்குக் கைவந்த கலை.

காய்ச்சல், தலைவலி என்று குழந்தையை வளர்க்கும் போது தாய் படும்பாடு போதாது என்று, அஞ்சனா பெற்றவளுக்குப் பல தலைவலிகளைக் கொடுத்து இருக் கிறாள்.

அவைகளில் சில மறக்க முடியாதவை.

தான் அழகி என்ற பெருமை அஞ்சனாவுக்கு. அதனால் தன்னைச் சுற்றி ஒரு தோழிப் பட்டாளம் சதா மொய்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை.

''உண்மையாகப் பழகுகிறவர்கள்தான் தோழிகள். எல்லோரும் சிநேகிதர்கள் என்று நம்பிவிடாதே!'' என்று அம்மா எத்தனை முறை சொன்னாலும் கேட்டதில்லை.

லீலா, சந்திரா, சரசா, மாதவி என்று ஒரு கூட்டத் துடன் வீட்டுக்குள் வந்து கும்மாளமடிப்பாள்.

லீலாவை அவள் தன் ஆருயிர்த் தோழி என்று நம்பினாள். அந்தத் தோழி தன் மாமன் வீட்டுக்கு விடு முறையைக் கழிக்கப் போயிருந்த சமயம், அஞ்சனா அவளுக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டிருந்தாள். அப்போது அவளுக்கு வயது பனிரெண்டு.

இருவருக்கும் தங்கள் வகுப்புக் கணக்கு ஆசிரியை மஞ்சுளாவைப் பிடிக்காது. அதை மூகாந்திரமாக வைத்துக்கொண்டு மஞ்சுளாவுக்கு ஒரு காதலன் இருப்ப தைத் தான் பார்த்ததாகவும் அடிக்கடி அவர்கள் இருவ ரையும் தான் கடற்கரையில் சந்திப்பதாகவும் ஒரு கடிதம் எழுதிவிட்டிருந்தாள். நகைச்சுவை மிக்க தன் கடிதத்தைத் தோழி படித்துச் சிரித்து மகிழ்வாள் என்று எண்ணியிருந் தவளுக்குப் பலர்த்த அதிர்ச்சி.

லீலா விடுப்பு முடிந்து பள்ளிக்கூடம் வந்து சேர்ந் ததும் முதல் வேலையாக அந்தக் கடிதத்தைக் கணக்கு ஆசிரியர் மஞ்சுளாவிடம் காட்டிவிட்டாள்!

இரண்டு தினங்களுக்குப் பின்னர் தலைமை ஆசிரியரிடம் இருந்து அழைப்பு வந்தது.

தலைமை ஆசிரியை முன்னால் பூனைக்குட்டியாக நடுங்கிப் போய் நின்றாள் வசுந்தரா.

''அப்படி உட்காருங்கள்! அஞ்சனாவின் அம்மா தானே? பெண்ணை அடக்கி ஒடுக்கி வளர்க்கத் தெரியாமல் ரொம்ப இடம் கொடுத்திருக்கிங்க.''

ஒன்றும் புரியாது விழித்தாள் வசுந்தரா.

''எங்கள் பள்ளி ஆசிரியை ஒருவரைப் பற்றி உங்கள் மகள் மிகவும் கேவலப்படுத்தி ஒரு கடிதம் எழுதியிருக்கிறாள். இது எப்பேர்ப்பட்ட குற்றம் தெரியுமா?''

எச்சிலை விழுங்கிக்கொண்டாள் வசுந்தரா. அந்தப் பிரபலமான பள்ளியில் தன் மகள் படித்து, முன்னுக்கு வர வேண்டும் என்று அங்கே இடம் பிடிக்கப் பட்டபாடு அவளுக்கல்லவா தெரியும்!

தூரத்து உறவினரான சித்தப்பாவின் சிபாரிசைத் தேடிக்கொண்டு, அடையாற்றில் இருந்த அவரது பங்களா முன்னறையில் அவர் தரிசனத்துக்காகக் காத்திருந்த அவளுக்கல்லவா புரியும்!

பாடுபட்டு மகளுக்கு அந்தப் பள்ளியில் படிக்க இடம் வாங்கித் தந்திருந்தாள். அதற்கு இப்போது ஆபத்து வந்து விட்டதே!

''இதுமாதிரியான தப்புக்கள் செய்கிற சிறுமிகளை இங்கே நீடித்துப் படிக்க விடுவது எங்கள் பள்ளியின் நற்பெயருக்கு இழுக்காகிவிடும். அதனால், நான் உங்கள் மகளைப் பள்ளியில் இருந்து நீக்கம் செய்ய நினைக்கிறேன்.''

உடல் நடுங்கி மெய்சிலிர்த்துப் போனாள். எத்தனை பெரிய அவமானம்! வேறு எந்தப் பள்ளிக்கூடத்திற்குப்



போனாலும் இந்தச் சங்கதி முன்னே வந்து நிற்குமே! நன்னடத்தைச் சான்றிதழ் கிடைக்காதே!

காலில் விழாத குறை. தலைமை ஆசிரியையிடம் அவள் அன்று கெஞ்சிக் குழைந்ததை நினைத்து நினைத்து, பல முறை வெட்கத்தில் உடல் குறுகிப் போயிருக்கிறாள்.

என்னவோ அது அவளது நல்ல காலம். தலைமை ஆசிரியை முடிவில் ஒப்புக்கொண்டாள்.

''இதுதான் முதலும் கடைசியும். மகளிடம் உள்ள கெட்ட குணத்தை அடக்கி வையுங்கள். புத்தி சொல்லி நல்ல பெண்ணாக வளருங்கள்'' என்று அனுப்பி வைத்தாள்.

இந்தச் சங்கதியைப் பற்றி அவள் கணவனிடம் சொல்லவில்லை. கணபதி நேரே நீதிமன்றத்துக்குப் போகப் போவதாசப் பள்ளிக்கூடத்தில் அமர்க்களம் செய்து விடுவார். தன் பெண் செய்த அடாத காரியம் அவர் கண்களுக்குத் தெரியாது. ''குழந்தை ஏதோ வேடிக்கை செய்ததை இப்படியா பிரமாதப் படுத்துவாங்க'' என்று ஆர்ப்பரிப்பார். எனவே, இந்தச் சங்கடத்தை அவளே சமாளித்து இரகசியமாகச் சிக்கலை விடுவித்து விட்டிருந்தாள்.

கல்லூரிப் படிப்பு முடிந்ததும், தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுக்கொள்ளப் புறப்பட்ட அஞ்சனா, அடுத்ததாக அம்மாவைப் பெரிய ஒரு சிக்கலில் மாட்டிவிட்டாள்.

அந்த நிகழ்ச்சியை வசுந்தரா மறக்கவே முடியாது.

ஓரளவு உறவினர்களிடையேயும் சிநேகிதிகளிடையேயும் அவளுக்கு மகளால் தலைக்குனிவு ஏற்பட்டது உண்மை. ''அதோ போறாளே வசுந்தரா, அவள் பெண் அஞ்சனா செய்த காரியம் தெரியுமோ?'' என்று கல்யாண வீடுகளிலும் மாதர் சங்கக் கூட்டத்திலும் அவளது தலை உருண்டது.

வெட்கத்தையும் வேதனையையும் விழுங்கிக்கொண்டு அவள் வளைய வந்தாள்.

அதற்குப் பின் அஞ்சனாவுக்குக் கல்யாணம் நடக்குமோ என்ற கவலையில் அவள் எத்தனையோ இரவுகள் சரியாகவே உறங்கியதில்லை.

''பொருத்தம் சரியில்லை, பையன் இப்போது திருமணம் செய்துகொள்ளப் பிரியப்படவில்லை, பெண் ரொம்ப உயரம்'' என்று ஏதாவது ஒரு கதையைச் சொன்ன பிள்ளை வீட்டார்கள் நழுவியபோதெல்லாம் தலையணை நனைய வசுந்தரா அழுது தீர்த்திருக்கிறாள்.

''போகட்டுமே. பெண் ஊசியா போயிடுவாள்? அவளுக்குன்னு பிறந்தவன் ஒருநாள் வருவான்'' என்று ஆத்திரத்தில் கொக்கரிப்பார் கணபதி.

''கிடக்கிறாங்க தடிப்பசங்க. இவங்க யாருக்கும் கொடுத்து வைக்கலை. தங்கப் பதுமையாட்டம் பொண்ணு. கேட்டதைக் கொடுத்து நல்லா கல்யாணம் செய்து கொடுக்கச் சம்மதிக்கிறபோதே வேண்டாம்னா போகட்டும்.'' படுக்கை மீது உட்கார்ந்தபடியே பாட்டி புலம்புவாள்.

இருவரும் வாய் திறந்து ஒரு நாளாவது ''அஞ்சனா செய்த காரியம் பிசகு. அதன் பலனை இப்போது அனுபவிக்கிறோம்'' என்று சொன்னதே கிடையாது.

பெண்ணை வைத்துக்கொண்டு ஊறுகாயா போடப் போகிறோம் என்று ஒரு நாள் அவள் கேட்டபோது கணபதி கோபத்தில் கொதித்தெழுந்து விட்டார்.

''என் பெண்ணுக்கு வயசானால் பரவாயில்லை. கல்யாணம் கூடாவிட்டால் போகட்டும். அவள் எங்களோட இந்த வீட்டிலேயே இருக்கட்டும். எனக்கு ஒரு நாளும் என் மகள் சுமையில்லை. இனி அதுமாதிரி ஒரு வார்த்தை பேசாதே'' என்று கத்திவிட்டார்.



''குழந்தையை ஏன் கரிச்சுக் கொட்டறே? அவள் படிப்புக்கும் அழகுக்கும் வேறே ஒரு நல்ல இடம் வராமலா போகும்? கொஞ்சம் பொறுமையா இரு'' பாட்டி முணுமுணுத்தாள்.

பொறுமையாக இருக்கத்தான் வசுந்தரா முயன்றாள். ஆனாலும் மகள் தட்டெழுத்துப் பயிற்சிக்குப் போவதாகச் சொல்லிவிட்டுக் கொஞ்சம் நேரம் கழித்து வந்தால் கூட அவள் நடுங்கிப் போனாள்.

எத்தனை நாள் இப்படி நெருப்பை வயிற்றில் கட்டிக்கொண்டு கவலைப்படுவது? எவனாவது ஒரு நல்ல பையன் கையில் இவளைப் பிடித்துக் கொடுத்துவிட்டால், நிம்மதியாக இருக்கலாமே?

வெள்ளிக்கிழமை தோறும், செவ்வரளிப் பூமாலை சாத்தி துர்க்கையை வழிபட்டாள்.

அவளது பிரார்த்தனை வீண் போகவில்லை. முரளி மருமகனாகக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்றுதான் நினைத்தாள்.

ஆனால், இப்போது?...

அஞ்சனா இன்னமும் சிறு குழந்தையாகவே இருக்கிறாளே... இந்த அதிகப்பிரசங்கித்தனத்தை உதறிவிட்டுப் பொறுப்புள்ள பெண்ணாக வரமாட்டாளா? கடவுளே...

வசுந்தராவின் கண்ணீர் தலையணையில் உதிர்ந்தது. அடக்கமாட்டாது அவளது அடிவயிற்றில் இருந்து எழுந்த விம்மல்களைக் கேட்டுக் கணவன் விழித்துக்கொள்வாரோ எனப் பயந்து, எழுந்து சென்று குளியலறைக்குள் புகுந்துகொண்டு மனம் ஆறுமட்டும் அழுது தீர்த்தாள்.

## 3

**வ**சுந்தரா வெளியே கிளம்பினால் போதும். பச்சைக் குழந்தையைப் போல மாமியார் சிவகாமி அடம் பிடிப்பாள்.

''திரும்பிவர ரொம்ப நேரம் ஆகுமோ? காலம் கெட்டுக் கிடக்கு. தனியா வீட்டிலே இருக்க எனக்குப் பயமா இருக்கு. போன சுருக்கோட திரும்பிடு. கொஞ்சம் காப்பியைக் கலந்து பிளாஸ்கிலே நிரப்பி வச்சுட்டுப் போ. என்னால் எதுவும் செஞ்சுக்க முடியாது. என் உடம்பு தக்கையாப் போயிடுச்சு'' என்று பலவாறு முணு முணுப்பாள்.

வசுந்தரா பேத்தி வீட்டை மேற்பார்வையிடப் போகிறாள் என்ற காரணத்தால் அவள் மவுனமாகினாள். உற்சாகத்தோடு மருமகளை அனுப்பி வைத்தாள்.

''என்னைப் பத்திக் கவலைப்படாதே. நான் யாருக்கும் சட்டுனு கதவைத் திறக்கமாட்டேன். நீ குழந்தையோட வீட்டைத் துப்புரவாச் சுத்தம் பண்ணிட்டு...முருகாயியின் கணவனைக் காவலுக்குப் போட்டுட்டு வா...''

''சரி, அத்தை'' என்று கைப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு வசுந்தரா பாதணிகளைக் காலில் திணித்துக் கொண்டாள்.

மாமியார் அவளைக் கூப்பிட்டாள். ''அது விளை யாட்டுப் பொண்ணு. நம்ம வீட்டிலே இருக்கிறவரை, அடுப்பருகே நான் விட்டதில்லை. அதனாலே வீட்டிலே உப்பு இருக்கா பருப்பு இருக்கான்னுகூட அது தெரிஞ்சு கொண்டதில்லை... ஒருசமயம் வீட்டுச் சாமான் வாங்கிப் போட மறந்து பெங்களூருக்குப் புறப்பட்டிருக்கலாம். எதுக்கும் நீ சாமான் அறையைத் திறந்து, எல்லாம் இருக் கான்னு பார். ஏதாவது தட்டுப்பாடாக இருந்தால் வாங்கிப் போடு. இந்தா விபூதி. சாமி படத்திலே நூறு ரூபாய் என் பணம் இருக்கு. எடுத்துட்டுப் போய் வேண் டியதை வாங்கி வை.''

தனது சேமிப்பில் இருந்து பேத்தி வீட்டுக்குத் தேவை யானதை வாங்கத் தாராளமாக எடுத்துக் கொடுத்தாள்.

பாட்டி சிவகாமிக்குப் பேத்திமீது அப்படி ஒரு பாசம்.



ஆனால், அந்தப் பேத்தி எப்படிப்பட்டவள் என் பதைத் தெரிந்து கொண்டால்...?

அப்படித் தெரிந்தால்கூடப் பாசம் அவளது புத்தியை மறைக்கும். ''என்னவோ விளையாட்டுப் போக்கா எழுதி விட்டிருக்காள். அந்தத் தடியன் ஏன் பரிசுகளை எடுத் துட்டு வந்து நம்ப குழந்தையோட மனதிலே கலவரத்தை உண்டாக்கணும்?'' என்று பாட்டி பேத்திக்குத்தான் பரிந்து கொண்டு பேசுவாள்.

தலையை அசைத்துவிட்டு வசுந்தரா வேகமாகக் கிளம்பினாள்.

வீட்டுக்குக் காவலாக இருக்கக் காலையிலேயே அவள் அனுப்பிவிட்டிருந்த வேலைக்காரியின் கணவன் கருப்பன் பசியோடு அவள் வரவிற்காகக் காத்திருப்பான். அவன் சாப்பாட்டுச் செலவுக்கு ஏதாவது கொடுத்து அவனை ஓட்டலுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவன் உபயோ கத்திற்குப் பின்பக்கத்துக் கழிவறையைத் திறந்துவிட வேண்டும். மளிகைச் சாமான்களை வாங்கி டப்பாக் களில் நிறைத்து வைக்க வேண்டும். இதையெல்லாம்விட ஒரு முக்கியமான காரியத்தை அவள் முதலில் செய்து முடிக்க வேண்டும்.

மகளின் இரும்பு பீரோவை ஒழுங்கு செய்ய முதல்நாள் மாலை அவள் திறந்தபோது இரண்டாவது தட்டிலிருந்த பரிசுப் பொட்டலத்தைக் கவனித்தாள். முரளி தன் மனைவிக்கு ஏதோ ஆசையா வாங்கித் தந்திருக்கிறான். அவர்களது அந்தரங்கத்தில் தலையிடக் கூடாது என்று தாறுமாறாகக் கிடந்த துணிகளை ஒழுங்கு செய்துவிட்டு அதைத் தொடாது வந்திருந்தாள்.

கடிதத்தைப் படித்த பின்தான் அவளுக்கு உண்மை தெரிய வந்தது. முதல்வேலையாக அந்தப் பரிசுப் பொட்ட லத்தை இரும்பு பீரோவில் இருந்து அவள் அப்புறப்படுத்த வேண்டும்.

முரளி பார்த்துவிட்டால் பெரிய வம்பாகிவிடும்.

என்னதான் பரந்த மனமுடைய கணவனாக இருந்தாலும் தன் மனைவிக்கு யாரோ ஒருவன் சேலை, பவுடர் போன்ற பரிசுகளைக் கொடுப்பதை எந்தக் கணவனும் பொறுத்துக்கொள்ள மாட்டான்.

நல்லவேளை, அஞ்சனா அவசரத்தில் எழுதித் தபாலில் போட மறந்து கடிதத்தை புத்தகத்திற்குள் செருகி வைத்திருந்ததை முரளி பார்க்கவில்லை. வீணாகக் கணவன் மனைவிக்குள் எழும் கலவரத்தை அவன் இடைபுகுந்து தடுப்பதில் தவறு இல்லை.

பீரோவைப் பரபரப்புடன் திறந்தாள். அந்தப் பரிசுப் பொட்டலத்தைக் கோபத்துடன் வெளியே எடுத்து மேசை மீது வைத்தாள்.

என்ன அக்கிரமம் இது! கல்யாணத்தின்போது பெற்றோர்களின் சீராக வாங்கித் தந்த இரும்பு பீரோ அது. வாங்கப் பணம் கையைக் கடித்தபோது, பாட்டி தன் சேமிப்பில் இருந்து ஆயிரம் ரூபாய் தந்து உதவினாள்.

எப்படியாவது பேத்தி சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்ற நல்லெண்ணம் அந்தப் பாட்டிக்கு.

கடன்பட்டாவது கல்யாணத்தை நன்றாகச் செய்து, பெண்ணை வாழவைக்க வேண்டும் என்ற தவிப்பு பெற்றவளுக்கு.

எல்லாவற்றையும் நாசமாக்குவது போல இந்தப் பெண் இப்படி ஒரு காரியம் செய்துகொண்டிருக்கிறாளே?

தனது ஆட்டங்களை மாமியார் கண்டுகொண்டு தடுக்கப் போகிறாளே என்ற பயத்தினால்தான், திட்டம் போட்டு அவளை வெளியேற்றிவிட்டிருக்கிறாள்.

ஆனால், பிறந்த வீட்டில் அஞ்சனா வந்து சொன்ன சங்கதியே வேறு.



தன் மாமியாருக்கும் முரளிக்கும் சண்டை, கொஞ்ச நாள் பாவம் கிழவி தன் மகளோடு போய் நிம்மதியாக இருக்கட்டும்னு தான் அனுப்பினதாகக் கதை சொன்னாள்.

அஞ்சனாவின் பேச்சை அப்பொழுதே அவள் நம்பவில்லை. பழகுவதற்கு இனியவளாகத் தெரிந்த முரளியின் அம்மா மகனுடன் சதா சண்டை போடுவாள் என்ற கூற்றை ஏற்கவே முடியவில்லை.

அவள் வீட்டில் என்ன நடந்ததோ? எதற்காக அவள் மாமியார் வெளியேறினாளோ...? மேலே ஆராய்ந்து கொண்டிருக்க வசுந்தராவுக்குப் பொழுது இருக்கவில்லை.

ஆனால், கணபதி தம் மகளின் பேச்சை நம்பினார்.

சில வயதான பெண்களுக்கு, தன் மகன் கல்யாணம் செய்து கொண்டதும் பொறாமை ஏற்பட்டுவிடுகிறது. இதுவரை அம்மா என்று அன்புடன் ஓடிவந்த மகன், இப்போது பெண்டாட்டி பக்கம் ஒட்டிக்கொண்டு விடுகிறானே என்ற ஆத்திரம். அதைக் காணச் சகிக்காது. சதா சண்டை போட்டு அமைதியான வாழ்வை நாசமாக்குகிறார்கள். இப்படிப்பட்ட பெண்களைக் கொஞ்ச நாள் தூர ஒதுக்கி வைப்பதுதான் நல்லது. ''உன் மாமியார் கோவிச்சுக்கொண்டு பெண் வீட்டுக்குப் போயிட்டதைப் பத்திக் கவலைப் படாதே! அங்கேயே கிடக்கட்டும்'' என்று அப்பா அவள் பக்கம் பரிந்து பேசினார்.

''என்னைப் போல் எதிலும் தலையிட்டுக்காம ஒரு பக்கம் விழுந்து கிடக்கத் தெரியவில்லை, அந்தக் கிழவிக்கு. கிடக்கான், விட்டுத்தள்ளு.'' பாட்டி பேத்தியைத் தட்டிக் கொடுத்தாள்.

கடைத்தெருவில் பேசிக்கொண்டிருந்த அந்த வம்பிகள் சொன்னது அத்தனையும் உண்மை!

யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல, அஞ்சனா தன் வாழ்க்கையைத் தானே குலைத்துக்கொள்ள வழி தேடிக்கொண்டிருக்கிறாள்.

வசுந்தரா கட்டாயம் இடைபுகுந்து செயல்பட வேண்டும். எனவே, பரிசுப் பொட்டலத்தை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு ஒரு பக்கம் வைத்தாள்.

கடையில் இருந்து கருப்பன் சாமான்களுடன் வந்து பில்லையும், சில்லறையையும் தந்தான்.

சாமான்களைப் பிரித்து எடுத்து, அந்தந்த டப்பாவில் போட்டு ஒழுங்காக வைத்துவிட்டு, பிளாஸ்டிக் பையுடன் அவள் கிளம்பினாள்.

அதற்குள் பொழுது அமிழத் தொடங்கி விட்டது.

மாமியார் சிவகாமி வழக்கம் போல நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் கையில் இருந்த மறு சாவியால் வாயிற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவள் ஓசைப் படாது நடந்து சென்று தன் அறைக்குள் இருந்த ஒரு மரப் பெட்டிக்குள் அந்தப் பிளாஸ்டிக் பையைப் போட்டு மூடி விட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டாள்.

ஆனால், அவ்வளவு சுலபமாக ஆரம்பமாகிவிட்டிருக்கும் அந்தச் சிக்கலைக் கை கழுவி உதறமுடியாது என்பது அவளுக்குத் தெரியும்.

## 4

**வெ**ள்ளிக்கிழமை மாலை.

விநாயகர் கோவிலில் வழக்கம் போலக் கூட்டம்.

அர்ச்சனையை முடித்துக்கொண்டு பிரசாதக் கூடையுடன் வெளியே வந்த வசுந்தரா, தீயை மிதித்தவள் போல ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள். நெஞ்சு படபடத்தது. மூச்சுத் திணறியது. கீழே விழுந்து விடாதிருக்கச் சட்டென்று கோயில் மதில் சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டாள்.



பேரப் பிள்ளையின் கையைப் பிடித்துக்கொண்டு கோவிலுக்குள் நுழைந்த மணிவண்ணன் அவளைப் பார்க்காதது நல்லதாகிவிட்டது.

அவர் கவனித்துவிட்டிருந்தால் அவமானத்தில் சுருங்கி, வதங்கிப் போய்விடுவாள்.

அந்தச் சம்பவத்தின் பாதிப்பை முழுமையாக அனுபவித்து மனம் நொறுங்கிப்போனவள் அவள் ஒருத்திதானே!

மூன்று ஆண்டு காலத்திற்குப் பின்னரும் அன்று கண்ட மேனி அழியாத கோலத்தில்தான் மணிவண்ணன் தென்பட்டார். வாட்டசாட்டமான அதே தோற்றம் பட்டுக்கரைவேட்டி, மெல்லிய வெள்ளை மல் ஜிப்பா, அதற்குள்ளே மின்னும் மைனர் செயின். வெள்ளிக் கம்பி ஓடிய அடர்ந்த கிராப்பு, காதோரத்திலே கிருதாக்கள். நறுக்கு மீசை, தடிமனான மூக்குக் கண்ணாடி. நிமிர்ந்த நடை.

மனிதன் கடுகளவும் மாறவில்லை.

ஆனால் அவள்?...அந்த அதிர்ச்சி தந்த அடியில் உருக்குலைந்துதான் போய்விட்டிருந்தாள்.

பத்து வயதை ஒரே நாளில் எட்டிப் பிடித்துவிட்டது போன்ற ஒரு முதுமைப் பிடியில் அவள் ரொம்பவே மாறி விட்டிருந்தாள்.

முன்நெற்றிக் கூந்தல் பட்டையாக வெளுத்து, முகத்திலே சுருக்கங்கள் தெரிய, உடல் ஒடுங்கிவிட்டிருந்த அவளை அவர் இப்போது பார்த்தாலும் ஒரு சமயம் அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்.

அவரைக் குற்றம் சொல்லிப் பயன் இல்லை.

அந்தச் சம்பவத்திற்குக் காரணம் அவளது அருமை மகள் அஞ்சனா தானே?

வீட்டுக்கு வந்ததும் அவளுக்கு வேலையே ஓடவில்லை. மீண்டும் மீண்டும் அவளது நினைவில் மணிவண்ணனின் கடும் முகம்.

இப்படித்தான் ஒரு வெள்ளிக்கிழமை மாலை...

வேலையில் இருந்து திரும்பி வந்திருந்த கணவனுக்கு டிபன் உபசரிப்புச் செய்துகொண்டிருந்தாள் வசுந்தரா.

வாயிற்கதவு தட்டப்பட்டது.

வேகமாகச் சென்று திறந்தவளுக்குத் திகைப்பு. தெருவை அடைத்துக்கொண்டு நின்ற படகுக் காரையும் வாயிற்படியருகே வந்து நின்ற வாட்டசாட்டமான ஜிப்பா காரரையும் கண்டு அவள் குழம்பிப் போனாள்.

''மிஸ் அஞ்சனா கணபதியின் வீடு இதுதானே? நீங்கள் அவளுடைய தாயாரா?'' ஏளனமாக ஒலித்த அவரது குரல் மேலும் அவளைக் கலவரப்படுத்தியது.

டிபனை முடித்துக்கொண்டு கை கழுவிவிட்டு எழுந்திருந்த கணபதி துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டே வந்தார்.

''யாரு வந்திருக்கிறது? உள்ளே வந்து உட்காரச் சொல்லக்கூடாதா?''

''உட்கார்ந்து பேசவேண்டிய சங்கதி. அதுக்குத்தான் வந்திருக்கேன்'' காரமாகப் பேசிய அந்த மனிதருக்கு வழி விட்டு ஒதுங்கிக்கொண்டாள், அவள்.

''சபரிநாதன் அன் கோ என்கிற நிறுவனத்தைப் பத்திக் கேள்விப்பட்டிருப்பீங்க. அதன் டைரக்டர் நான் தான். மணிவண்ணன்னு பேர்.''

கணபதி சுட்டிக்காட்டிய பிரம்பு நாற்காலியை அடைத்துக்கொண்டார்.

''யார் அது?'' அறியும் ஆவலை அடக்கமாட்டாது, தன் அறையில் இருந்து தலையை நீட்டினாள் சிவகாமி.



''உங்க பெண் அஞ்சனா வீட்டில்தானே இருக்கிறாள்?'' ஏளனமாக மறுபடியும் கேட்டார் மணிவண்ணன்.

''ஆமாம். ஏன் கேட்கிறீங்க?'' வசுந்தரா சற்றுக் கோபத்துடன் வந்தவரை முறைத்தாள்.

இவர் பெரிய பணக்காரராகப் படகுக் காரில் வந்து இறங்கட்டும். ஆனால், அவர்கள் வீட்டிற்குள் வந்து அதிகாரமாக அவர்களை அதட்டிப் பேச என்ன உரிமை?

''அவளைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா? உங்கள் எதிரிலேயே கேட்க விரும்பறேன்.''

வசுந்தராவுக்குப் புரிந்துகொள்ள முடிந்தது. கலவரத்துடன் பின் அறைக்கு விரைந்தாள்.

மணிவண்ணன் வீட்டுக்குள் நுழைந்ததைப் பார்த்துவிட்டு அஞ்சனா ஒரு சிறு பூனைக்குட்டியைப் போல பயத்துடன் சுவரோரமாக ஒடுங்கிக்கொண்டு நின்றாள்.

''வா, கூடத்துக்கு வந்து அந்தப் பெரிய மனிதர் கேட்கப்போற சங்கதிக்குப் பதில் சொல்லு. கோழை போல இருந்து என் கழுத்தை அறுக்கத்தானே நீ பிறந்திருக்கே.'' ஆத்திரத்தை அடக்கமாட்டாது தாய் சீறினாள்.

அஞ்சனா தோள்பட்டைகளைத் குலுக்கிவிட்டு, கண்களில் கோபத்தில் நீர்புரள, மெல்லக் கூடத்திற்கு வந்தாள்.

குழல் விளக்கொளியில் அவளை ஏற இறங்கப் பார்த்தார் மணிவண்ணன்.

சட்டென்று பேசமுடியாத ஒரு அதிர்ச்சி. 'பரவாயில்லை, பையன் அழகான ஒரு பெண்ணைப் பார்த்துத் தான் ஆசைப்பட்டிருக்கிறான்' என்று மனதில் ஒரு எண்ணம் போலும்.

ஒருகணம் மவுனமாக இருந்தார். பின்னர் கையோடு, கொண்டு வந்த சிறு தோல் பையைத் திறந்து ஒரு கட்டுக் கடிதங்களை எடுத்தார்.

குண்டு குண்டான அந்தக் கையெழுத்தைப் பார்த்ததுமே தாயின் குடல் புரண்டது.

இந்தப் பெண் இத்தனை கடிதங்களையும் இவரது மகனுக்கு எழுதிவிட்டிருக்கிறாளா?...

மனிதன் எதற்காக இவைகளை எடுத்துக்கொண்டு இங்கே ஓடி வந்திருக்கிறார்?

''ஏம்மா, இதுகளை நீதானே சாரங்கனுக்கு எழுதினே?'' கேட்டார்.

அஞ்சனா தன் தகப்பனைத் தயக்கமாகப் பார்த்தாள். பாட்டி பக்கம் பாசத்தில் தவித்த ஒரு பார்வையை ஓட விட்டாள்.

அம்மாவின் கடுமையான முகத்தைப் பாராது, ''ஆமாம், நான் உங்க மகனுக்கு எழுதின கடிதங்கள் தான். அவர் எனக்குப் பதில் போட்ட கடிதங்கள் என்கிட்டே பத்திரமா இருக்கு.''

வசுந்தரா அதிர்ந்து போனாள்.

தாய் அறியாத சூல் உண்டோ? ஆனால், அம்மாவுக்குத் தெரியாது அஞ்சனா அத்தனை காதல் கடிதங்களை அவர் மகனுக்கு எழுதியிருக்காளே? கலங்கிப் போனாள்.

ஆனால் கணபதி தன் மகள் மீது கோபப்படுவதற்குப் பதில் வந்தவரை வெகுண்டார்.

''இரண்டு பேரும் பிரியப்படறாங்க. இப்போ நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' அதட்டிக் கேட்டார்.

''என் பேச்சுக்குக் கட்டுப்படுற பிள்ளையாக இருந்தால் என்னென்னவோ செய்திருப்பேன். இவளைக் கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் உயிரே போய் விடும் என்று பயமுறுத்தறான். தாயில்லாப் பிள்ளை. என் அத்தனை சொத்துக்கும் ஏக வாரிசு. கடையில் கூட கன்னியைக் கொள்ளலாம்னு நம்ப ஐதீகம் சொல்லறதால, நமக்குள்ளே இருக்கிற ஏற்றத்தாழ்வை மறந்துட்டு வந்திருக்கேன்.'' வெறுப்பாகப் பேசினார் மணிவண்ணன்.



அப்படி ஒரு சூழ்நிலையில்தான் அஞ்சனாவுக்குக் கல்யாணம் பேசி முடிவாகியது.

மிகத் துரிதமாக நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ள விரும்பினார் மணிவண்ணன்.

தமது தகுதிக்குத் தக்கபடி அதைச் சிறப்பாகப் பெண் வீட்டாரால் நடத்தித் தர இயலாது என்று தாமே நடத்த முன்வந்தார்.

'வசுந்தரா! நான் கேள்விப்பட்டது உண்மைதானா! 'சபரி அண்ட்கோ' வின் டைரக்டர் மணிவண்ணன் உங்கள் வீட்டுச் சம்பந்தியா வரப்போறாராமே?''

''நிசமாத்தானே சொல்றே? ஆரத்தி மண்டபத்திலே நிச்சயதார்த்தமாம். கலையூர் சகோதரிகளின் கச்சேரியாம். நீ ரொம்பக் கொடுத்து வைத்தவள். பையன் பணக்காரன் மட்டுமில்லே; பார்க்க நல்லாவே இருக்கான்.''

''வசுந்தராவுக்கு அடித்த யோகத்தைப் பார்த்தியா? ஒரு பெரிய தொழில் அதிபர் மகன் இவளுக்கு மருமகனா வரப்போறான்''

இப்படிப் பல விசாரிப்புகள். பேச்சுகள்.

நிச்சயதார்த்தம் அமர்க்களமாக நடந்தேறியது.

மணிவண்ணன் தமது மனைவி விட்டுப்போன நகைகளில் இருந்து வைர அட்டிகையையும் வளையல்களையும் பரிசாக வருங்கால மருமகளுக்கு வழங்கினார்.

அதற்குப்பின் சாரங்கனுடன் அவர்கள் வீட்டு பென்ஸ் காரில் அஞ்சனா சுற்றாத இடம் பாக்கியில்லை.

''அதோ போறாளே, அவள்தான் எங்கள் தெரு கணபதியின் மகள், ரொம்பச் சாதாரண வீட்டைச் சேர்ந்தவள். அவளுக்கு வந்திருக்கிற யோகத்தைப் பார். சரியான புளியங்கொம்பைப் பிடிச்சுட்டாள்.''

''ஏற்கனவே வசுந்தரா யார்கிட்டேயும் அதிகம் வச்சுக்க மாட்டாள். இப்போ பெரிய இடத்து சம்பந்தம். முகம் கொடுத்து நம்பகிட்டே பேசுவாளா?',

இப்படியெல்லாம் பலர் பேசினார்கள்.

அஞ்சனாவின் அதிர்ஷ்டத்தை எண்ணி வயிறு எரிந்தனர்.

அடிக்கடி மணிவண்ணன் அவளை அழைத்து வீட்டில் விருந்து கொடுத்தார்.

''அஞ்சனா அம்மாவைக் கூட்டிவர ஐயா கார் அனுப்பிச்சிருக்கார்.''

நாளைக்கு ஒரு தடவையாவது அவளுக்கு வருங்கால மாமனாரிடம் இருந்து அழைப்பு வரத்தொடங்கியது.

முதலில் மிகவும் ஆர்வத்துடன் கிளம்பிக் கொண்டிருந்தவள், பின்னர் மெல்ல மறுப்புத் தெரிவிக்கத் தொடங்கினாள். தலைவலிக்கிறது, முதுகுவலி, லேசான காய்ச்சல் என்று பல பொய்த் தகவல்கள் அனுப்பினாள். பிறகு போவதை நிறுத்திக்கொண்டு விட்டாள்.

அந்தத் தை மாதத்தில் கல்யாணம் நடக்கவிருந்தது.

அதையும் தமது கவுரவத்துக்குத் தக்கபடி விமரிசையாக நடத்தத் திட்டமிட்டிருந்தார் மணிவண்ணன்.

பெரிய இடத்துச் சம்பந்தம். நாம் கொடுத்தா நிறையப் போகிறது என்று வசுந்தரா சும்மா இருக்கவில்லை.



பெண்ணுக்குத் தரவேண்டிய சீர்வரிசைக்குத் தேவையான பாத்திரங்களைத் தேடி வாங்கி எடுத்துக்கொண்டு பதைபதைக்கும் வெயிலில் ஆட்டோவில் வந்து வீட்டு வாசலில் இறங்கினாள்.

பின்னாலேயே வந்து நின்ற பென்சில் இருந்து மணிவண்ணனும் இறங்கினார். அவர் கோபாவேசமாகக் காணப்பட்டார்,

'வாங்கோ'' என்று உபசரித்தபடி உள்ளே ஓடினாள் வசுந்தரா. அவளுக்குக் கையும் காலும் பதறின. ''உட்காருங்க.'' உபசரித்தாள்.

''அவர் வீட்டில் இல்லை. அத்தை இருக்காங்க. கூப்பிடறேன். அஞ்சனா தன் தோழி வீட்டுக்குளிருந்துக்குப் போயிருக்காள். நல்ல வெயில்ல புறப்பட்டு வந்திருக்கீங்க. குளிர்ச்சியா எலுமிச்சம்பழ சர்பத் கொண்டு வர்றேன்.''

''அதெல்லாம் அவசியம் இல்லை, பெண்ணைப் பெத்த தாயார் நீங்கள் இருப்பதே போதும். சங்கதியைச் சுருக்கமா சொல்லிட்டுப் போக வந்திருக்கேன்.'' ஆத்திரத்தில் ஒலித்த அவரது குரலைக் கேட்டு அரைகுறைத் தூக்க மயக்கத்தில் இருந்த சிவகாமி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து கூடத்திற்கு வந்துவிட்டாள்.

''பெரியம்மா! நீங்களும் கேட்டுக்கொள்றது ரொம்ப நல்லது. நான் இந்தக் கல்யாணத்தை நிறுத்த உத்தேசித்து விட்டேன்.''

''என்னங்க? இப்படி ஒரு கல்லைத் தூக்கித் தலையில் போடுறீங்க?'' அழுகையில் குரல் அடைக்கத் தடுமாறினாள் சிவகாமி.

''இதுக்குக் காரணம் என்னன்னு சொல்லலாமில்லையா?'' கிணற்றில் இருந்து பேசுவதுபோல, வசுந்தரா கலவரத்துடன் கேட்டாள்.

நெஞ்சு தீவிரமாகத் துடிக்க, உடல் முழுவதையும் வியர்வை கப்ப, வீடே தட்டாமாலை ஆடுவது போன்று பிரமித்துப் போய், தாழ்வாரத்தின் தூணைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

'கல்யாணத்தை நிறுத்திவிட்டாராமே! ஏன்? ஏன்?' அவளது நெற்றிப் பொட்டுகளில் விண்விண் என்று ஒரு வேதனை.

''உங்கள் பெண்ணுக்கு மாமனாரைப் பிடிக்கவில்லை. ஆனால், அவர் பெத்த மகனைப் பிடிக்கிறது. அவர் பாடு பட்டுச் சேத்து வச்சிருக்கும் சொத்து பிடிக்கிறது'' உறுமினார் ஆத்திரத்துடன்.

''உட்காருங்கள். கோபப்படாமல் நிதானமா என்ன நடந்ததுன்னு சொன்னாக்க நல்லாயிருக்கும்.'' சிவகாமி குழைவாகக் கேட்டாள்.

''நீங்களே வாசிச்சுப் பார்த்துக்கோங்க. இந்தக் கடிதத்தை என்மகன் என்கிட்டே இன்னிக்குக் காலையிலே கொடுத்தான். இதைப் படிச்ச பிறகு, இந்த வீட்டுச் சம்பந்தமே எனக்கு வேண்டாம்னு தீர்மானம் ஏற்பட்டுடுச்சு. நேத்து முளைச்ச ஒரு பொடிக்குட்டி...இவள் வந்து...'' மேலே பேச முடியாது ஆத்திரத்திலே தனது சட்டைப் பையில் இருந்த ஒரு கடிதத்தை எடுத்து மேசை மேல் போட்டார்.

''உங்கள் கணவருக்கு போனில் த்கவல் சொல்லிட றேன். கல்யாணம் நின்னுபோனதாலே பெண்ணுக்குப் போட்ட வைர நகைகளை நீங்கள் திரும்ப தந்துடணும். பரிசச் சேலை வேணுமானால் வச்சுக்கிடட்டும். அக்கறையில்லை. நடக்கவிருந்த கல்யாணம் நின்று போய்விட்டதுன்னு ஒரு செய்தியைப் பத்திரிகையில் வேண்டுமானால் விளம்பரம் செய்துடறேன்.''

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் வசுந்தரா. ''வேண்டாம். பத்திரிகையில் போடத் தேவையில்லை. உங்கள் வார்த்தைகளே எங்களுக்குப் போதும். என் கணவரிடம் பேசி, உங்களது பொருள்களை முறையா உங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்கிறேன்'' என்றாள் பரபரப்புடன்.



வந்ததில் இருந்து உட்காரப் பிடிக்காது நின்று கொண்டே பேசிய மணிவண்ணன், புயல் வேகத்தில் காரில் கிளம்பிப் போய்விட்டார்.

அவர் வைத்துவிட்டுப்போன கடிதத்தை எடுத்து மெல்லப் பிரித்தாள் வசுந்தரா.

''அன்புள்ள சாரங்கனுக்கு,

பல தடவைகள் நான் உங்களிடம் நேர்ல சொல்ல முயன்றேன். வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதைவிடத் துணிவு இல்லாததால் கடிதம் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

தங்களது தந்தையைப் பற்றிச் சமீபத்தில் நான் அறிந்து கொண்ட சில தகவல்கள் என் மனதை மிக்க வேதனைப்படுத்தி விட்டிருக்கிறது. சாதாரண ஒரு ஊழியராக ''சபரி அண்ட் கோ''வில் சேர்ந்த உங்கள் தந்தை முடிவில் அதனுடைய முதலாளியைக் கவிழ்த்து, வியாபாரத்தைத் தமதாக்கிக்கொண்டுவிட்ட ஒரு நய வஞ்சகர் என்று பேசப்படுகிறது. நேர்மையாக வளர்க்கப் பட்ட எனக்கு இந்தச் செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்து விட்டிருக்கிறது.

அடுத்ததாக நான் கேள்விப்பட்ட செய்தியை நான் ஓரளவு நம்புகிறேன். உங்கள் தந்தை நடவடிக்கையில் மோசமானவர் என்று என் தோழியர் வீட்டில் பேசிக் கொள்கிறார்கள். அது உண்மை என்பதை அவர் நடந்து கொள்ளும் விதம் நிரூபிக்கிறதால், நான் மிகவும் கலங்கி விட்டிருக்கிறேன். உங்கள் வீட்டுக்கு நான் வரும்போது அவர் என்னிடம் சிரித்துப் பேசும் முறை என்னை மிகவும் பயமுறுத்துகிறது. மேலும் கீழும் என்னைப் பார்க்கும் பார்வை திகில் கொள்ளச் செய்கிறது.

அவர் என்னிடம் காட்டும் பரிவு, ஒரு மருமகளிடம் மாமனார் காட்டும் அன்பாக எனக்குத் தோன்றவில்லை. அதனால் நமக்குக் கல்யாணம் ஆனதும் நாம் உடனடியாகத் தனிக் குடித்தனம் போய்விட வேண்டும். ஏற இறங்க முறைக்கிற மாமனாருடன் ஒரு கணம் கூட என்னால் உங்கள் வீட்டில் வாழ முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். உங்களுக்கு வியாபாரத்தில் சேரவேண்டிய பங்கைப் பிரித்துக்கொண்டு தனியே நீங்கள் வாழ்க்கையைத் தேடிக் கொள்ள முயன்றால் உங்கள் தந்தையால் நமக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படாது. சிந்திக்கவும். உடனடியாகக் கடிதத்தைக் கிழித்துப் போட்டு விடவும். அன்புள்ள அஞ்சனா.''

''அப்படி என்னதான் எழுதியிருக்கா அஞ்சு? விவரமா சொல்லேன்.'' பாட்டி பதறினாள்.

''நீங்களே படிச்சுப் பாருங்கோ'' என்று மாமியாரிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றவள் தாங்க முடியாது அழுகையில் குலுங்கினாள். வரப்போகும் பயங்கரமான அவமானத்தை எண்ணி மனம் உடைந்து விம்மினாள்.

கணபதி அந்தச் செயலுக்காகத் தன் மகளைச் சாடவேயில்லை. ''உண்மையைச் சொன்னாள் என் மகள். அதை ஏற்கத் துணிவில்லை அந்த அயோக்கியனுக்கு... விட்டுத் தள்ளு'' என்றார் அசட்டை கலந்த கோபத்தில்.

அதோடு மாப்பிள்ளை வீட்டார் நகைகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டார்.

அத்துடன் எல்லாம் நின்றுவிடவில்லை.

அதற்குப் பின்னர் தான் வம்புகள் தலையைத் தூக்கின.

''தெரியுமா உனக்கு சங்கதி? அஞ்சனாவுக்கு நடக்க இருந்த கல்யாணம் நின்னுபோச்சே. ஏன் என்று விவரம் தெரியுமா? அஞ்சனாவுக்கு ஏற்கனவே ஒரு சிநேகிதன் இருந்தான். நெருக்கமாகப் பழகி இந்தப் பெண் இக்



கட்டான நிலையை ஏற்படுத்திக்கொண்டு, யாரோ டாக்டரிடம் சென்று, கருச்சிதைவு செய்து கொண்டு விட்டிருக்கிறாள். மணிவண்ணன் என்ன சாதாரண மனிதனா?பெரிய வியாபாரி. நாலு பேரோட பழகுகிறவர். அவர் காதில் பட்டுவிட்டது அந்தஸ்தை விட்டுக்கொடுக்கலாம். இது மாதிரி அசிங்கத்தை விட்டுக்கொடுக்க முடியுமா? உனக்கு நான் வேணுமா, அந்தப் பெண் வேணுமான்னு மகனிடம் கேட்டிருக்கார். என்ன இருந்தாலும் பெற்றவன் ரத்த பாசம் விட்டுப் போகுமா? கண்ணின் மணி போல மகனை வளர்த்த தந்தையாச்சே? காதலாவது கத்தரிக்காயாவதுன்னு பின்னை முடிவில் தந்தை பேச்சுக்குக் கட்டுப்பட்டு விட்டான். கல்யாணம் நின்னு போச்சு''

''எத்தனை பெரிய அவமானம்? எல்லாம் வீட்டுக்குத் தானே! உண்மையும் அதுதானே? நடத்தை சரியில்லாத பெண்ணை எவன் கட்டுவான்?'' வாய் கூசாது பேசினார்கள்.

அதற்குப்பின் தன் மகளுக்குக் கல்யாணம் நடக்குமா என்று வசுந்தரா வேதனையில் தேய்ந்து உருகிக் கொண்டிருந்தாள்.

அஞ்சனா காதல் தோல்வியில் மனமுடைந்து அழுது கரைந்து கொண்டிருந்தாள்.

சாரங்கன் சில மாதங்களில் அப்பா பார்த்து முடித்த ஒரு பெரியஇடத்துப்பெண்ணுக்கு மாலையிட்டுவிட்டான்.

அந்த மங்களகரமான சங்கதி, அமர்க்களமான திருமணப்படங்களுடன் பத்திரிகைகளில் வந்திருந்தது.

ஆரம்பத்தில் அவளும் தன் மகளின் பேச்சை நம்பி விட்டிருந்தாள்.

பின்னர், அது தவறு, பொறாமை பிடித்தவர்கள் செய்த சூழ்ச்சி என்று தெரிய வந்தபோது, அவள் அடைந்த துயரம் கொஞ்சநஞ்சமல்ல.

கோவிலில் மணிவண்ணனைப் பேரனுடன் பார்த்த போது தன் மகள் இழந்துவிட்ட ஒரு நல்ல வாழ்க்கையை நினைத்து அவளால் வருத்தப்படாதிருக்க முடியவில்லை.

## 5

இரண்டு தினங்களுக்குப் பின்...

கூடத்தில் பேச்சுக் குரலைக் கேட்டு, உள்ளேயிருந்து வந்தாள் வசுந்தரா.

பெங்களூருக்குப் போயிருந்த மருமகன், மகள் இரு வருடன் பாட்டியும், தந்தையும் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

சிரிப்பொலியில் கூடம் அதிர்ந்து போனது.

மகளைக் கண்ட மகிழ்ச்சியில் கணபதியின் குரல் கூரை முகட்டை எட்டியது. இடையே புகுந்து ஏதோ இரைந்து கத்திக் கொண்டிருந்தாள் பாட்டி.

முரளி தன் அலுவலத்தின் நினைப்பு இன்றி உட்கார்ந் திருந்தான்.

எரிச்சலை அடக்கிக்கொண்டு "வாங்கோ" என்று மருமகனைப் பார்த்து உபசாரமாகத் தலையை அசைத் தாள் வசுந்தரா.

"எனக்குப் பேத்தி என்ன வாங்கிட்டு வந்திருக்கு பாத்தியா? இந்தக் கம்பளி சால்வையை மைசூரில் இருந்து வாங்கிட்டு வந்திருக்கா. பாவம், குழந்தை" வாயெல்லாம் பல்லாகத் தன் கையில் இருந்த வெள்ளை காஷ்மீர சால்வையைக் காட்டினாள் சிவகாமி.



"எனக்குச் சந்தணப் பேப்பர் வேயிட்." அப்பா மெல்லச் சிரித்தார்.

"உங்களுக்கு இந்தச் சந்தணப் பெட்டியும் ஊதுவத் தியும் வாங்கிட்டு வந்திருக்கேன் அம்மா." மேசை மேல் வைக்கப்பட்டு இருந்த பொட்டலத்தைக் காட்டினாள், மகள்.

பற்களைக் கடித்துக்கொண்டாள் வசுந்தரா. இதென்ன ஊதாரித்தனம்?

எங்கேயாவது ஊருக்குப் போய்த் திரும்பும்போது ஒவ் வொரு முறையும் உறவினர்களுக்கு ஏதாவது வாங்கி வர வேண்டும் என்ற நிர்ப்பந்தமா? பண்டிகைகளின் போது ஏதோ ஒரு சிறு பொருளை ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்வது முறை. இந்த விலைவாசியில் அதுகூடத் தேவை யில்லாத பழக்கம். இந்தப் பெண் பணத்தின் அருமை தெரியாது, கணவனை ஆண்டியாக்குகிறாளே!

"காப்பி டிபன் சாப்பிட வர்றீங்களா?" ஒப்புக்காகக் கேட்டாள். உண்மையில் அவர்களது திடீர் வரவை அவள் அப்போது எதிர்பார்க்கவில்லை. காலை வேளை வேலை களை முடித்துக்கொண்டு அவள் சமையலில் மும்முரமாக இறங்கிவிட்டிருந்தாள்.

"நேத்து ராத்திரி காரில் கிளம்பி, விடியற்காலை வந்து சேர்ந்தோம். குளிச்சிட்டு, ஓட்டலில் சாப்பிட்டுட்டு உங்களைப் பார்த்துப் போக வந்தோம்."

"இனி நேரா வேலைக்குக் கிளம்பணும். அவ்வளவு தான்." சிரித்தான் முரளி.

எத்தனையோ தடவைகள், மகளுக்கு அவள் எடுத்துச் சொல்லியிருக்கிறாள்: "இரவு நேரத்தில் கார்ப் பயணம் தேவையில்லை. மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளால் விபத்து நேரலாம். மேலும் வழிப்பறி கொள்ளை அதிகமாகிவிட்டிருக்கும் காலம் பொருள்

களைத் திருடர்கள் கொள்ளையடித்தாலும் ஒழியட்டும் என்று இருந்துவிடலாம். இளம் பெண்களைக் கண்டு விபரீத எண்ணங்கள் ஏற்பட்டுக் கடத்திச் சென்றுவிட்டால். பொழுதோடு போய்ப் பொழுதோட வர உன் கணவனுக்குப் புத்தி சொல்லக் கூடாதா?'' என்று.

அவளே கேட்காதபோது, அவள் எங்கே கணவனுக்குப் புத்தி சொல்லப் போகிறாள்?

'எந்த ஒரு காரியத்தையும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற பிடிவாதம். எப்பொழுதும் கணவனை ஏவிக்கொண்டு, எதையாவது செய்து முடிக்கச் சொல்லி உசுப்பிக் கொண்டு. சே! என்ன பெண் இவள்?' சலிப்புடன் மகளை உற்றுப் பார்த்தாள்.

அவளது அலங்காரமும் ஒப்பனையும் பார்ககச் சகிக்க வில்லை.

''அடடா! நேரமாச்சே'' முரளி எழுந்திருந்தான்.

''உங்களுடையது சொந்த வியாபாரம். முன்னே பின்னே போகலாம். நான் ஒருத்தனுக்குக் கைகட்டிச் சேவகம் செய்கிறவன். நேரத்தோட அலுவலகத்திலே இருந்தாகணும்'' புன்னகைத்தபடி மாமனாரிடம் விடை பெற்றுக்கொண்டான்.

காலை வேளை அலுவலக நேரம்—போக்குவரத்து நெரிசல் எக்கச்சக்கம். நேரத்துக்குப் போக வேண்டுமென்ற தவிப்பில் முரளி கண்மண் தெரியாது வண்டி ஓட்டினால்... கடவுளே! அடிவயிற்றில் தீ தொட்டுவிட்டது போன்ற திகிலில் வசுந்தரா சமையல் அறைக்குள் புகுந்தாள்.

''நானும் கிளம்பறேன்'' என்று எழுந்த கணபதி, மனைவி தயாராகக் கட்டி வைத்திருந்த டிபன் டப்பாவை எடுத்துக் கொண்டு, மகளுக்கு 'டாடா' காட்டிவிட்டு வெளியேறினார்.

கதவை அடைத்துக்கொண்டு மகள் நேரே சமையல் அறைக்குள் வந்தாள்.

குறிப்புதவி நூல்
578129



வசுந்தரா ஓரக் கண்ணால் மகளை உற்றுக் கவனித்தாள்.

இதுவரை புன்னகையில் மலர்ந்திருந்த அவளது முகம் ரத்தமாகச் சிவந்து சுருங்கிவிட்டிருந்தது. கண்கள் தணலாக எரிந்தன.

894.8113
LAK

''அம்மா நான் உங்களை ஒண்ணு கேட்கப் போறேன்.''

''நானும் உன்னை ஒண்ணு கேட்கத்தான் காத்திருக்கேன். முதலில் இதுக்கு பதில் சொல்லு. எங்கள் வீட்டுக்கு இப்படி உடம்போடு ஒட்டின பாண்ட்—சட்டை போட்டுக் கொண்டு வரக்கூடாதுன்னு பல தடவை எச்சரித்திருக்கேன். என்னை அவமானப்படுத்தணுங்கிற எண்ணத்தோட புறப்பட்டவள் போல இந்த அலங்கோலத்திலே வந்திருக்கே!''

''ரொம்பக் கட்டுப் பெட்டியாவே இன்னமும் காலத்தை ஓட்டுறீங்க. இந்தக் காலத்து இளம் பெண்களைப் போல எனக்கும் நடந்துக்கணும்னு ஆசை.''

''உன் ஆசைகளை உன் வீட்டோட வச்சுக்கோ. என் வீட்டுக்கு இந்தக் கோலத்தோட இன்னொரு முறை வரக்கூடாது. இடுப்பு வரை தொங்கின முடியைப் பாதி கத்திரிச்சுத் தொலைச்சிட்டியேன்னு வயிறு எறிஞ்சு போனேன். பெங்களூரில் இருந்து இப்போ ஒரேயடியா மொட்டைத் தலையோட வந்திருக்கே, பார்க்க வெட்கமா இருக்கு.''

''இதுதான் இப்போ நாகரிகமாகக் கருதப்படறது... அதனாலே...''

''வாயை மூடு. நீயும் உன் நாகரிகமும்'' பட்டென்று கையில் பிடித்திருந்த கரண்டியை மேடைமேல் ஓசையுடன் வைத்தாள் தாய்.

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 2004

''இப்போ நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லுங்க. எங்க வீட்டை ஒழுங்கு செய்து வச்சிருக்கீங்க. ரொம்ப நன்றி. என் பீரோவைக் குடைஞ்சு அதில் இருந்த பரிசுப் பொட்டலத்தை எடுத்துட்டு வர உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தாங்க?''

தோளுக்கு மிஞ்சிவிட்ட மகள் அதட்டிக் கேட்கிறாள்.

''உன் புத்தக அலமாரியில் நீ எழுதி வச்சிருந்த கடிதத்தைப் பார்க்க நேரிட்டது. எனக்கு ரொம்ப அவமானமா போயிட்டுது.''

''என் கடிதங்களைப் பிரிச்சுப் படிக்க உங்களுக்கு உரிமையில்லையம்மா!''

''உரிமையாவது புடலங்காயாவது? நானா வேணும்னு எடுத்துப் படிச்சேன்? புத்தகங்களை அடுக்கும்போது எதேச்சையா கண்ணில் பட்டது. முன்னமே நான் பல தடவை எச்சரிச்சிருக்கேன். சொல்றதை நேரே சொல்லிட்டு நகர்ந்துக்கிறது நல்லது. கைப் படக் கடிதம் எழுதிச் சிக்கிக்கொள்றது தப்பு.''

''போதும் உபதேசம். ஆனந்தன் கொடுத்த பரிசுகளை உடனடியா என்கிட்ட திருப்பிக் கொடுத்திடுங்கோ.''

''அவைகளை நான் அவனது முகவரிக்கு அனுப்பி வைக்கப்போறேன்.''

''அம்மா அப்படிச் செய்து என் சிநேகிதனை அவமானப்படுத்தினால்...'' கிரீச்சென்று கத்தினாள் மகள்.

''அப்படிச் செய்யாட்டி நம்ம குடும்பமே அவமானப்படும். இதனாலே உனக்கு என் மேலே கோபம் வந்தாலும் சரி, கல்யாணமான ஒரு பெண்ணுக்கு அடுத்தவன் என்ன பரிசு கொடுக்கிறது? நீ எப்படி ஏத்துக்கலாம்?''

''நாங்கள் ரெண்டு பேரும் நண்பர்கள். இது உங்களுக்குப் புரியலையா?''



''அஞ்சனா, நானும் ஓரளவு படிச்சவதான். உன்னாட்டம் அலட்டிக்கிறதில்லை, அவ்வளவுதான். உங்கப்பா எல்லாத்தையும் பொறுப்பார். நீ நடத்தை தவறிப்போனா மூஞ்சியிலே முழிக்க மாட்டார். அத்தனை கோபக்காரர். அதை முதல்லே நல்லா புரிஞ்சுக்கோ. சிநேகிதம் என்று ஆரம்பிச்சுத் தவறாக முடியக்கூடாதேன்னுதான் உன்னைத் தடுத்து நிறுத்த விரும்பறேன்.''

''அம்மா! நீங்கள் என்னை ரொம்ப மட்டமாக எடை போட்டு, ஆனந்தனோட சிநேகிதத்தைத் தப்பா புரிஞ்சுக்கிறீங்க. ஆனந்தன் எனக்கு மட்டும் சிநேகிதன் அல்ல. முரளியோட ரொம்ப நெருங்கிப் பழகும் தோழன்.''

''இது மாதிரி எத்தனை சங்கதிகளை நான் கேள்விப்பட்டிருப்பேன்னு நினைக்கிறே? சிநேகிதனாக குடும்பத்துக்குள்ளே பழகிட்டு, குடும்பத் தலைவன் மானத்தையே விலை பேசிவிடுகிற அயோக்கியர்கள் நம்ம சமூகத்திலே சிலர் இருக்காங்க. ஆனந்தன் அப்படிப்பட்டவன் இல்லேன்னு உன்னால் நிரூபிக்க முடியுமா? முரளி ஏமாந்தவன். அதுக்காக அவனை யாரும் ஏறி மிதிக்க வேணாம்.''

''கடைசியா இப்போ உங்கள் முடிவுதான் என்ன?''

''உங்கப்பா காதிலே சங்கதி விழாதபடி, அந்த ஆனந்தனுக்குப் பரிசுகளைத் திருப்பி அனுப்பிவிடப் போகிறேன்.''

''ரொம்பக் கோவிச்சுக்குவார், அம்மா?''

''அவன் கோபம் என் லாபம். அவன் யாரு நம்ப மச்சானா? அவன் மனத்தாங்கலைப் பத்தி எனக்கு அக்கரை இல்லை. அஞ்சனா நீ எழுதிய பதில் கடிதம் படிக்க நல்லாவேயில்லை. கடிதம் எழுதியே வம்பை விலைக்கு வாங்கிக்கிற பிழைப்பா போச்சு உனக்கு. இது கடைசித் தடவை, மனதிலே ஞாபகம் இருக்கட்டும்.''

''சாப்பிட்டுத்தானே போவே?'' சிவகாமி இருப்புக் கொள்ளாது எழுந்து வந்து சமையல் அறைக்குள் தலையை நீட்டினாள்.

பேத்தி கண்கலங்கியவாறு உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும், ''என்ன உங்களுக் கள்ளே தகறார்? வீட்டுக்கு வந்திருக்கிற குழந்தைகிட்டே நீ எதுக்கு மூஞ்சியைக் காட்டறே?''

''வீட்டைத் தாறுமாறாப் போட்டிருந்தாள். அதுக் காகக் கொஞ்சம் கோவிச்சுக் கொண்டேன். உங்க பேத்தி நினைச்சா அழுவாளே, அதைச் செய்திட்டு இருக்கா'' படபடவென்று பேசிவிட்டு, தன் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள், வசுந்தரா.

மேலே பேசிப் பயன் இல்லை என்பதை உணர்ந்து வெகுண்டுபோன அஞ்சனா, வெளியே நடந்தாள். மேசை மேல் போட்டிருந்த தன் பையை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு பாதணிகளைத் திணித்தபடிக் குரல் கொடுத்தாள்.

''பாட்டி, நான் போய்விட்டு வர்றேன்.''

தாயாரிடம் சொல்லிக்கொண்டு போக விரும்ப வில்லை. கண்களில் இருந்து பெருகி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, வாயிற்கதவைப் படார் என்று சாத்திவிட்டுப் படியிறங்கிப் போய்விட்டாள்.

''ஒரு வாய் சாப்பிட்டுப் போகக்கூடாதா! நல்ல வெயில். கொஞ்சம் அலுப்புத் தீரத் தூங்கிட்டு சாயங் காலம் முரளியை வந்து காரில் அழைச்சிட்டுப் போக போன் பண்ணியிருக்கலாம்'' பெருமூச்செறிந்தாள் கிழவி.

''இன்னிக்கு ஒருநாள் இங்கே சாப்பிட்டுவிட்டால் போதுமா? அவளுக்குன்னு கணவன், வீடு, வாழ்க்கை இருக்கே! அவைகளைக் கவனிக்க வேண்டாமா? நான் சொன்னது இப்போ கசப்பாத்தான் இருக்கும். தன்னால



புரிஞ்சுக்கிறப்போ, இனிப்பாயிடும். விடுங்கள், அவளை!'' என்று பதிலளித்துவிட்டுத் தன் காரியங்களில் மும்முர னாள், வசுந்தரா.

அதற்குப்பின் சில நாள் அமைதியாகக் கழிந்தன.

அடுத்த வீட்டுக்காரரின் தொலைபேசி எண்ணில் தாயை அஞ்சனா அழைப்பதை நிறுத்திக் கொண்டிருந் தாள். நினைத்தபோது, ஆட்டோவில் வந்து இறங்கும் வழக்கமும் மறைந்து விட்டிருந்தது.

பெண்ணுக்குப் புத்தி வந்துவிட்டிருக்கிறது என்று நினைத்து அவள் உள்ளூர மகிழ்ந்து கொண்டிருந்தபோது, ஒருநாள் பிற்பகல் அழைப்பு மணி மிகவும் ஆத்திரமாக ஒலித்தது.

கை வேலையைப் போட்டுவிட்டுக் கதவைத் திறக்க ஓடினாள். வீட்டில் அதுசமயம் அவள் மட்டுமே தனியாக இருந்தாள். காலையில் காப்பி பலகாரத்திற்குப் பின்னர் பக்கத்துத் தெருவில் இருந்த சிநேகிதியைப் பார்க்கப் புறப் பட்டுவிட்டிருந்தாள் சிவகாமி. ''நான் வர ஒருசமயம் சாயங்காலமாகிவிடும். சிநேகிதி மகன் காரிலேயே கொண்டு வந்து விடுவான். கவலைப்படாதே'' என்று சொல்லிவிட்டுப் போயிருந்தாள்.

சோப்புத் தூள் விற்பனை செய்யும் பெண்களாக இருக்கலாம் என்று கண்ணாடி துவாரத்து வழியே பார்த் தாள்.

அந்தப் பகுதி மாதர் சங்கத்து உறுப்பினரான கோதை நாயகியும் ஒரு இளம்பெண்ணும் வெளியே நின்று கொண் டிருந்தனர்.

'சங்க ஆண்டு விழா நெருங்கிக் கொண்டிருக்கிறது. பொருட்காட்சி ஒன்று வைக்கப் போகிறோம். ஏதாவது பலகாரம் ஊறுகாய் செய்து கொடுத்து விற்பனைக்கு உதவ முடியுமா என்று கேட்க வந்திருக்கிறார்கள் போலிருக்

கிறது' என்று எண்ணியபடி கதவைத் திறந்தாள். ''வாங்கோ, உட்காருங்கோ'' உபசரித்தாள்.

''ஒரு முக்கிய சங்கதியைப் பத்திப் பேச வந்திருக் கேன்'' என்றபடி பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தாள் கோதைநாயகி.

அருகில் இருந்த முக்காலி மீது அமர்ந்துகொண்ட பெண்ணைச் சுட்டிக் காட்டி, ''இவள்தான் என் அக்கா மகள் ராதிகா. ஆனந்தனுடைய தங்கச்சி.''

வசுந்தராவின் முகத்தில் குப்பென்று வியர்வை பூத்தது. நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

காரணம் இல்லாமல், ஆனந்தன் தங்கை அவர்கள் வீட்டுக்கு வருவாளா? இவங்களுக்கு அம்பத்தூரிலே ஒரு பெரிய பிளாஸ்டிக் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை இருக்கு. அண்ணா சாலையிலே அலுவலகம். நகரத்திலே மொத்த வியாபாரக் கிடங்கு, திருச்சியிலே கிளை நிறுவனம். அடையாற்றில் பங்களா...இப்படின்னு நான் இவங்களைப் பத்தி அடுக்கிண்டு போகலாம். இவள் அப்பா சதாசிவம், பெரும் கொடையாளி. சமூக சேவை யில் ரொம்ப ஈடுபாடு கொண்டவர். இவங்க பகுதி அரிமா சங்கத்து தலைவர்.''

வசுந்தரா மவுனமாக அவளை உறுத்துப் பார்த்தாள்.

''இத்தனையும் நான் ஏன் சொல்றேன் தெரியுமா? இவங்க வீட்டுக் கவுரவம் நாசமாகி விடக்கூடாது என்கிற ஆதங்கத்திலேதான் நேரே பேச வந்திருக்கேன். என் சகோதரி கூட வருவதாகச் சொன்னாள். மகனைப் பெற்ற வள் அவள். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது. அவள் பேச்சைக் கொட்டி விடுவாள். அதனால் நான் ராதிகாவை அழைச்சுக்கொண்டு புறப்பட்டு வந்திருக் கேன். தொலைபேசியில் கூப்பிட்டு ஏற்பாடு செய்துட்டு வரலாம்னு நினைச்சேன்.''



வசுந்தராவுக்குக் கட்டுக்கொள்ளவில்லை. ''நாங்க அந்த வசதிகள் எல்லாம் வச்சுக்கொண்டு வாழும் பெரிய மனிதர்கள் இல்லை.''

''அதனாலே திடீர்னு புறப்பட்டு வந்தோம். அடுத்த வாரம் ராதிகாவைப் பெண் பார்க்க வராங்க.''

''மிக்க மகிழ்ச்சி'' ஏளனமாக முணுமுணுத்தாள் வசுந்தரா. ஆனாலும் அவமான உணர்வில் மனம் நெருப் பாகக் காய்ந்தது.

''என் அக்கா மகிழ்ச்சியாக இருக்கணும். எங்க குடும்ப கவுரவம் காப்பாத்தப்படணும். அதுக்கு உங்கள் உதவி தேவை.''

''விளங்கச் சொன்னால் தேவலை.''

''இதை நாங்க ஒரு சமாதான முறையிலே அணுகு கிறோம். வேறு எவராவது இருந்தால் சண்டை போட்டு, ரசாபாசமாக்கி விட்டிருப்பாங்க. ராதிகாவைக் கொடுக் கிற இடத்தில் இருந்து ஆனந்தனுக்குப் பெண் பேசி முடி வாகியிருக்கு. ஆனந்தன் தங்கச்சியை அந்த வீட்டுப் பிள்ளைக்கும் அந்த வீட்டுப் பெண்ணை ஆனந்தனுக்கும் முடிக்க முடிவாகியிருக்கு.''

''மகிழ்ச்சி.''

''அப்படிச் சொல்லிவிட்டால் போதாது. ஆனந்தன் அந்தப் பெண்ணைக் கட்டிக்கொள்ள மறுக்கிறான். இதுக்குக் காரணம் உங்கள் பெண் அஞ்சனா. அவனுக்கு அஞ்சனாவைக் கல்யாணம் செய்துகொள்ள விருப்பமாக இருக்கிறதாம். வீட்டிலே ஒரே களேபரம். கல்யாணமான பெண், ஒரு பிள்ளையின் மனதை இப்படி மயக்கியிருக்கா ளேன்னு என் அக்கா அலறித் துடிக்கிறாங்க.

பூமி பிளந்துகொண்டு தன்னை விழுங்கிவிடக் கூடாதா என்று வெட்கத்தில் துடித்துப் போனாள், வசுந்தரா

''ஆசைப்பட்டாலும் நடக்கிற காரியமில்லையே! என் மகள் கல்யாணமானவள். ஆனந்தனை எப்படி மணந்துகொள்ள முடியும்?''

''இப்போத்தான் விவாக ரத்துன்னு ஒண்ணு இருக்கே!''

''அம்மா. கொஞ்சம் என்னைப் பற்றி சிந்தித்துப் பாருங்கோ. எனக்கு நீங்கள் எப்படியாவது உதவணும்னு கேட்கத்தான் நானும் என் சித்தியுடன் புறப்பட்டு வந்தேன். என் அண்ணன் அந்த வீட்டுச் சம்பந்தத்தை உதறிவிட்டால், என் வாழ்க்கை பாழாகிவிடும். ஏன்னா, நானும் அந்த வீட்டுப் பிள்ளை மோகனும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம். தன் சகோதரிக்கு வாழ்வு இல்லேன்னு மோகன் பிடிவாதமாகப் பேசறார்.'' கண்களில் நீர் பொங்க, தொண்டையடைக்க, திணறினாள் ராதிகா.

அஞ்சனாவால் தவறு இழைக்கப்பட்டவர்கள் என்று இருவரும் சீறிக்கொண்டு வந்திருக்கலாம்.

ஆனால், மிகவும் குழைவாக, தணிவாக அவர்கள் கேட்டுக் கொண்ட முறை வசுந்தராவின் நெஞ்சைத் தொட்டது.

அஞ்சனாவின் அடாத செயலால் இரண்டு குடும்பத்தின் பெயரும் வாழ்வும் அழிந்துபோய்விடுமே. ஊகூம், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

''கவலைப்படாதீங்க. அஞ்சனாவால் எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது. அதற்கு நான் உத்திரவாதம். ஆனந்தன் அவளைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான். இதெல்லாம் இளம் வயசின் கோளாறு. எங்களால் எந்தவித சங்கடமும் உங்க குடும்பத்துக்கு ஏற்படாதுன்னு உங்கள் அக்காகிட்டே சொல்லுங்கள்'' என்றாள்.

''அப்போ நாங்கள் புறப்படறோம்'' எழுந்தாள் கோதைநாயகி.



''இருங்கோ. உங்களிடம் நானே கொண்டு வந்து கொடுக்க இருந்தேன். நீங்க வந்ததும் நல்லதாப் போச்சு'' என்று உள்ளே சென்று அலமாரியைத் திறந்து, ஆனந்தனின் பரிசுப் பொட்டலத்தை எடுத்து வந்தாள். ''உங்கள் ஆனந்தன் என் பெண்ணுக்கு இவைகளைத் தன் பரிசாக அனுப்பியிருந்தானாம். கணவன் வாங்கித் தரவேண்டிய பொருள்களை வேறு ஒருவனிடம் அன்பளிப்பாக ஏற்பது அசிங்கம் என்று அருவருப்படைந்த என் மகள், இவைகளைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு, ஆனந்தனுக்குத் திருப்பி அனுப்பச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள் இந்தச் சங்கதியைப் பற்றி ஓரளவு என் மகள் முன்னமே சொல்லியிருப்பதால், எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இல்லை. என் மகளைப் பொறுத்தவரை தன் கணவனின் நண்பன் என்றுதான் ஆனந்தனைத் தன் வீட்டில் அனுமதித்தாள். ஆனந்தன் அவளது உணர்வுகளைத் தப்பாகப் புரிந்துகொண்டிருப்பது வருந்தத்தக்க சங்கதி. இதை அஞ்சனா திருப்பி அனுப்பிவிட்டதாக உன் அண்ணனிடம் கொடுத்துவிடு, ராதிகா!'' என்று பரிசுப் பொட்டலத்தை அவள் கரத்தில் வைத்தாள்.

அவர்கள் வெளியேறியதும், கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள். உடலில் உள்ள சக்தியெல்லாம் போய், தக்கையாகிவிட்டது போன்ற தோய்ந்த உணர்வில் தொப்பென்று முற்றத்து குரட்டின்மீது உட்கார்ந்தாள்.

பெண்ணைப் பெற்றவள், வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டும் எனபார்களே...?

கல்யாணம் செய்து கொடுத்த பின்னர், அந்த பயங்கர வேதனையை அனுபவிக்காமல், நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணினாளே, பெண்ணைப் பெற்றதால் அவளுக்கு நிம்மதி என்பதே கிடையாதா?

தாங்குமுடியாத துக்கத்தில் அவள் விம்மி விம்மி அழுதாள்.

## 6

ஒரு மாத காலம் ஓடிச் சென்றது.

வாசல் அழைப்புமணி ஒலித்தபோதெல்லாம் சிவகாமி அலுப்பைப் பாராது எழுந்து சென்று கதவைத்திறந்தாள்.

அஞ்சனாதான் வந்திருக்காளான்னு பார்த்தேன் ஆமாம்! இந்தப் பெண் பெங்களூரில் இருந்து வந்த பிறகு ஒரு வாட்டிக்கூட நம்மை எட்டிப் பார்க்கலையே?''

''அடிக்கடி பிறந்தவீட்டுக்கு ஏன் போறேன்னு முரளி கண்டிச்சிருக்கலாம்.''

''முரளி ரொம்ப நல்ல பிள்ளையாச்சே! அப்படிச் சொல்லியிருப்பானா?'' பாட்டி சிவகாமி புலம்பினாள்.

''நான் ஒருநடை போய் பார்த்துவிட்டு வரட்டுமா?'' பாட்டி தவித்தபோது வசுந்தரா தடை உத்திரவு போட்டாள்.

''வேண்டாம். வீடு வாங்கின புதுசிலே ஒரு தடவை எல்லாரையும் முரளி அழைச்சு விருந்து வைச்சான். அதுக்குப் பிறகு அஞ்சனா, என்னிக்காவது பாட்டி! நீங்கள் வாங்க. ஒருநாள் என்கூட தங்கிட்டுப் போங்கன்னு அழைச்சிருக்காளா? வசுந்தரா அந்த உண்மையைக் கூறியபோது பாட்டிக்குச் சுருக்கென்றுதான் பட்டது.

'புதுசா கலர் டி.வி. வாங்கியிருக்கோம். வீடியோ பெட்டி வாங்கிட்டோம்னு வரும்போதெல்லாம் எதையாவது பற்றிப் பெருமை அடித்துக்கொண்ட பேத்தி, அவளை ஒருநாள்கூட வாய்நிறைய அழைத்ததில்லை. வந்து எங்களோட இருந்து இதுகளையெல்லாம் பார்த்துட்டுப் போங்கோ பாட்டின்னு ஒப்புக்குக் கூட கூப்பிடலையே! இப்போ நாம் ஏன் போய் வெட்கத்தைவிட்டு அவள் வாசலில் நிற்கணும்?' பாட்டி சிந்திக்கத் தொடங்கினாள்.



ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் காலை நாளேட்டைப் புரட்டிப் படிக்க மனமின்றி, வாயிலுக்கு வந்து தெருவைப் பார்த்தபடி நின்றார் தந்தை கணபதி. 'மகள் அஞ்சனா இப்பொழுதெல்லாம் ஏன் வருவதில்லை?'

'கார் பழுதாகிவிட்டதா? முரளிக்கு உடம்புக்கு முடியலையா? அப்படி இருந்தால் அலுவலகத் தொலைபேசியில் அப்பாவுக்குச் செய்தியைச் சொல்லியிருப்பாளே! என் மேலே கோபமா? நான் என்ன தப்புப் பண்ணினேன்?' தமக்குள்ளே பேசிக் கொண்டார்.

அன்று காலை காப்பி பலகாரம் சாப்பிடக் கூடத்தில் வந்து உட்கார்ந்தார், மனைவி கொண்டு வந்து வைத்த இடியாப்பங்களைப் பார்த்ததும், மகளின் நினைவு நெஞ்சை வருடியது.

''அஞ்சனாவுக்கு இடியாப்பம்னா உசிராச்சே. குழந்தையைப் பார்க்காமல், கண்ணு பூத்துப் போறது... ஏன் வசு! நீ போய்ப் பார்த்து விசாரிச்சுட்டு வரக் கூடாதா?''

காப்பித் தம்ளரைக் கொண்டு வந்து எதிரே வைத்துவிட்டு வசுந்தரா சிரித்தாள்.

''நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லாமல் சிரிச்சா என்ன அர்த்தம்?'' கடுப்புடன் கேட்டார்.

''இருபத்தெட்டு வருடத்துக்கு முன்னே நடந்ததை நினைச்சுப் பாருங்கோ. என் அண்ணன் என்னைப் பார்க்க முடியாமல் தவிச்சுப் போய் ஒரு தடவை நேரே புறப்பட்டு வந்தப்போ என்ன சொன்னீங்க?''

''பழைய கதை அது?''

''உங்களுக்கு ஒரு நியாயம்; முரளிக்கு ஒரு நியாயமா? உங்க தங்கச்சி சுகமாகத்தான் இருக்கா. அவளுக்கு நாங்க ஒரு குறையும் வைக்கலை. ஏதாவது இருந்தால் கடிதம்

போட்டிருப்போமே என்று முகத்திலே அடிச்சீங்களே, மறந்துபோச்சா?''

''என் வீடு, என்னுடையதாக இருக்கணும். 'மத்தவங்க வந்து தலையிட்டுஅதனுடைய அந்தரங்கத்தைக்குழப்பறது பிடிக்காது' அப்படின்னு ஒரு பெரிய உபதேசம் என் அண்ணனுக்குச் செய்தீங்களே. நினைவிருக்கா? இதையே தான் உங்கள் மருமகனும் நினைக்கிறார்.''

''நீ சொல்றது சரிதான். உள்ளூரிலேயே பெண்ணைக் கொடுத்திருக்கோம் என்று நினைத்தபோது, அங்கே போய் நிக்கறது ரொம்பக் கேவலம். அவளும் பிறந்த வீட்டுக்கு அடிக்கடி வர்றது அவ்வளவு நல்லா இல்லே.''

''அவளுக்கு வீடு இருக்கு. கணவன் இருக்கான். வருங் கால வாழ்க்கை இருக்கு. அதை அவள் சமாளிச்சு,பிறந்த வீட்டுக்குப் பெயர் வராப்பல தலையெடுக்கணும், அதனாலே சும்மா மனதை அலட்டிக்காதீங்க. பண்டிகை நாட்களின் போது, முறையா நாம் போய் அழைப்போம். இரண்டு பேரும் வந்து சீராடிவிட்டுப் போகட்டும்.'' வசுந்தரா துணிவாகப் பேசினாள்.

'என்னதான் கடுமையாக இருக்க விரும்பினாலும் வசுந்தராவுக்கு மகளைப் பார்க்க வேணும், சீராட்ட வேணும் என்ற ஆசை அடிக்கடி மனதை நெருடியது. மகளின் வருங்காலம் சுகமாக அமையவேணும் என்ற காரணத்திற்காக அவள் தன் ஆசைகளைத் துறந்து விட்டிருந்தாள். மனதைக் கல்லாக்கிக் கொண்டிருந்தாள்.

அன்று காலை, வீட்டுப் பரணில் கிடந்த பாத்திரத்தை எடுக்க ஏணியில் ஏறினாள். தொப்பென்று கீழே விழுந்த கரடி பொம்மையைப் பார்த்ததும், சட்டென்று இறங்கி விட்டாள்.

உடல் பூரா அழுக்காகி, தூசிபடிந்து, தோள்பட்டை கிழிந்து பஞ்சு வெளியே தெரிய, அலங்கோலமாகிவிட்ட



அந்தப் பொம்மையைக் கையில் எடுத்து,துடைத்துவிட்டுப் பார்த்தபோது அவளது கண்கள் பனித்தன.

அஞ்சனா குழந்தையாக இருந்தபோது, அவளது தந்தை வெளியூருக்குப் போய்விட்டுத் திரும்பியபோது வாங்கி வந்த கரடி பொம்மை அது.

சிவப்பு மணிக்கண்ணால் கரடி தன்னைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமையில் திடுக்கிட்டுப் போனாள்.

குழந்தை அஞ்சனா, இரவு தூங்கப் போகும்போது தன் கரடி பொம்மையைக் கட்டிக் கொண்டுதான் உறங்கு வாள்,

''அம்மா என் கரடிக் குட்டிக்குப் பசிக்குது. கொஞ்சம் சோறு ஊட்டு'' என்று பிடிவாதம் செய்வாள். அந்த வயதில் அவள் செய்த அடம், அழுது சிணுங்கியது. பிடி வாதம் செய்து காரியத்தைச் சாதித்துக்கொண்டது எல்லாம் ரசிக்கக் கூடிய சங்கதிகளாக—பெற்றவர்கள் பகிர்ந்து அனுபவிக்கும் ஆனந்தமாக இருந்தது.

ஆனால், இந்த வயதில் அவளது பிடிவாதம் வேதனை யாக இருந்தது. அசிங்கமாக, அருவருப்பாகவும் இருந்தது.

பெருமூச்சுடன் பொம்மையை அப்பால் வைத்துவிட்டு மறுபடியும் பரண் மீது ஏற அவள் முயன்றபோது அடுத்த வீட்டுப் பொடிப் பையன் கதவைத் தட்டினான்.

''உங்களுக்குப் போன் வந்திருக்கு. அம்மா சீக்கிரம் வரச் சொன்னாங்க.''

வசுந்தரா நடுங்கிப் போனாள்.

எத்தனை அவசரம் என்றாலும் அடுத்த வீட்டுத் தொலைபேசியில் கூப்பிடாதே என்று கண்டிப்பாக மகளிடம் சொல்லிவிட்டிருந்தாள்.

இரண்டு மாத காலம் தாயைப் பாராது, பேசாது இருந்த அஞ்சனா இப்போது கூப்பிட்டால், ஏதாவது

முக்கிய காரணம் இருக்க வேண்டும். அவளுக்கு என்ன வந்துவிட்டது? மாப்பிள்ளைக்கு என்ன நேர்ந்துவிட்டது?

கையும் காலும் பதறிப் போனாள். இனம் விளங்காத கலவரத்துடன் அடுத்த வீட்டுக்கு ஓடினாள்.

''மன்னிச்சுக்கோங்க. ஏதோ அவசரம் அதனாலே கூப்பிட்டிருக்காங்க.'' அடுத்த வீட்டுக்காரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டே தொலைபேசியை நெருங்கினாள்.

மறுபக்கத்தில் முரளியின் குரல் கரகரப்பாகக் கேட்டது. ''நான்தான் பேசறேன். என்ன சங்கதி?'' என்று கேட்பதற்குள் வசந்தராவின் இதயம் நின்றுவிடும் போன்ற ஒரு கிலி.

''உங்கள்கிட்ட தனியா பேசணும். நான் இன்னிக்கு வேலைக்குப் போகலை. எங்கள் வீட்டிலே வச்சுப் பேச விரும்பறேன். கார் எடுத்துட்டு வர்றேன். என்னோட கூட நீங்கள் புறப்படணும்.''

விவரம் எதுவும் கேட்கமுடியாத சங்கடம். அடுத்த வீட்டுக்காரி வாயிற்படி அருகே நின்று கண்காணித்துக் கொண்டு இருப்பதைக் காணக் கூச்சம்.

''வாங்கோ. நான் தயாரா இருப்பேன்'' என்று கூறி விட்டு நெற்றி மேல் பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, ''ரொம்ப நன்றி'' என்று முணுமுணுத்துவிட்டு, திரும்பிப் பார்க்காது வீட்டுக்கு ஓடிவந்தாள்.

''என்ன இப்படிப் பறக்கறே? எங்கே போராப்பல?'' மாமியார் கேட்டதுக்குப் பதிலளிக்க முடியாது எரிச்சலுடன் அவள் வெளியே செல்ல ஆயத்தமானாள்.

''வீட்டைக் கொஞ்சம் பாத்துக்கோங்க. வர்றேன்'' என்று கூறிவிட்டு வெளியே வந்த வசந்தரா, மருமகனுடைய காரில் சட்டென்று ஏறிக்கொண்டாள். படபடவென்று மார்பு துடித்தது.



மௌனமாகக் காரை ஓட்டிக்கொண்டு சென்ற முரளியை அப்போதுதான் நிதானமாக அவள் கவனித்தாள்.

மழிக்கப்படாத முகமும் கலைந்த கிராப்புமாக அவன் நோயாளி போல் தென்பட்டான்.

வீட்டை அடையும் வரை ஆவலை அடக்கிக்கொண்டு பேசாதிருந்தாள்.

கதவைத் திறந்து வழி விட்டான் முரளி. உள்ளே நுழைந்த வசந்தரா திகைத்துப் போனாள்.

அவர்கள் பெங்களூர் பயணத்தின்போது விட்டுப் போன நிலைமையைவிட வீடு இன்னமும் அதிக அலங்கோலத்தில் தெரிந்தது.

அவள் கேட்குமுன் முரளி முந்திக்கொண்டான். ''உங்கள் பெண் இங்கே இல்லை. இன்று காலையில் என்னை விட்டுப் போய்விட்டாள். நேற்று இரவு எங்களுக்குள் பெருத்த சண்டை.''

அதன் அறிகுறிகள் முன்னறையில் நன்றாகத் தெரிந்தன. காப்பி மேசை அருகே மரத் தட்டும் சில கோப்பைகளும் ரத்தினக்கம்பளத்தின் மீது விழுந்து கிடந்தன. கம்பளத்தில் இங்குமங்கும் கறை. ஒருகணம் துணுக்குற்று உற்றுப் பார்த்தாள்.

முரளி பைத்தியக்காரன் போல உரத்து சிரித்தான்.

''பயப்படாதீங்க! அது ரத்தக் கறையில்லை. காப்பிக் கறை. எனக்கு வந்த கோபத்தில் அஞ்சனா கொண்டு வந்த மரத் தட்டைக் கோப்பைகளோட தட்டிவிட்டேன்.''

சுற்றுமுற்றும் பார்த்தாள் வசந்தரா. வீட்டைக் கூட்டிச் சரிப்படுத்திச் சில நாட்களாகிவிட்டது போன்று எங்கும் அசுத்தம். சமையலறைத் தொட்டிக்குள் கழுவாது கிடந்த பாத்திரங்கள், அலமாரியில் திறந்து கிடந்த டப்பாக்கள், இங்குமங்கும் வாரி இறைக்கப்பட்டிருந்த உடைகள்.''

''ஒரு வாரத்துக்கு வேலைக்காரியை வரவேணாம்னு, சொல்லிட்டேன். அவள் வேறே இந்த வீட்டுக் கதையைத் தெரு முழுதும் பரப்ப வேணுமா?''

''அப்படி உங்களுக்குள்ளே என்னதான் விவகாரம்னு தெரிஞ்சுக்கலாமா?'' கேட்டபடி கம்பளத்தின் மீது கவிழ்ந்து கிடந்த கோப்பைகளை எடுத்து மரத் தட்டின் மேல் அடுக்கினாள்.

அந்தக் கம்பள விரிப்பை வாங்குவதற்கு அஞ்சனா தன் தாயைத்தான் கடைக்குக் கூட்டிக்கொண்டு போயிருந்தாள்.

இரண்டாயிரம் ரூபாய் என்று விலையைக் கேட்டதும் தாய் மலைத்துப் போனாள்.

''அழகா இருக்கும்மா'' வாங்கிக்கிறேன்—தடை சொல்லாதீங்க. என் தோழி வீட்டிலே போட்டிருக்கும் கம்பளத்தின் விலை பத்தாயிரம்'' என்று கெஞ்சினாள் அஞ்சனா.

''அவங்க பணக்காரங்க. நாம சாதாரணப்பட்டவங்களாச்சே. இப்பத்தானே தனிக்குடித்தனம் ஆரம்பிச்சிருக்கே. நாலு காசு சேர்க்கணும், குழந்தை ஒண்ணு ஏற்பட்டால் செலவு இருக்குமே. காசை வாரிக்கொட்டறது சுலபம். சேக்கிறது சிரமம்'' என்று வாதிட்டாள் அம்மா.

ஆனால், அஞ்சனா பிடிவாதமாக அந்தக் கம்பளத்தைத்தான் வாங்கினாள்.

''உங்க கோபத்திலே பணம் போட்டு வாங்கின பொருளை இப்படிப் பாழாக்கிவிட்டீர்களே; சொல்லிக் கொண்டே உள்ளே சென்று ஒரு துணியை எடுத்துத் தண்ணீரில் நனைத்துக்கொண்டு வந்து கம்பளத்தைச் சுத்தப்படுத்த முயன்றாள்.

''என் வாழ்க்கையே பாழாயிடுச்சு. அதைப்பத்திப் பேசத்தான் உங்களைக் கூப்பிட்டிருக்கேன். அப்படி உட்காருங்கள்.'' ஒரு இருக்கையைக் காட்டினான்.



அவன் குரல் காரமாக ஒலித்தது.

கையில் பிடித்திருந்த ஈரத்துணியை அப்பால் வைத்து விட்டு உட்கார்ந்தாள்.

முன்னறையை அளந்தபடி அவன் பேசினான்.

''உங்களுக்கு ஞாபகம் இருக்கும்னு நினைக்கிறேன். உங்கள் மகளைப் பெண் பார்த்துட்டுப் போனபிறகு எல்லாம் முடிவானதும், ஒருநாள் காலை நான் திடுதிப்புனு உங்கள் வீட்டுக்கு வந்தேன் இல்லையா?''

அவளுக்கு அது மறக்கக்கூடிய சங்கதி அல்ல. எத்தனையோ வரன்கள் தட்டிப் போனபின் முடிவில் தோழி செண்பகத்தின் மூலம் கிடைத்த வரன் முரளி.

பெண் பார்க்கப் பிள்ளை வீட்டவர்கள் வந்தபோது, வசுந்தரா திகிலுடன்தான் அவர்களுக்கு இனிப்பு வழங்கி, காப்பி கொடுத்து உபசரிப்புச் செய்தாள். இந்த வரனும் தட்டி விட்டால் என்ற கவலை அவள் நெஞ்சைக் குடைந்தது.

முரளியின் சகோதரிக்கும் தாய்க்கும் பெண்ணை ரொம்பப் பிடித்துவிட்டது.

நீல வண்ணக் காஞ்சீபுரம் பட்டுச் சேலையை உடுத்தி அட்டிகையைப் பூட்டி, தலை கொள்ளாது மல்லிகைப் பூவைச்சூடி, நெற்றியில் பளிச்சென்ற குங்குமப் பொட்டை வைத்து அஞ்சனாவை அலங்கரித்து விட்டிருந்தாள்.

அன்று மலர்ந்த ஒரு நீல மலர் போல அழகாகத் தெரிந்த பெண்ணைப் பார்த்துச் சொக்கிப் போய்விட்டான் முரளி.

''வரதட்சணை, சீர் எதுவுமே தேவையில்லை!'' என்று பிள்ளை வீட்டவர்கள் சொன்னதும் கல்யாணத்தை விமரிசையாக நடத்துவது என்று தீர்மானித்து ஆவன செய்யத் துரிதப்பட்டனர்.

நிச்சயம் மிக எளிய முறையில் வீட்டோடு நடந்தேறியது.

கல்யாணத் தேதி குறிப்பிட்டு பத்திரிகை அச்சில் இருந்தது.

காஞ்சீபுரம் சென்று சேலைகளை எடுத்து வந்திருந்தாள் வசுந்தரா.

பாத்திரங்கள் வாங்கியாகிவிட்டது. எப்படியாவது கல்யாணம் நடந்தேறினால் போதும் என்ற ஆதங்கத்தில் வசுந்தரா அன்று பலகாரத் தயாரிப்புக்கு ஏற்பாடு செய்யப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது முரளி வந்து கதவைத் தட்டினான்.

அந்தச் சமயம் அங்கு யாரும் இருக்கவில்லை.

''உங்களிடம் ஒன்று பேச விரும்புகிறேன்'' மென்று விழுங்கினான்.

''உட்காருங்கோ'' உபசரித்துவிட்டு, வேகமாகக் குளிர்பானத்தைத் தம்ளரில் நிரப்பி எடுத்துக்கொண்டு வந்தாள்.

''ஒரு சங்கதியைப் பத்தி அம்மா ரொம்ப மனச் சங்கடப் படறாங்க. உறவினர் ஒருவர் வந்து, நின்று போன அந்தக் கல்யாணத்தைப் பத்தி ஏதோ சொல்ல, எங்கள் மாமா மனம் குழம்பிப் போய்விட்டார். அவருக்கு இந்தக் கல்யாணத்தை நடத்த விருப்பமில்லே.''

வசுந்தராவுக்கு இடிவிழுந்த அதிர்ச்சி.

''உங்கள் அம்மாவிடம் ஏற்கனவே நடந்ததை எதுவும் மறைக்காமல் சொல்லியிருக்கேன். உங்ககிட்டேயும் நாங்க எதுவும் மறைக்கலை. நீங்கள் பரந்த மனப்பான்மையோடு அன்னிக்குப் பேசினீங்க. கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டீங்க. இப்போ வந்து ஒரு கல்லைத் தூக்கிப் போடுறீங்களே?'' நெஞ்சு அடைக்க, வார்த்தைகள் தடுமாற, கண்களில் நீர் புரளத் திணறினாள்.



முரளிக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''என் மாமாவின் அபிப்ராயம் இது. அவர் பேச்சுக்கு அம்மா அடங்கிப் போகும் குணமுடையவங்க.''

''முரளி! நீங்க நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வாங்கோ. என் பெண் எந்தவிதமான தவறும் செய்யவில்லை. ஏழை வீட்டுச் சம்பந்தம்னு அந்த மனிதன் ஏதோ ஒரு சாக்கை வச்சுக்கொண்டு கல்யாணத்தை நிறுத்தி விட்டார். இதனால், அவர் மகனுடைய வாழ்க்கை எந்த விதத்திலும் பாதிக்கப்படலை. உடனடியாக அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. ஆனால், பெண்ணைப் பெத்த பாவியாகிட்டதாலே, எங்களது வாழ்க்கைதான் ரொம்பப் பாதிக்கப்பட்டது. எத்தனை எடுத்துச் சொல்லியும் வந்தவர்கள் எல்லாம், உங்கள் மாமனைப்போல முடிவில், வேண்டாம்னு உதறிவிட்டுப் போய்விட்டாங்க. இந்தக் கல்யாணம் நின்றுபோனால் எங்களால் அவமானத்தைத் தாங்கிக்க முடியாது. நானும் என் பெண்ணும் அதுக்குப் பிறகு வாழவேண்டிய அவசியம் இல்லே.'' சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

நெஞ்சு வெடிக்கும்படி குமுறிக்கொண்டு வந்த துயரத்தைத்தாங்கமுடியாது, விசும்பி அழ ஆரம்பித்தாள்.

தாழ்வாரத்தில் காலடி ஓசை கேட்டு, கண்களைத் துடைத்துக்கொண்டு எட்டிப் பார்த்தாள்.

''உங்களை நான் ரொம்பத் துன்புறுத்திட்டேன். மன்னிக்கவும். இந்தக் கடைசி நேரத்திலே கழுத்தை அறுக்கிறதைப் போல நான் பின்வாங்கறது ரொம்பத் தவறு. ஒரு பெண்ணின் வாழ்க்கை ஒரு குடும்பத்தின் மானம் இரண்டும் நாசமாக நான் காரணமாக இருக்கமாட்டேன். கவலைப்படாதீங்க. நாம் எல்லோரும் வாழப் பிறந்தவங்க. நல்லா வாழ்வோம். பெண்ணுக்குப் பிடிச்ச முகூர்த்தச் சேலை எடுக்க என் அக்காவை நான் நாளைக்கு அனுப்பி வைக்கிறேன்.'' பற்கள் பளிச்சிட மெல்லச் சிரித்தான்.

நெஞ்சம் நெகிழ்ந்துபோய், ''நன்றி முரளி... நன்றி'' என்றாள் அவள்.

''நல்லா நினைவிருக்கு. அந்த நிகழ்ச்சியை நான் மறக்கலை. நன்றியோட அடிக்கடி நினைச்சுக்கிறேன். இப்போ உங்களுக்குள்ளே எதுக்காகச் சண்டை ஏற்பட்டிருக்குனு சொல்ல முடியுமா?'' கேட்டாள்.

''இது சுமார் ரெண்டு மாதமா நடக்குது. நானும் விட்டுக் கொடுத்துக்கொண்டே இருந்தேன். பயன் சங்கதி விபரீதமாகப் போனதாலே, ஆத்திரம் தாங்க முடியலை. என் நிலையில் இருக்கும் எந்தக் கணவனும் சும்மா இருக்க மாட்டான்.''

''விளக்கமாச் சொல்லுங்க முரளி.''

''மெட்ரோ பிளாஸ்டிக் புரொடக்சன் சதாசிவத்தைப் பத்தி ஒரு சமயம் கேள்விப்பட்டிருப்பீங்க. அந்த சதாசிவத்தின் மகன் என்னோட கல்லூரியில் படிச்சவன். அமெரிக்காவில் படிப்பை முடிச்சுக்கிட்டு அவன் போன வருடம்தான் திரும்பி வந்திருந்தான். யதேச்சையா அவனை ஒரு விட்டுக் கல்யாணத்திலே சந்திச்சேன். நண்பன்னு நினைச்சு விட்டுக்கு அழைச்சேன். அவன் ரொம்ப நெருக்கமா அஞ்சனாகிட்டே பழக ஆரம்பிச்சான்.''

''நீங்க தடுக்க முயலவில்லையா?''

''எத்தனையோ தடவை எடுத்துச் சொன்னேன். கட்டுப் பெட்டித்தனமாப் பேசறேன்னு அஞ்சனா கத்தினாள். கல்யாணத்துக்கு அவனுக்குப் பெண் பேசி முடிச்சிருக்காங்க. முகூர்த்தத்துக்குக் கூடத் தேதி வச்சாச்சுன்னு கேள்வி. இந்த நிலையிலும் அந்த அயோக்கியன் என் வீட்டுக்குள்ளே வந்து, நான் இல்லாதபோது ரொம்ப நேரம் அஞ்சனாவோட உட்கார்ந்து பேசறான். வீடியோ பார்க்கிறான். சில நாள் ராத்திரிச் . சாப்பாட்டுக்கு



உட்கார்ந்துட்டு, வெகுநேரம் கழிச்சுக் கழுத்தைப் பிடிச்சுத் தள்ளாத குறையாக் கிளம்பறான்; இது எனக்குச் சுத்தமாப் பிடிக்கலை. அஞ்சனாகிட்டே சாதாரணமாச் சொல்லிப் பார்த்தேன்—அதட்டினேன். கடுமையாகத் திட்டினேன். அவள் கேட்கவில்லை. இவள் முகம் கொடுத்துப் பேசாவிட்டால், அந்த அயோக்கியன் ஏன் நம்ப வீட்டுக்குள்ளே நுழையறான்?''

வசுந்தராவின் முகம் அவமானத்தில் எரிந்தது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''முரளி! இந்த விவகாரத்துக்கு ஓரளவு நீங்களும் காரணம்னு நான் சொல்லுவேன். கோவிக்கக்கூடாது. கூடத்திலே போடவேண்டிய செருப்பை நடுக்கூடத்திலே வச்சுக்கிறீங்க. அதனால் ஏற்படுகின்ற சங்கடம், இது. ஆணும் பெண்ணும் சரிசமம். ஒப்புக்கிறேன். அதுக்காகத் தன் மனைவியோடு சிநேகிதன் தாராளமா நெருங்கிப் பேசலாம் அதில் தப்பில்லை என்று முதலில் நாகரிகம்னு நினைச்சு அனுமதிக்கிறீங்க. பிறகு நிலைமை கோளாறாகி விடும்போது கோபம் வருகிறது. ஆத்திரம் ஏற்படறது.

''அஞ்சனா என் மகள்தான். அதுக்காக நான் பரிஞ்சு பேசலை. ஆனால், தப்பு முழுதும் அவள் பேரிலேயே இருக்குன்னு நான் சொல்லமாட்டேன். என் பெண்ணா இருந்த வரை அந்தக் கல்யாணம் நின்றுபோய், ஒரு அவமானம் ஏற்பட்டதே, அதைத் தவிர, நான் அஞ்சனாவை எந்த ஆண்பிள்ளையோடேயும் நெருங்கிப் பழகிப் பேச அனுமதிச்சதில்லை. எங்க உறவினர்களின் பிள்ளைகள்கூட எங்க வீட்டுக்கு வந்தால் ரொம்பப் பயப்படுவாங்க. ஆண் பிள்ளைகள் யாரையும் கூடத்தைத் தாண்டி உள்ளே நான் அனுமதிச்சதேயில்லை. அஞ்சனா என் வீட்டில் இருக்கும் வரை, என் பேச்சுக்குக் கட்டுப்பட்டுத்தான் வளர்ந்தாள்.''

''பிசகு என்னுடையதுன்னு சொல்றீங்களா?'' கோபத்துடன் கேட்டான் முரளி.

''ஓரளவு தப்பு உங்களுடையதுன்னும் சொல்வேன். உங்க மனைவி அழகி, படிச்சவள், ரொம்ப நாகரிகம் தெரிஞ்சவள்னு காட்டிக்கணும்னு உங்களுக்குள்ளே ஒரு ஆசை. அதுக்காக அந்த ஆனந்தனை வீட்டுக்குள்ளே அனுமதிச்சிருக்கீங்க.''

''சரி. நான் தவறு செஞ்சுட்டேன். உஙக பெண்ணுக்குப் புத்தி எங்கே போச்சு?''

''அதான் சொல்ல வர்றேன். அவள் எங்க வீட்டிலே சேலை கட்டி, குங்குமப் பொட்டு வச்சுக்கொண்டு குடும்பப் பாங்காக வளர்ந்தவள். நீங்கள் அவளைப் பாண்ட்-சட்டை அலங்காரத்தில் பார்க்க ஆசைப்பட்டீங்க. நான் அவளுக்குத் தலையைப் பின்னிப் பூ வச்சு அழகு பார்த்தேன். நீங்கள் முடியை வெட்டிக்க அனுமதிச்சீங்க. அலங்காரத்திலே சுதந்திரம் தந்தது போதாது என்று, ஆண்களோட பழகிறதிலேயும் சுதந்திரம் தந்தீங்க. முதல்லே உரிமையைக் கொடுத்திட்டு, பிறகு சங்கடப்படுறீங்க...''

''நிலைமை இப்படி மோசமாகும்னுட்டு யார் கண்டது? நினைச்சா அவன் போன் பண்றதும், இவள் மணிக்கணக்கா உட்கார்ந்து பேசறதும், சிரிக்கிறதும், வீட்டுக்கு வந்துட்டா அவனுக்கு பலத்த உபசாரம் செய்யறதும் எனக்கு சகிக்க முடியலை. இதோட போச்சா? என் அலுவலகத்திலே என் கீழே வேலை பார்க்கிறவனுக்கு எப்படியோ இந்தச் சங்கதி தெரிஞ்சிருக்கு. என் காதிலே படறாப்பலே வேணும்னு அசிங்கமாப் பேசினப்போ, தாங்கிக்க முடியலை. என் மனைவியை ஆனந்தனுக்கு நான், விட்டுக் கொடுத்துப் பல வசதிகளைத் தேடிக் கொள்றதாகப் பேசுற பேச்சு, காதிலே காய்ச்சின ஈயத்தை ஊத்தினாப்பல துடிச்சுப் போயிட்டேன்.''

வியர்த்து விறுவிறுத்துப் போனாள் வசுந்தரா.

இந்தப் பாவிப் பெண் அஞ்சனாவுக்கு இத்தனை திமிரா? கணவன் பேச்சை எதிர்த்துக்கொண்டு, ஆனந்தனோட சிநேகிதமாகப் பழகி இத்தனை பெரிய கெட்ட பெயரை வாங்கிக் கொண்டிருக்கிறாளே!...



''நேத்து நான் வீட்டுக்கு வந்து உள்ளே நுழையலை, இந்தப் பயல் ஆனந்தன், பின்னால் காரில் வந்து இறங்கினான். கையில் ஒரு பெரிய பிஸ்கட் பாக்கெட்டு. அஞ்சனா சிரித்துக்கொண்டு வரவேற்றாள். 'தாங்க்யூ. ஏன் இத்தனை சிரமம்?' என்று அந்தப் பரிசை என் கண் முன்னே வாங்கிக் கொண்டாள்.''

''முரளியோட சாப்பிட்டுட்டு, வீடியோவிலே படம் பார்த்துட்டுட் போகலாம். அவசரமில்லையே'' என்று அஞ்சனா அவனை உபசரித்ததைப் பார்த்து என் ரத்தம் கொதிச்சுப் போச்சு. பத்து மணிக்கு மேலே ஆனந்தன் கிளம்பினான். என்னால் அதுக்கு மேலே பேசாமல் இருக்க முடியலை.

''ஆனந்தன், உனக்கு இன்னும் சில நாளில் கல்யாணமாகப் போகிறது. அதனால்,நீ உன் வீடு உன் வாழ்க்கைனு இருக்கிறது நல்லது'' என்று மெல்லச் சொன்னேன்.

''நீ பேசறது புரியலையே'' என்று கபடமாகச் சிரித்தான் அந்த அயோக்கியன்.

''விளங்கச் சொல்றேன் கேட்டுக்கோ. இனிமேல் நீ இந்தப் பக்கம் வர்றதை நிறுத்திவிடு. உனக்கு வரப்போற பெண்ணோட நான் நெருங்கிப் பழக ஆரம்பிச்சா விடுவியா? அதுபோல நீ இங்கே தாராளமா வர்றது போறது எனக்குப் பிடிக்கலை. இது சத்திரமல்ல, என் வீடு. நினைவு இருக்கட்டும்'' என்று கோபமாகக் கத்தினேன்.

ஆனந்தன் என்னை வெறித்துவிட்டு வெளியேறினான்.

''இனி இந்தப் பயலை நீ வீட்டுக்குள்ளே விட்டியோ நான் பொல்லாதவனா இருப்பேன்'' என்று அஞ்சனாவைப் பார்த்துச் சீறினேன்.

இரவு அதற்குப்பின் நாங்கள் பேசவேயில்லை.

காலையில் எழுந்து குளித்துவிட்டு, அலுவலகம் போகத்தான் ஆயத்தமானேன். மேசை மேலே அவன் விட்டுப்போன பரிசு என் கண்களை உறுத்தியது. ''அஞ்சனா, இங்கே வா. இதை எடுத்துப்போய்க் குப்பைத் தொட்டியில் போடு. இல்லாவிட்டால் நான் அவனுக்குத் திருப்பி அனுப்பிடுவேன்'' என்று கோபத்துடன் கத்தி னேன்.

அஞ்சனா பயந்து போய்விட்டாள். ஆனாலும் ஒரு பிடிவாதம். ''இப்போ என் மேலே என்ன குற்றம் கண்டு பிடிச்சுக் கூப்பாடு போடுறீங்க? நானும் பாத்துட்டுவரேன், ரெண்டு மாசமா நீங்கள் என்னை ரொம்பவே விரட்டு றீங்க'' என்று முணுமுணுத்தாள்.

''அப்படி என்னை நீ மாத்திட்டே! அது உன் பிசகு'' என்று நான் இரைந்தேன்.

காப்பிக் கோப்பைகள் கொண்ட மரத்தட்டை மேசை மீது அவள் வைத்தபோது என் மனம் ஆத்திரத்தில் மண்டிக் கொண்டிருந்தது.

''இன்னொரு தடவை அவனை நான் இந்த வீட்டு வாசலில் பார்த்தேனோ மென்னியை முறிச்சிடுவேன்'' என்று கத்திவிட்டு, உன் காப்பியும் உன் மூஞ்சியும்னு, கோபத்திலே தட்டைத் தட்டிவிட்டேன்.

''அவ்வளவுதான் உங்கள் பெண் 'ஓ' என்று அழுது கொண்டே உள்ளே ஓடினாள். பாண்ட்—சட்டையைக் கழற்றிவிட்டு, ஒரு சேலையைக் கட்டிகிட்டுத் தோள் பையைத் தோளில் மாட்டிகிட்டு, ''நான் போறேன்''னு கிளம்பி விட்டாள்.

''எங்கே போவேன்''னு நான் கத்த—

''எங்கேயோ போய்க்கிறேன். இனிமேல் என்னை சந்தேகப்படறவரோட என்னால் வாழ முடியாது. இந்த



மனவேதனையைப் பொறுத்துட்டு என்னால் உங்களோட காலந்தள்ள முடியாது''ன்னு அவள் கத்த—

நான் எட்டி அவளை ஒரு அறை வைக்க—

''என்னைக் கொல்றாரே! கொல்றாரே!''ன்னு கூப்பாடு போட்டு ஒரே ரகளை ஆயிடுச்சு.

''ஒரு வேடிக்கை என்னான்னா, இங்கே உண்மையிலே ஒரு கொலை நடந்தால்கூட கேட்கிறவர்கள் யாரும் கிடையாது. அக்கம் பக்கத்தவர்கள் கண்டுகொள்ள விரும்பாத சுயநலவாதிகள். அதனால் பிழைத்தேன்.''

அயர்ந்துபோய் உட்கார்ந்திருந்த வசுந்தரா விழித்துக் கொண்டாள்.

''இப்போ அவள் எங்கே போயிருக்கான்னு நினைக் கிறீங்க?''

''கழுதை கெட்டா குட்டிச்சுவர். அவளுக்கு லீலான்னு ஒரு சிநேகிதி உண்டு. உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். நேரே அவள் வீட்டுக்குப் போயிருப்பாள். நான் பின்னாலேயே தேடிக்கொண்டு போக விரும்பலை''

''வேலைக்காரியை அனுப்பிச்சிட்டு இந்த அலங் கோலத்தில் எப்படிக் காலங்கழிக்கிறதாக உத்தேசம்?'' சோகமாக முறுவலித்த வசுந்தரா எழுந்திருந்தாள்.

''முரளி! முதல்லே நீங்கள் அலுவலகம் போகத் தயா ராகுங்கள். கொஞ்ச நேரத்திலே நான் உங்களுக்கு டிபன் ஏதாவது தயார் செய்து தர்றேன்.''

''உங்களுக்கு ஏன சிரமம்?''

''பெத்தவள் சிரமப்படணும் அவமானப்படணும்னு என் பெண் நடந்து கொணடிருக்கிறாளே! முரளி, நீங்க பெரிய மனசு பண்ணி என்னையும் என் கணவர், மாமி யாரையும் மன்னிக்கணும். இப்படிப்பட்ட ஒரு அசட்டுப் பெண்ணைக் கொண்டு வந்து உங்க தலையில் கட்டி

விட்டோமேன்னு மனம் வேதனைப்படறது.'' சொல்லிக் கொண்டே சமையல் அறைக்குள் புகுந்தாள்.

சாமான் அலமாரியைத் தேடினாள். கொஞ்சம் ரவை ஒரு டப்பாவில் கிடைத்தது.

முரளி முகத்தை மழித்துக்கொண்டு மாற்றுடையில் அலுவலகம் போகத் தயார் ஆவதற்குள், சூடாக உப்புமாவையும் காப்பியையும் கொண்டு வந்து பரிமாறினாள்.

''இரவு சாப்பாட்டிற்கு உங்களை வீட்டுக்கு அழைக்க முடியும். ஆனால், நடந்த சங்கதியை உடனேயே என் கணவரிடம் சொல்ல அச்சப்படுகிறேன். அஞ்சனாவின் அப்பா, தன் மகளை ரொம்ப நேசிக்கிறார் ஆனால்,இந்த மாதிரியான பிழைகளைப் பொறுக்கவே மாட்டார். நான் வீட்டிலே கொஞ்சம் சமைத்து ஒரு டிபன் டப்பாவில் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டு வந்து வைத்துவிட்டுப் போறேன். நீங்க ராத்திரிக்கு அதை வச்சுக்கோங்க. பிறகு நாளைக்குள் நிலைமை மாறலாம்.''

''என்ன அப்படி திடீர்னு மாறிடப் போறது? எங்கே போறேன்னு சொல்லாமல், ஒரு மனைவி வீட்டைவிட்டு வெளியே போனால், அதற்கு என்ன அர்த்தம்? 'என்னால் வாழ முடியும். உன் தயவு தேவையில்லை' என்கிற சவால் தான் அது'' முரளியின் முகம் சிவந்துபோனது. வார்த்தைகள் உடைந்தன.

''மறுபடியும் உங்ககிட்டே நான் கேட்டுக்கிறேன். கொஞ்சம் பொறுமையா இருந்து என் பெண்ணுக்கு வாழ்க்கை கொடுங்கள்.'' வசுந்தராவுக்கு அழுகை தொண்டையை அடைத்தது

''அவளுக்கு நான் எல்லாம் கொடுத்தேன். என்னை எப்படித் துச்சமா நடத்திவிட்டாள்!'' கோபத்துடன் பேசினான் முரளி.



''எனக்காக—இந்தத் தாயாருக்காக என் பெண்ணை மன்னிச்சுடுங்கோ. கண்டதை நம்பிவிடும் பெரும் வெகுளி அவள்.''

''அஞ்சனா மேலே நான் உசிரையே வச்சிருந்தேன்.'' சூள் கொட்டினான் முரளி.

''வச்சிருப்பீங்க. கடைசிவரை அவளோட அன்பான கணவனா இருப்பேன்னு முடிவு எடுத்துக்கோங்க. இது ஏதோ போறாத காலம். முரளி, உங்களை ஒண்ணு கேட்கிறேன். இப்போ அவள் திரும்பி வந்து கதவைத் தட்டினால், என்ன செய்வீங்க?''

''என்ன செய்வேன்? என் மனசிலே அந்தச் சமயம் என்ன தோணறதோ அதைச் செய்வேன்'' என்று கூறிவிட்டு முரளி வெளியே கிளம்பினான்.

## 7

மருமகன் திருப்பிக் கொண்டு வந்து காரில் வீட்டு வாசலில் இறக்கிவிட்டுப் போனான்.

மனம் கனத்து, நெஞ்சு வெடிக்கும் துயரச் சுமையோடு வசுந்தரா உள்ளே நுழைந்தாள்.

''கல்யாணப் பத்திரிகை ஒண்ணு வந்திருக்கு'' என்று அவளிடம் மாமியார் நீட்டியதை வாங்கிக்கொண்டாள்.

ஆனந்தனுக்கும், அவனது சகோதரிக்கும் சில நாட்களில் விமரிசையாக நடக்க விருக்கும் திருமண அழைப்பிதழ் அது.

''பெரிசா பத்திரிகை போட்டிருக்காங்களே! யாராம் அது?'' ஆவலை அடக்கமாட்டாது கேட்டாள் சிவகாமி.

''எங்கள் சங்கத்து உறுப்பினர் ஒருத்தி வீட்டுக் கல்யாணம். மரியாதைக்கு எனக்கும் பத்திரிகை அனுப்பியிருக்காள்'' என்று கூறிவிட்டு, உள்ளே சென்றாள்.

அதற்குப் பின் வசுந்தராவுக்கு நேரம் ஒவ்வொரு வினாடியும் நீண்டு யுகம் போலக் கனத்தது.

வெளியேறிவிட்ட மகளை அவள் எங்கே போய்த் தேடுவாள்?

இந்தச் சங்கதியை அவள் எத்தனை நாட்கள் கணவனுக்கும் மாமியாருக்கும் தெரியாது மூடிமறைக்க இயலும்?

இந்தப் பெரும் பிரச்சினை பாறாங்கல்லாகத் தலையை அழுத்தியது.

தோழிகள் வீட்டுக்கு அடிக்கடி நடையைக் கட்டும் சிவகாமிக்குக் காற்று வாக்கில் சங்கதி காதில் விழுந்துவிட்டால்?

அலுவலக நண்பர் எவர் மூலமாவது கணபதிக்கு மகளின் வெளிநடப்பு தெரிந்துவிட்டால்?...

வீடு இரண்டுபட்டுவிடுமே!

அஞ்சனா செய்த தவற்றைவிட, வசுந்தரா மறைத்து வைத்தது பெரும் குற்றமாகக் கணபதி ஆர்ப்பரிப்பாரே?

வேதனையில் குழம்பிப் போனாள், வசுந்தரா.

அன்று மாலை வீடு திரும்பிய கணபதி, உற்சாகமாகக் காணப்பட்டார். ''உன்கிட்டே போன வாரமே சொல்ல நினைச்சேன். மறந்துட்டேன். எங்கள் நிறுவனம் ஒரு கிளை அலுவலகத்தைக் கோயம்புத்தூரில் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கு. நானும் என் பங்குதாரரும் நாளைக் காலை ரெயிலுக்குக் கிளம்புறோம். டிக்கெட் ஏற்பாடாகிவிட்டது. திரும்பிவர ஒரு வாரமாகும்.'' பள்ளிப் பிள்ளை சுற்றுலா கிளம்பிவிட்டது போன்ற ஆனந்தத்தில் பல்லைக் காட்டினார்.

''வசு, என் பெட்டியிலே ஒரு வாரத்துக்குத் தேவையான துணிகளையும் மத்த சாமான்களையும் அடுக்கித்



தயாரா வச்சுடு'' என்று ஆணையும் பிறப்பித்தார். தனக்கு என்று எதையுமே செய்துகொள்ளத் தெரியாத மனிதர்.

சின்ன வயதில் அம்மாவின் கவனிப்பு. அதற்குப் பின் மனைவியின் அனுசரணை என்று வாழப் பழகிக்கொண்டவர்.

சாதாரண நாட்களாக இருந்தால் வசுந்தரா கவலைப்பட்டிருப்பாள். வெளியூர் பயணங்களின்போது அவள் எப்பொழுதும் கூடவே துணையாகச் செல்வது வழக்கம். குளிக்கச் சோப்பு, துவாலையில் இருந்து வெளியே கிளம்பச் சட்டை, பாண்ட் வரை அவள் எடுத்து வைத்து உபசரிக்க வேண்டும்.

''என் பேனா எங்கே? கைக்குட்டையை எங்கே வச்சேன்? கண்ணாடிக் கூண்டைப் பார்த்தியா?'' என்று தடுமாறுகிறவர். ஒரு வார காலம் தனியே ஓட்டலில் எப்படிச் சமாளிக்கப் போகிறாரோ என்று கவலைப்பட்டிருப்பாள்.

ஆனால், இப்போது அவளுக்கு மகளின் பிரச்சினைதான் அசுர வடிவில் கண்முன் நின்று பயமுறுத்தியது.

கணவன் திரும்பி வருவதற்குள், இதற்கு ஒரு தீர்வு கண்டுவிட வேண்டும் என்ற பரபரப்பு மனதை நெருக்கியது!

அடுத்த நாள் காலை, சிவகாமி வெளியே செல்லத் தயார் ஆனாள். ''கணபதி வீட்டிலே இல்லாதபோது தான் சவுரியப்படும் என் தோழியோட நான் நங்கநல்லூர் வரை போய் விட்டு வர்றேன். அங்கே அம்பாளைத் தரிசிச்சுட்டு, இருட்டறதுக்கு முன்னாடி வீடு திரும்பிடுவேன். கவலைப்படாதே! கார் வச்சுக் கூட்டிகிட்டுப் போய் சுவாமி தரிசனம் செய்ய வச்சு, சாப்பாடு போட்டு அனுப்பப் போறா! யார் எனக்கு அப்படி எடுத்துச் செய்யப் போறாங்க? அதனாலே...''

''போயிட்டு வாங்கோ!'' என்று மிகவும் நிம்மதியுடன் விடை கொடுத்து அனுப்பினாள், வசுந்தரா.

வீட்டில் மாமியாரும் இல்லாது, கணவனும் வரமாட்டார் என்ற ஒரு தனிமையில் அவள் தீவிரமாகச் சிந்திக்கணும்.

அருகில் இருக்கும் மளிகைக்கடைத் தொலைபேசியில் முரளியைக் கூப்பிட்டு விசாரிக்க வேணும்.

அந்தப் பெண் லீலா வீட்டுக்கு நேரிடையே போய்ப் பார்த்தால்?

பலவிதமாக எண்ணியபடி அவள் பரபரப்புடன் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது, வாயில் அழைப்பு மணி ஒங்கி ஒலித்தது.

கதவைத் திறப்பதற்குள் இன்னொரு முறை ஒலித்து எரிச்சலை ஊட்டவே, வழக்கம் போலக் கண்ணாடி வழியே பார்க்காது, அவசரமாகக் கதவைத் திறந்து விட்டாள்.

பெரிய ஒரு பெட்டியைத் தூக்கமாட்டாது சுமந்தபடி, மாக்சி உடையில், அவளது அருமை மகள் அஞ்சனா நின்று கொண்டிருந்தாள்.

திகைப்பும் ஆத்திரமும் அழுகையும் ஒருங்கே உள்ளத்தை உலுக்க, வசுந்தரா அவளை வெறித்துப் பார்த்தாள்.

''அம்மா! நான் முரளியை விட்டுட்டு வந்துட்டேன்.'' கன்னங்களில் கண்ணீர் மாலையிட மகள் விசும்பினாள்.

''வாசல்லே நின்னுகிட்டு வீட்டு சங்கதியைத் தெரு வரை விலை பேச வேணாம். பெட்டியை நடையிலே கொண்டு வந்து வை. பிறகு எல்லாத்தையும் சொல்.'' தாய் அதட்டினாள்.



கதவைத் தாளிட்டுக்கொண்டு மகளின் முகத்தைக் கடுமையாகப் பார்த்தாள். இந்த இரண்டு மாத காலத்தில் அஞ்சனா இளைத்துக் கறுத்துப் போயிருந்தாள்.

''சில நாளா எனக்கும் முரளிக்கும் ஒரே சண்டை!''

''காரணம்?''

''அவர் ரொம்பக் கடுமையா என்கிட்டே நடந்துக்கிறார்.''

''எரிகிற சிகரெட்டுத் துண்டத்தாலே. உன்னைச் சுட்டுப் பொசுக்குகிறாரா? கொள்ளிக்கட்டையாலே கை மேலே காயப்படுத்தறாரா? சாட்டையால அடிக்கிறாரா? கொடுமையானவன்னு குத்தம் சொல்ற அளவுக்கு அவர் என்ன செய்கிறார்? முரளி ரொம்ப சாதுவான பிள்ளையாச்சே? நீதான் அவனைக் கொடுமையா நடத்தறேன்னு நினைக்கிறேன்.'' ஆத்திரத்துடன் சீறினாள் தாய்.

''இல்லேம்மா, சதா ஒரே சந்தேகம். பேசினால் தப்பு, நின்னு பார்த்தால் தப்பு, திரும்பினால் தப்புன்னு சதா குத்தம் கண்டுபிடிச்சுக்கிட்டேயிருக்கார்.'

''எதுக்கு அழணும்? கண்ணைத் துடைச்சுண்டு பேசு. உன் பேச்சை நான் நம்ப மாட்டேன். வீட்டுக்கு வரும் பால்காரன்கிட்டே பேசக்கூடாதுன்னு" தடுத்தாரா? காய்கறிக் கடைக்காரரிடம் பேசிப் பொருள் வாங்கறது தப்புன்னு நிறுத்தினாரா? அவரோட நண்பன்னு நய வஞ்சகமா வீட்டுக்குள்ளே வந்து பல்லைக்காட்டுகிற அயோக்கியன்களோட பேசறது தப்புன்னு தடுத்தார். நியாயந்தானே? உங்கப்பாவோட சிநேகிதர்கள் எத்தனையோ பேர் வீட்டுக்கு வராங்க. மரியாதையா வணக்கம்னு சொல்றாங்க. உடனே நான் அவங்களோட பேசறதுக்கு உட்கார்ந்துடறேனா? உன்னைப் போலச் சிரிச்சுக் கொம்மாளமடிச்சுப் பேச ஆரம்பிச்சா உங்கப்பா, என்னை வெட்டி பலி போட்டுடுவார். அதுக்காகப் பயந்துண்டு நான் ரொம்பக் கட்டுப்பாடா நடக்கிறேன்னு

நினைக்காதே. நம்ப கணவன் மனம் நோகறாப்பல எதுவும் செய்யக்கூடாது. அவர் மனம் புண்ணாகிறாப்பல எதுவும் செய்யக்கூடாது புரிஞ்சுகொண்டு வாழத் தெரிஞ்சுக்கிறதுதான் வாழ்க்கையோட ரகசியம்.''

''முரளிக்கு ரொம்பக் குறுகின புத்தி. நண்பன் ஆனந்தன் கொண்டு வந்து பரிசா கொடுத்த பிஸ்கெட் டப்பாவைக் குப்பைத் தொட்டியில் கோபத்தோட வீசிட்டார்.''

''நான்கூட அப்படித்தான் செய்திருக்கணும். அன்னிக்கு உன் பீரோவல் இருந்து எடுத்து வந்த பரிசுப் பொட்டலத்தை ஆனந்தன் தங்கச்சி ராதிகாகிட்டே கொடுத்திட்டேன். உன் கணவன் எதிரே, பரிசுகள் கொண்டு வந்து கொடுக்க அவனுக்கு எத்தனை துணிச்சல்? நீ எத்தனை இடம் கொடுத்திருக்கே. முரளி சும்மா நண்பன்னு பழகினான். ஆனால், அவன் அப்படி நினைக்கலையே? அவன் குடும்ப கவுரத்துக்குத்தக்கபடி ஒரு பெரிய மனிதர் வீட்டுப் பெண்ணைக் கட்டிக்கப் போறான். ஆனால், மன சந்தோசத்துக்கு உன்னைப் போல ஒரு அழகான பெண்ணின் சிநேகிதம் அவனுக்குத் தேவைப்படுகிறது. உன் வாழ்க்கையை வச்சுக்கிட்டுப்பகடை ஆடுகிறான். அது தெரியாமல் நண்பன், அது இதுன்னு நீ பத்தறே? இன்னும் பத்து நாளில் அவனுக்குக் கல்யாணம்'' என்று கூறியபடி அலமாரியில் இருந்த திருமணப் பத்திரிகையை எடுத்து வந்து அவள் முன் நீட்டினாள்.

திகைப்புடன் அதைக் கையில் வாங்கிப் பார்த்தாள் அஞ்சனா. ''என்கிட்டே கூடச் சொல்லலையே?''

''ஏன் சொல்லணும்? தெரியாத வரை, ஒரு அழகான பெண்ணோட வேடிக்கையா பேசி மகிழலாம்னு ஆசை. அது கிடக்கட்டும். நீ வாழ்க்கையிலே என்ன எதிர்பார்க்கிறாய்? கண் நிறைஞ்ச கணவன், கைநிறையச் சம்பாதிக்கிறான். பூப்போல உன்னை வச்சுக் காப்பாத்தறான்.



இதைவிட இன்னும் என்ன வேணும்? திமிர் பிடிச்சுப் போய், அந்த அயோக்கியனோட சிரித்துப் பேசறதும்... தூ! உனக்கு வெட்கமில்லை?'' ஆத்திரத்துடன் கத்தினாள், வசுந்தரா.

''முரளி சண்டை போட்டுக்கொண்டு அசிங்கமா என்னைப் பேசினார் கைநீட்டி அடிச்சுட்டார், அம்மா...''

''ஒரு பூச்சியைக்கூடத் தொட்டு இம்சிக்கத் தெரியாத சாதுப் பிள்ளையை நீ அப்படி மாறும்படி செய்திருக்கே. இத்தோட விட்டாரே, அதுவரைக்கும் அவர் நல்லவர். வேறு ஒருவனா இருந்திருந்தால் சாட்டையால் உன்னைப் பின்னி விட்டிருப்பான்.''

''அம்மா! இந்த அவமானத்துக்குப் பிறகு அவரோட என்னால் வாழமுடியாது. அதனாலே புறப்பட்டு வந்துட்டேன்.'' விசும்பினாள் அஞ்சனா.

''முதல்லே கண்ணீரைத் துடைச்சுக்கோ. இதெல்லாம் அழுது சாதிக்கிற காரியம் இல்லே! நீ இப்போ நேரே உன் வீட்டில் இருந்துதானே வர்றே?''

''இல்லேம்மா. நேத்து காலை நான் கோவிச்சுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே வந்தேன். அவர் ஆபீசுக்குப் போன பிறகு என் துணிகளை எடுத்துட்டு வரலாம்னு என் தோழி லீலா வீட்டுக்குப் போனேன்.''

''அவள்கிட்டே நடந்ததைச் சொல்லி ஒருமூச்சு அழுதியாக்கும்?''

''அவள் எனக்காக ரொம்பப் பரிதாபப்பட்டாள். நேத்து முழுதும் தன் வீட்டிலே தங்க வச்சு, காலையில் தான் அனுப்பினாள்.''

'உனக்கு இதைச் சொல்ல அவமானமா இல்லே? உன் வீட்டைவிட்டு வெளியே போய் ஒரு ராத்திரி தோழி வீட்டிலே கழிச்சிருக்கே. உன் கணவர் இதை நம்பா விட்டால் என்ன பண்ணுவே?''

''நம்பாவிட்டால் போகட்டும். நான் அவரோட வாழ நினைத்தால்தானே கவலைப்படணும்?''

''மேலே என்ன பண்ணறதாக யோசனை?''

''அப்பாகிட்டே நடந்ததைச் சொல்லி, எனக்கு முரளி கிட்டேயிருந்து விவாகரத்து வாங்கித் தரக் கேட்பேன்.''

''மூச்சு விட்டால் விவாகரத்தா? பலே! உன் அப்பாவைப் புரிஞ்சுகொண்டது இத்தனைதானா? அருமைப் பெண்ணுன்னு அவர் உனக்குச் செல்லம் கொடுத்துச சீராட்டறதைக் கண்டு ஏமாந்துவிட வேண்டாம். நீ தப்புத் தண்டாவிலே இறங்கிட்டேன்னு தெரிந்தால், மூஞ்சியிலே விழிக்கமாட்டார். அத்தனை கறார் பேர்வழி.''

''கல்யாணம் என்கிறது, கடையில வாங்கற சரக்கா நினைச்சபோது மாத்தி எடுத்துவர? ஏற்கனவே உன்னால நாங்க ரொம்ப அவதிப்பட்டிருக்கோம். இனிமேலும் பழிகளை எங்களால் சுமக்க முடியாது. நல்லா அமைச்சுக் கொடுத்த வாழ்க்கையை நீயே குலைச்சுக் கொண்டிருக்கே. இப்போ நீயேதான் சீராக்கிக்கணும் போ! அவர்கிட்டே போய் மன்னிப்புக் கேள்.''

''ஏத்துக்க மாட்டேன்னா?''

''அவர்பாடு, உன்பாடு. உன்னைக் கட்டிக்கொடுத்த பிறகு எங்க பொறுப்பு தீர்ந்துபோச்சு. நினைவிருக்கட்டும்.''

''நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டால், நான் எங்கே போவேன்?''

''அதான் தோழிகள் இருக்காங்களே? வச்சுக் காப்பாத்துவாங்க இல்லையா?''

''நீங்க ரொம்ப ஏளனமா பேசறீங்க. தோழிகள் வீட்டில் எத்தனை நாள் இருக்க முடியும்?''



''பிறந்த வீட்டில் மட்டும் காலமுச்சூடும் இருக்க முடியுமா? விவாகரத்துச் செய்து கொண்டு மேலே படிச்சு, என் வாழ்க்கையை நானே அமைச்சுக்கிறேன்னு வீம்பு பேசுவே. அப்படியும் செய்ய முடியும். ஆனால் அந்த வாழ்க்கையில் உனக்கு நிறைவு இருக்குமா? வேலை செய்கிற இடத்திலே நிம்மதிதான் இருக்குமா?

''அதோ போறாளே, அவள்தான் முரளியோட முன்னாள் மனைவி. அவன் விவாகரத்துச் செய்து ஒதுக்கிட்டான். எல்லாம் நடத்தைதான் காரணம் அப்படின்னு கிசுகிசுப்பாங்க.

''வேறே ஒருவனைக் கல்யாணம் செய்துகொள்வேன். அது முடியாதான்னு கேட்பே. இந்தக் காலத்திலே முடியாதது என்ன? முடியும்! ஆனால், அவன் உன்னை மரியாதையா நடத்துவான்னு செல்ல முடியாது. உன் சங்கதி தெரியாதா? மூத்த கணவனை உதறிட்டு வந்தவள். என்னை எப்போ விட்டுட்டு ஓடுவியோன்னு நிந்திப்பான். ஆனால், முரளியின் சங்கதியே வேறாக இருக்கும். 'அந்த அடங்காபிடாரிக்குத்தான் வாழக் கொடுத்து வைக்கலை அதனால் என்ன! முரளிக்குக் கிளியாட்டம் ஒரு மனைவி கிடைச்சுட்டாள். ரெண்டு பேரும் சுகமாக இருக்காங்க!' என்று உன்னைத் தூற்றி, அவரை ஏற்றிப் பேசுவாங்க.''

''அம்மா! என்னை நிக்க வச்சுக்கிட்டே பேசுகிறீங்க.'' சிணுங்கினாள் மகள்.

'உட்காரச் சொல்லி உபசரிச்ச காலம் போச்சு!''

''என்னம்மா ரொம்பக் கடுமையா இருக்கீங்க. நீங்கள் பெத்த மகள்னுகூட மறந்து, வெறுப்பா பேசறீங்களே.'' மறுபடி விசும்பினாள்.

''பெத்த வயிற்றில் பிரண்டையைக் கட்டிக்கிட்டால் தேவலைன்னு மனம் நொந்து பேசறேன்.''

''அம்மா எனக்குப் பசிக்குது! சாப்பிடுன்னுகூடச் சொல்லாமல் திட்டிக்கிட்டே இருக்கிங்களே, நான் இங்கே வராமல் எங்கே போவேன்?''

''முதல்லே உன் பெட்டியைத் தூக்கிட்டு வெளியே கிளம்பு! நீ இங்கே வந்தாலும் உன்னை உள்ளே சேர்க்கிற எண்ணம் எனக்கில்லே.''

''அப்பா வரட்டும் பேசிக்கிறேன். பாட்டியைக் கூப்பிடுங்கள். நியாயம் கேட்கலாம்.'' அழுதுகொண்டே கிரீச்சிட்டாள் மகள்.

''உன் அப்பா ஊரில் இல்லை. அவர் வந்ததும் நான் செய்ததுதான் சரி என்பார். உன் பாட்டி வீட்டில் இல்லை. இப்போ அம்மா நான் சொல்றேன் முதல்லே பெட்டியைத் தூக்கிட்டு நட. இது என் வீடு. நான் நிம்மதியா இருக்க விரும்பறேன். இப்படி வரும் சங்கதியை இத்தோட நிறுத்திக்கொள்.''

''அம்மா! உங்களுக்கு ஈவு இரக்கம் எதுவும் கிடையாதா?''

''கிடையாது. வெளியே நட! உம்...சீக்கிரம்.''

நீர்முட்டிய கண்களால் தாயைக் குரோதமாகப் பார்த்தாள்.

''இத்தனை சொன்னபிறகு நானும் ஒண்ணு சொல்றேன். இனி தப்பித்தவறிக்கூட இந்த வீட்டுக்குள்ளே நான் நுழையமாட்டேன். உங்களுக்கு ஒரு மகள் இருந்தாள் என்கிறதை நீங்க மறந்துடுங்க. எனக்கு ஒரு தாய், பிறந்த வீடு இருந்தது என்கிறதை நான் மறந்துடறேன்.''

''மகளே...சமத்துன்னானாம். அப்படியே செய்வோம்.''

கனமான பெட்டியைத் தூக்கமாட்டாது சுமந்துகொண்டு, கண்களைத் துடைத்தபடி வெளியேறிய



மகளைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே நின்றாள் வசுந்தரா.

அஞ்சனா திரும்பிப் பாராது தெருவில் நடந்துகொண்டிருந்தாள்.

வாயிற்கதவை அடைத்துக்கொண்டு உள்ளே திரும்பியவளின் கால்கள் தள்ளாடின. வீடே சூனியமாகிவிட்டது போன்ற பிரமையில், கூடத்து நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து விட்டாள்.

சற்று முன் அவளிடம் ஏற்பட்டிருந்த அந்தத் துணிவும் கடுமையும் எங்கேயோ மறைந்துகொண்டுவிட்டன போன்ற ஒரு வியப்பு!

காய்ச்சல் வந்துவிட்டது போன்ற ஒரு நடுக்கத்திலே கையும் காலும் பதறியது. நெஞ்சை யாரோ கசக்குவது போன்ற ஒரு வேதனை. பொழுது உச்சியைத் தாண்டி விட்டதை உணர்ந்து, மெல்ல எழுந்து, முற்றத்தில் இறங்கிக் கை கால்களைக் கழுவிக் கொண்டாள்.

அலமாரியில் இருந்த தன் சாப்பாட்டுத் தட்டை எடுத்துத் தரைமீது வைத்தாள்.

காலையில் சமைத்த உணவு. ஆறிச் சில்லென்று சோறு விரைத்துப் போயிருந்தது.

வேண்டா வெறுப்பாகச் சாதத்தையும் குழம்பையும் பரிமாறிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள்.

சுள்ளென்று எரித்த வெயிலில் பட்டினியாக மகளை அனாதைபோலத் துரத்திவிட்டோமே என்ற ஆதங்கம் நெஞ்சை அடைக்க, தாய்ப் பாசம் குடலை முறுக்க, சாப்பிட முடியாது எழுந்து கையைக் கழுவிக்கொண்டு சோபாவின் ஓரத்தில் உட்கார்ந்து, ஓவென்று அழுதாள். அடக்க மாட்டாது வெகுநேரம் அழுதுகொண்டேயிருந்தாள்.

# 8

அதற்குப்பின் இரண்டு நாள், ஒரு யுகம்போல நீண்டு, பயங்கரமாக மெல்ல நகர்ந்தது. வீட்டு வேலை எதிலும் மனம் செல்லாது வசுந்தரா தவியாய்த் தவித்தாள்.

அத்தனை கடுமையாக அவள் நடந்துகொண்டது சரியா?

உணர்ச்சிகள் குழம்பிக் கொந்தளித்துப்போகும் அஞ்சனா, கோபத்துடன் புறப்பட்டுப் போனவள் என்ன செய்திருப்பாள்?

தன் தோழி வீட்டுக்கு மறுபடியும் போயிருப்பாளோ? அல்லது...அல்லது...நினைக்கமுடியாத பல கற்பனைகள் நெஞ்சில் எழ, உடம்பு சில்லிட்டுப் போனாள்.

வீட்டையே வளைய வந்து கொண்டிருந்ததால், பைத்தியம் பிடித்துவிடும் போல ஒரு உணர்வுகளின் அழுத்தம். மண்டையை வலித்தது.

அந்தி வேளை நெருங்குமுன், வீட்டுத் தேவைக்குக் காய்கள் வாங்கிவரக் கடைத்தெருவுக்குப் புறப்பட்டாள்.

மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. என்ன வாங்குகிறோம், எது தேவை என்கிற நினைப்பின்றி, கடைக்காரர் கொடுத்ததை வாங்கிக் கூடையில் போட்டுக்கொண்டு பணம் கொடுக்கத் தன் பர்சைத் திறந்து சில்லறையைத் தேடிக் கொண்டிருந்தவள், தோளை யாரோ மெல்லத் தொடுவதை உணர்ந்து, திகைப்புடன் திரும்பினாள்.

அவளுடைய சிநேகிதி. அடுத்த தெருவில் வசிக்கும் நர்மதா.

''நலமா இருக்கீங்களா? பார்த்து ரொம்ப நாளாச்சு.'' சொல்லிக்கொண்டே கடைக்காரருக்குப் பணத்தைக்



கொடுத்துவிட்டு, கூடையைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

''அமெரிக்காவில் இருக்கிற மகன் வரச்சொல்லிக் கூப்பிட்டிருந்தான். போய் ஆறு மாதம் தங்கிவிட்டு, போன திங்கள்தான் திரும்பினேன். என்ன இருந்தாலும், பிறந்த ஊரின் மதிப்பே வேறதான். அதன் சுகமும் தனிதான்.'' சிரித்தாள் நர்மதா.

வசுந்தராவுக்கு நின்று நிதானித்து யாருடனும் பேசிக்கொண்டிருக்கப் பொழுது இல்லை. பொறுமையுமில்லை. மனமும் இல்லை. உள்ளம் புண்ணாகி விட்டது போன்று, சதா ஒரு வேதனையில் துவண்டு கொண்டிருந்தாள்.

''ஒரு ஆச்சரியம்! நேத்துதான் உன்னை நான் நினைச்சேன். வந்து பார்க்கணும்னு ஆசையா இருந்துச்சு. இன்னிக்கு நான் உன்னைப் பார்த்துட்டேன். உன் மகளையும் பார்த்துட்டேன்.''

எச்சிலை விழுங்கிக்கொண்டாள் வசுந்தரா. எங்கே என்று கேட்கத் துணிவு இருக்கவில்லை. மார்பு வேகமாகத் துடித்தது.

''அப்படியா!'' என்றாள் மெல்லிய குரலில்.

''என் பேத்திக்குப் பட்டுப் பாவாடை வாங்க, மாம்பலம் ரம்யா துணிக்கடைக்கு சித்த முன்னேதான் போயிருந்தேன். அங்கே உன் மகள் அஞ்சனாவையும் அவள் கணவன் முரளியையும் பார்த்தேன் ''

மேலே சொல்லமாட்டாளா என்ற ஆவல்! மூச்சுத் திணறிவிடும் போலத் தவித்தாள் வசுந்தரா.

''மாமி! இந்த வண்ணம் எனக்குப் பொருந்துமா 'ன்னு சிரிச்சுக்கிட்டு வந்து, என்கிட்டே ஆரஞ்சு வண்ணக் காஞ்சீபுரம் பட்டுச் சேலையைக் காட்டினாள்

உன்மகள். ''உனக்கு எல்லா வண்ணமுமே பொருந்துமே'' என்று அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினேன்,

''இத்தனை விலையிலே எதுக்குச் சேலைன்னு சொன்னால் இவர் கேட்கமாட்டேங்கறார்''னு சிணுங்கினாள்.

''கணவன் மனைவின்னா அப்படித்தான் இருக்கணும், வசுந்தரா. உன் மருமகன் முகத்திலே எத்தனை சிரிப்பு. உன் மகளைப் பார்த்தால், பூரிச்சுப் போயிடுவே, பளபளன்னு தங்க பொம்மையாட்டம்; நான் முன்னே பார்த்ததைவிட ரொம்ப அழகா இருக்காள். கணவனும் மனைவியும் சந்தோசமா இருந்தால், தானே ஒரு அழகு வந்துடறதே! என்ன அப்படிப் பார்க்கிறே! என் கண்ணு பொல்லாததல்ல. அஞ்சனாவும் அவள் கணவனும் நல்லா தீர்க்காயுசுடன் இருப்பாங்க, கவலைப்படாதே.'' மடமடவென்று பேசினாள்.

''இந்தச் சேலை அழகா இருக்கு. ஆசையோட வாங்கித் தரார். எடுத்துக்கோன்னு சொல்லி முதுகைத் தட்டிக் கொடுத்துட்டு வந்தேன். வரட்டுமா?'' விடை கேட்டாள்.

வசுந்தராவால் பேசவே முடியவில்லை. தாங்கமுடியாத மகிழ்ச்சியில் கண்கள் பனித்துப் போயின. இதயம் வெடித்து விடும் போல, ஆனந்தத்தில் வேகமாக அடித்துக் கொண்டது.

அப்படியென்றால், அவள் மகள் அஞ்சனா நேரே தன் வீட்டுக்குத்தான் போயிருக்கிறாள். மனைவியைக் கண்ட மகிழ்ச்சியில் மன்னித்து, ஏற்றுக்கொண்டிருக்கிறான். இந்தச் சமாதானத்தின் காணிக்கைதான், சேலைப் பரிசு போலும்!

போகட்டும். அவர்கள் இருவரும் இணைந்து விட்டார்களே. அதுவே பெரிய காரியம். மகள் அவளிடம் பேசாவிட்டால் அக்கறை இல்லை. இனி அவளைத் தேடிக் கொண்டு பிறந்த வீட்டுக்கு வராவிட்டாலும் பரவா



யில்லை. அவள் எங்கேயாவது சுகமாக, கவுரமாகக் கணவனோடு நல்லதொரு மனைவியாக வாழ்ந்தால் போதும்!

வீட்டை நோக்கி நடந்தவளின் பார்வையைக் கண்ணீர் மறைத்தது. தட்டுத்தடுமாறிக்கொண்டு, உள்ளே நுழைந்து கூடையைச் சமையலறைத் தரையில் வைத்துவிட்டு, பின்பக்கம் சென்றாள்.

அவள் கடுமையாக மகளிடம் நடந்துகொண்டது வீண் போகவில்லை.

ஒரு தாய் தன் குழந்தையின் நல்வாழ்வுக்காகப் பல விதத்தில், பல சமயங்களில் தியாகம் செய்துதான் ஆக வேண்டும்.

மகளின் உறவை முறித்துக்கொண்டு விட்டதுதான், வசுந்தரா செய்த தியாகம். அதை எண்ணியபோது, குமுறிக்கொண்டு வந்த அழுகையை அடக்கமாட்டாது அவள் மகிழ்ச்சியும் துயரமுமாக விம்மினாள்.

ஒரு வார காலத்திற்குப்பின் வீடு திரும்பிய கணபதிக்கு ஒரே கவலை. இந்தச் சில நாட்களில், மனைவி இளைத்துச் சருகாகி விட்டிருக்கிறாளே?

''வசு, உன் உடம்புக்கு என்ன?'! ஆதங்கத்துடன் விசாரித்தார்.

''நல்லா கேளு நானும் பார்த்துகிட்டேதான் இருக்கேன். நீ ஊருக்குப் போனதில் இருந்து இவள் நல்லா சாப்பிடறதில்லை. தூங்கறதில்லை. என்னவோ பேயறைஞ்சது போல நடமாடிகிட்டிருக்காள். முதல்லே இவளை நம்ம டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போய்க் காட்டு.'' கிழவி சிவகாமி புலம்பினாள்.

''தேவையில்லை. எல்லாம் சில நாளில் சரியாகிவிடும்'' என்று மறுத்தாள் வசுந்தரா.

"உன் பெண்ணுக்கு போன் பண்ணி வரவழைக்கிறது தானே! கூடமாட இரண்டு நாள் அம்மாவுக்கு ஒத்தாசையா வீட்டு வேலைகளைக் கவனிக்கக்கூடாதா?" கணபதி சலித்துக் கொண்டார்.

"நல்லா சொன்னே போ! உன் மகளுக்கு உதவி செய்யவே நாலு ஆளு வேணும். மேலும் அவள் இப்போ ரொம்பவே மாறிப்போயிருக்கா. முரளி என்ன சொன்னானோ தெரியாது. இந்தப் பக்கமே வர்றதில்லை."

கணபதியின் மனதை அந்தச் சங்கதி சுருக்கென்றுதான் தைத்தது. அவர் ரொம்பக் கவுரவம் பார்க்கிறவர். அழையாத வீட்டுக்குள் எந்தக் காரணம் இன்றியும் நுழைய மாட்டார். மகளின் வீட்டிற்கு மனைவியுடன்தான் எப்பொழுதாவது நலன் விசாரிக்கப் போய் வருவார். உள்ளூரில் இருந்துகொண்டே பெற்றவர்கள் இருக்கிறார்களா, போய்விட்டார்களா என்று அறிய மனமில்லாது ஒதுங்கிக்கொண்டு விட்டிருக்கிறாள் அஞ்சனா. வலிய அவள் வீட்டுக்குப் போய், அம்மாவைக் கவனித்துக் கொள்ளச் சொல்லிக் கூப்பிடுவது...சே! ரொம்பக் கேவலம் அதைவிடப் பணம் கொடுத்து ஒரு வேலைக்காரியை அமர்த்தலாமே! உதட்டைக் கடித்துக்கொண்டார்

"இதுக்குத்தான் சொல்றாங்க. குழந்தை பிறந்ததும் பெண்ணுன்னா ஏன் சலிச்சுக்கிறாங்க. காரணம் இருக்கு. வரதட்சணை கொடுத்து பெண்ணை வாழ்க்கைப்படுத்தணுமேங்கிற கவலையால் பெத்தவங்க சலிச்சுக்கலை. எத்தனை சீரும் சிறப்புமாக வளர்த்தாலும் ஒருத்தனைக் கட்டிக்கொண்டதும் பெண், பிறந்த வீட்டைத் திரும்பிப் பார்க்காம போயிடுவாளேன்னுதான் ஆதங்கப் படறாங்க."

"வசு! சமையலுக்கு ஒரு ஆள் வைக்கட்டுமா?" மிகவும் அன்போடு பல தடவை கணபதி கேட்டுக்கொண்டு கூடத்தை அளந்தார்.



வசுந்தரா நெஞ்சு நெகிழ்ந்து போனாள்.

முரட்டுத்தனமும் பிடிவாதமுமாக ஆரம்பத்திலே ஆட்டிப் படைத்த அவள் கணவர் எப்படி மாறிவிட்டார்!

அவளுக்கு உடம்பு கொஞ்சம் இளைத்துவிட்டதைக் கண்டு எப்படித் துடிக்கிறார்!

அவரை இவ்வாறு மாற்றக் காரணமாக இருந்தது அவளது பொறுமைதான்.

ஒரு பெண் தன் அழுத்தமான பொறுமையினால், ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்கலாம். அடங்காப்பிடாரித் தனத்தாலே அதை அழித்து வாழ்க்கையை நிர்மூலமாக்கிக் கொள்ளலாம்!

அஞ்சனாவுக்கு இப்பொழுதாவது புத்தி வந்துவிட்டதே. அதை நினைத்து நினைத்து மகிழ்ந்தாள், வசுந்தரா.

கணபதி என்னென்னவோ செய்து பார்த்தார்.

"ஆரஞ்சு வாங்கிட்டு வந்திருக்கேன். புழிஞ்சு குடி. உடம்பிலே கொஞ்சம் வலு ஏற்படும். திருநெல்வேலி அல்வா உனக்குப் பிடிக்குமேன்னு கொஞ்சம் வாங்கிட்டு வந்தேன்."

"இன்னிக்கு ஸ்கூட்டர் பழுதாயிடுச்சா? பஸ் நிலையத்திலே காத்துக்கொண்டு நின்னப்போ, பூக்காரக் கிழவி தொந்திரவு செய்தாள். வெள்ளிக்கிழமை வேண்டாம்னு சொல்லக்கூடாதுன்னுட்டு, உனக்கு மல்லிகைப் பூ இரண்டு முழம் வாங்கிட்டு வந்தேன்." மிகவும் கூச்சத்துடன் கொண்டு வந்து மேசை மீது வைத்தார்.

"வசு! நம்ம சபாவிலே இந்த வாரம் ஒரு புது நாடகம் அரங்கேற்றம் செய்யறாங்க. நமக்கு டிக்கெட் வந்திருக்கு. போகலாமா?" கனிவுடன் விசாரித்தார்.

அன்று இரவு, சோற்றைக் குழம்புடன் கலந்து கொண்டே கணவர் கேட்டார்.

''வசு, உன் மனதிலே என்னதான் கவலைன்னு என்கிட்ட சொல்லக்கூடாதா? நீயே நெஞ்சுக்குள்ளே வச்சுக் கொண்டு மருகறயே, நியாயமா?''

'என் மகள் இனி என் முகத்திலே முழிக்கமாட்டாள். அவளைப் பார்க்காமல், என் மனம் இரண்டாக வெடிக்கிறது—அந்த வேதனைதான்' என்று உண்மையை ஒப்புக் கொள்ள முடியவில்லை. கண்களில் முட்டிய கண்ணீரை அடக்கிக்கொண்டாள். ''ஒன்றுமில்லை, ஏன் வீணாக் கவலைப்படுறீங்க?'' சோகமாகச் சிரித்தாள்.

நாளுக்கு நாள் அவளது தெம்பு குறைந்துகொண்டே போனது. கொஞ்ச தூரம் சென்றாலும் மூச்சுத் திணறியது. கடினமான வேலை செய்ய முடியாது அயர்ந்து போய் அடிக்கடி உட்கார்ந்துகொண்டாள். மனம் பாறாங்கல்லாகக் கனத்தது. எதைக் கண்டாலும் ஒரே வெறுப்பு. யாரிடமும் பேசப் பிடிக்காத மனக் கசப்பு.

அன்று ஆடி வெள்ளிக்கிழமை.

கோவிலுக்குச் சென்று அம்பாளைத் தரிசனம் செய்ய வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு.

மருமகள் வெளியே கிளம்புவதைக் கண்டு சிவகாமி எதுவும் சொல்லவில்லை. எங்கேயாவது கொஞ்சம் அமைதியா போயிட்டு வரட்டும் என்று மவுனமாக இருந்து விட்டாள்.

கோவிலில் ஏகக் கூட்டம். அர்ச்சனை செய்வோர்களின் வரிசை வெளிப் பிரகாரத்தை எட்டிவிட்டிருந்தது.

பொறுமையுடன் தன் முறைக்குக் காத்திருந்தாள், வசுந்தரா.

அன்று அவளது பிறந்த நாள்!



''நட்சத்திரம். பேர்?'' அர்ச்சகர் கேட்டார்.

''அம்பாள் பெயருக்கே அர்ச்சனை செய்துருங்க'' என்றாள்.

தீபாராதனையை வணங்கிவிட்டுக் கூட்டத்தில் இருந்து வெளிவந்தவள் மண்டபத்தின் ஓரமாக மெல்ல நடந்தாள்.

தன் கையை மிருதுவாக யாரோ பற்றுவதைக் கண்டு திரும்பியவளுக்கு, ஆனந்தமான அதிர்ச்சி.

''அம்மா! இன்னிக்கு உங்களுடைய பிறந்த நாள் இல்லையா? உங்கள் பேரிலே ஒரு அர்ச்சனை செய்யத்தான் வந்தேன், முரளி அலுவலகத்தில் இருந்து இப்பத்தான் வந்தார். குளிக்காமல் கொள்ளாமல் கோயிலுக்குள் நுழைய சங்கடப்பட்டுக்கிட்டு வெளியே எனக்காகக் காத்திருக்கார்.''

மவுனமாக மகளை நிமிர்ந்து பார்த்தாள், வசுந்தரா.

கழுத்து வரை ஒட்ட வெட்டிவிட்டிருந்த கூந்தல், கொஞ்சம் வளர்ந்துவிட்டிருக்கிறது போலும். அழகாகக் கொண்டையிட்டுக்கொண்டு முழுக்கப் பூச்சரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாள். இடையிலே ஆரஞ்சு வண்ணக் காஞ்சிபுரம் பட்டுச்சேலை. முகத்திலே பளிச்சென்று குங்குமப் பொட்டு.

முன்னைவிட அஞ்சனா எத்தனை அழகாக இருக்கிறாள்!

''என் மேலே இன்னமும் கோபமா அம்மா?'' கொஞ்சிக் குழைந்த மகளுடைய குரல், மேனியைப் புல்லரிக்கச் செய்தது.

''அம்மா! ரொம்ப இளைச்சுட்டீங்களே?'' அன்புடன் கேட்டபடி தாயின் கையில் இருந்த பிரசாதக் கூடையை வாங்கிக்கொண்டாள், அஞ்சனா.

"அன்னிக்கு நீங்க என்கிட்டே கடுமையா நடந்துக்காம இருந்தால், எனக்கு இன்னமும் புத்தி வந்து இருக்காது. எனக்கு நல்லா ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்தீங்க. அதுக்கு ரொம்ப நன்றி அம்மா. நானும் முரளியும் ரொம்ப சந்தோசமா வாழறோம். இது நீங்க கொடுத்த வாழ்வு அம்மா..."

"அம்மா! என்னம்மா, மயக்கமா வரது? என் கையைப் பிடிச்சுக்கோங்க. தோள் மேலே சாஞ்சுக்கோங்க. மெதுவா வாசலுக்குப் போயிடுவோம். முரளி உதவுவார்."

வீட்டு வாசலில் நின்ற காரைக் கண்டு வெளியே வந்தார் கணபதி.

"இதென்ன சங்கதி? வசுந்தராவைத் தாங்கிக்கொண்டு மகளும் மருமகனும் வராங்களே! என்ன நடந்தது?" பதறிப் போனார்.

"கோயிலிலே அம்மா மயங்கி விழுந்துட்டாங்க, அப்பா" சொல்லிக்கொண்டே அணைத்தபடித் தாயை உள்ளே மெல்ல நகர்த்திக்கொண்டு சென்று கட்டிலின் மேல் படுக்க வைத்தாள். "அம்மா, கொஞ்சம் குளுகோஸ் தண்ணி கொடுக்கிறேன். சாப்பிடுங்கள். கண்ணை முழிச்சுப் பாருங்கம்மா." மகளின் உபசரிப்பும் கொஞ்சும் குரலும், அவளை மெல்ல விழித்துப் பார்க்கச் செய்தன.

"என்னம்மா உடம்பை இப்படிக் கெடுத்து வச்சிகிட்டிருக்கீங்களே! இந்தச் சமயம் நீங்க திடமா இருந்தால் தானே எனக்கு உதவியா இருக்கும்" கொஞ்சியபடி பட்டுப் போன்ற தன் உதடுகளை அவளது காதருகே பதித்து, மகள் கிசுகிசுத்ததைக் கேட்டு ஒரே வினாடியில் மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டாள் வசுந்தரா.

"என்ன இது? நீ போய் அடுப்படியில் இப்போ என்ன செய்யப் போறே!" அதட்டினார் கணபதி.



"நகருங்கோ! அஞ்சனாவுக்கும், மாப்பிள்ளைக்கும் இன்னிக்கு நம்ப வீட்டிலே சாப்பாடு. மளிகைக்கடைக்கு ஓடிக் கொஞ்சம் பாதாம் பருப்பு வாங்கி வாங்கோ. பாதாம்கீர் வைக்கப்போறேன்."

"என்ன, வசு! எதுக்கு அமர்க்களப்படுத்தி உடம்பை அலட்டிக்கிறே?"

"நீங்க சீக்கிரம் தாத்தாவாகப் போறீங்களாம். அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட வேண்டாமா?"

"என்னம்மா, அஞ்சனா! உண்மையாகவா?" அப்பா கேட்பதற்குள் அவள் ஓடித் தாயை இறுக்கிக் கட்டிக் கொண்டு அவளது கன்னத்தில் முத்தமிட, வசுந்தரா ஆனந்தக் கண்ணீரில் தடுமாற—

"என்ன, எனக்கு அரைகுறையாகத்தான் கேட்டுது. கொஞ்சம் என்கிட்டேயும் சொல்லக்கூடாதா?" பாட்டி கேட்க—

"கொள்ளுப் பாட்டி! முற்றத்திலே பார்த்து இறங்குங்கோ, கொஞ்சம் பாசி பிடிச்சிருக்கு. பேரனைப் பார்க்கிறதுக்கு முந்திக் காலை ஒடிச்சுகிட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிடாதீங்க." கணபதி தாயை வேடிக்கை செய்ய-

வீடு சிரிப்பொலியில் அதிர்ந்தது.

# எங்கே அவள்?

சாரதா அந்த வட்டாரத்து மாதர் சங்கத்திலே ஒரு உறுப்பினராகச் சேர்ந்து ஆறுமாத காலம் கூட ஆக வில்லை.

தன்னந்தனியே ஃபிளாட்டுக்குள் அடைந்து கிடந்து அலுத்துப் போய்த்தான் அதில் அவள் சேர்ந்தாள்.

மாதத்திறகு ஒரு தடவை சங்கத்துப் பெண்கள் கூடினார்கள்.

அருகிலிருந்த தொரு தனியார் நூல்நிலையத்தை ஒட்டி யிருந்ததொரு ஹாலில் குறைந்த வாடகைக்குப் பகல் பதினோரு மணியளவில் கூட்டத்தை நடத்தினார்கள்.

அது அநேகம் பெண்களுக்கு சௌகர்யமான நேரமாக இருந்தது.

கணவன் ஆபீஸ் சென்றதும்—குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டுக் காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புறப்பட்டுப் போனால் பகல் பன்னி ரண்டு மணிக்கு வீடு திரும்ப முடிந்தது.



அநேகமாகக் கூட்டத்தில் பெண்களின் பிரச்னை பற்றிக் கருத்தரங்கு—உரையாடல் முதலியனதான் இடம் பெற்றன.

பிற்பகல், வாரத்திற்கு இரு முறை அதே ஹாலில் தையல்-பூக்கோலம், கேக் பேக்கிங் முதலியவைகளைப் பற்றி அந்தந்தத் துறையில் தேர்ந்த பெண்கள் வந்து வகுப்புகள் நடத்தினார்கள்—விரும்பியவர்கள் அதில் சேர்ந்து பயின்றார்கள். சாரதாவுக்கு அவை எதையும் தெரிந்து கொள்ளும் ஆவல் இருக்கவில்லை. அவை தேவைப் படவும் இல்லை.

பூக்கோலம் போடத் தெரிந்து கொள்வதைவிட வாழ்க் கையில் அலங்கோலமாகிவிட்ட பெண்களை அணுகி அவர் களது பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடிந்தால் அதுவே பெரும் கலை என்று அவள் கருதினாள். சில சமயங்களில் அதுவே சிறந்த பொழுதுபோக்காக அவளுக்கு அமைந்தது உண்மை.

ஆனால் சமீப காலத்தில் யாருமே அவளை அணுக வில்லை.

அவளாகத் தேடிக்கொண்டு போவதற்கு எந்தவித மான சங்கதியும் நடக்கவில்லை. பத்திரிகைகளைப் புரட்டி னால் கூட அவள் உதவியை நாடும் வகையில் எந்தவித மான சம்பவமும் நடந்ததாகத் தெரியவில்லை.

காலையில் எழுந்ததும் குளித்துவிட்டுக் காப்பி டிபன் சாப்பிடுவதும், பின்னர் சமைப்பதும்—சாப்பாட்டின் பின் தூங்குவதும், அதற்குப் பிறகு பிளாஸ்டிக் கூடையுடன் கடைத்தெரு கோவில் எனச் சுற்றி வருவதும், டி.வி. பார்த்த பின் இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கை யில் சரிவதுமாகப் பொழுது ஒரே யந்திர கதியில் ஓடி, அவளை மிகவும் அலுப்படையச் செய்திருந்தது.

ஏதாவது சுவாரசியமான நிகழ்ச்சி ஏற்படாதா... என்று எண்ணிக் கொண்டுதான் அன்று காலை பத்து

மணிக்கு மேல் அவள் மாதர் சங்கத்துக் கூட்டத்திற்குக் கிளம்பினாள்.

சங்கத்திலே அவள் சாதாரண ஒரு உறுப்பினர்.

அவளைப் போலவே சங்கத்தின் சாதாரண உறுப்பினர் திருமதி நீலா.

சமீப காலத்தில்தான் அவளும் அந்தச் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்தவள்.

சாரதாவுக்கு அவளைப் பார்த்த பொழுதெல்லாம் மனதிலே ஒரு கற்பனை எழுந்து கொண்டிருந்தது.

எதையோ உள்ளத்தில் புதைத்து வைத்துக் கொண்டு வடிகால் இல்லாது தடுமாடுகிறாள் போன்றதொரு சோகம் முகத்திலே அப்பிக் கொண்டிருந்தது.

பிரபல தொழிலதிபராக இருந்த கணவர் திடீரென்று மாரடைப்பால் மறைந்துவிட்டார் என்ற பெருத்த துயரமா?

அடையாற்றில் இருந்த பெரிய பங்களாவை விட்டுக் காவேரி நர்மதா மான்ஷன் அருகே புதிதாக உருவாகியிருந்த மதுரா அப்பார்ட்மெண்டில் குடியேறி விட்டிருந்தாள் அவள். முன்னர் கோதண்டராமன் குடியிருந்த அதே ஃபிளாட்டில் தன்னந் தனியாகத் தங்கிக் கொண்டிருந்தாள்.

வசதியாக வாழ்ந்து கொண்டிருந்தவள் ஏதோ காரணமாகப் பெரிய பங்களாவையும் கணவன் விட்டுப் போன தொழிலையும் விற்று ஒரு சிறு ஃபிளாட்டில் குடியேறும்படி ஆகிவிட்டதே என்ற ஏக்கமா?

என்னவோ ஒரு சோகம்—இனம் காண முடியாத ஒரு துக்கம் கண்களில் பிரதிபலிக்க அவள் வெறுமையாகப் புன்முறுவலித்தபடி மாதர் சங்கக் கூட்டத்திலே கலந்து

குறிப்புதவிநூல்



கொண்டாள். நூறு உறுப்பினருக்கும் மேலிருந்த சங்கத்திலே அவள் சேர்ந்தும் யாருடனும் ஒட்டாமல் தனியே வளைய வந்து கொண்டிருப்பதைச் சாரதா பலமுறை கவனித்திருக்கிறாள்.

அன்றைய தினம் டெல்லியிலிருந்து வந்த ஒரு சமூக சேவகி அவர்கள் கூட்டத்தில் பேச வந்திருந்தாள். 'குழந்தையில்லாதவர்கள் சுவீகாரம் செய்து கொள்ளும் போது, சுவீகாரத் தாயின் பொறுப்பு' என்ற தலைப்பு. டெல்லியம்மாள் நன்றாகப் பேசினாள். கூட்டத்திலிருந்த பலர் கேள்விகளை எழுப்பினர். உற்சாகமாகப் பதிலளித்தாள். வெளியூரிலிருந்து வந்த விருந்தாளிக்குப் பாதாம் கேக்கும், பக்கவடாமும் தயாரித்துக் கொண்டு வந்து ஒரு பெண் உறுப்பினர் எல்லோருக்கும் விநியோகம் செய்ய—இன்னொரு அம்மாளின் உபயமாகத் தேநீர் கோப்பைகளில் நிறைத்து வழங்கப்பட, எல்லோரும் சிற்றுண்டியுடன் பேச்சில் கலகலக்க, கூட்டம் மிகவும் களையாக இருந்தது. ஆனால் திருமதி நீலாவின் முகம் மிகவும் வெளுத்துப் போய் மயங்கி விழுந்து விடுவாள் போன்று காணப்பட்டாள். தேநீரையோ, பாதாம் கேக்கையோ அவள் கையால் தொடவேயில்லை. யாரும் பார்க்காத சமயம் சட்டென்று கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளையே ஆரம்பத்திலிருந்து உன்னிப்பாகக் கவனித்த சாரதா இதைப் பார்த்து விட்டாள்.

நீலா ஏன் அழுகிறாள்? தனக்குக் குழந்தைகள் ஏதும் இல்லையே? கணவன் உயிருடன் இருக்கும் போதே சுவீகாரம் செய்து கொள்ளாது போனது தவறு என நினைத்துக் கலங்குகிறாளா? பிறந்து இறந்து போன குழந்தை எதையாவது எண்ணி வருந்துகிறாளா? ஏன் கண்ணீர் உகுத்தாள்?

தனக்குள்ளே பல கேள்விகளைக் கேட்டபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் சிறிது நேரம். பின்னர் ஒரு யோசனை பளிச்சிட்டது.



...NNEMARA PUBLIC LIBRARY

மேஜையிலிருந்த தேநீர்க் கோப்பை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு அவளை நெருங்கினாள்.

''தேநீர் சூடா இருக்கு. சாப்பிட இதமா இருக்கு'' என்று அவளிடம் கோப்பையை நீட்டினாள்.

புன்னகைத்தபடி, 'தாங்ஸ்' என்று முணுமுணுத்துக் கொண்டு கோப்பையை வாங்கிக் கொண்டாள் நீலா.

அருகில் நின்றபடி தன் கோப்பையிலிருந்த தேநீரை உறிஞ்சிக் கொண்டே மெல்லிய குரலில் கேட்டாள் சாரதா.

''நன்றாகப் பேசினார்கள் நம் விருந்தாளி. பல கோணத்திலிருந்து பிரச்சனைகளை ஆழமாக எடுத்துக் கூறினார்கள். நீங்க பேச்சைக் கேட்டு ரொம்பவே கண் கலங்கிப் போய்விட்டீங்களே?''

முகம் சிவந்து போனாள் நீலா. ''கேட்டபோது மனம் சங்கடப்பட்டது. நான் சுபாவத்திலே ரொம்பக் கோழை. சின்ன விஷயத்திற்கெல்லாம் மனம் கரைஞ்சு போயிடு வேன். சுவீகாரம் செய்யப்பட்ட குழந்தைகளின் மனோ நிலையை நினைச்சுப் பார்த்தேன்! ரொம்பப் பரிதாபமாக இருந்தது.''

''பெரும்பாலும் பெற்றவங்களுக்கு வேண்டாத குழந்தைகளைத்தானே மத்தவங்க சுவீகாரம் செய்துக் கறாங்க. ஏதோ சில சமயங்களில் உறவினர்களின் குழ்ந்தைகளைப் பரஸ்பரம் மனம் ஒப்பித் தத்து எடுத்துக் கிறாங்க, இல்லையா?''

தலையை ஆட்டினாள் நீலா. அவளது கண்களில் நீர் புரண்டது.

''நீங்க எங்க பக்கத்துக் கட்டிடத்தில்தானே குடியிருக் கீங்க?'' பேச்சை மாற்றினாள் சாரதா.

''ஆமாம். முன்னால் கோதண்டராமன் தம்பதிகள் இருந்த அதே ஃப்ளாட்தான்.''



''உங்க வீட்டு படுக்கையறை ஜன்னல் வழியே பார்த்தால் எங்கள் சமையலறை நன்றாகவே தெரியும், இல்லையா?''

மெலிதாகச் சிரித்தாள் நீலா.

''உண்மைதான். உங்க படுக்கையறை எதிரே இருக்கிற சிட் அவுட்டில் நீங்க வந்து துணி காயப் போடும் போது பார்த்திருக்கிறேன் ''

''நான் என் வேலைக்காரிகிட்டே பேசறது உங்க காதிலே பளிச்சினு கேட்கும் இல்லையா...? அத்தனை நெருக்கமாகக் கட்டிடங்களை இப்போவெல்லாம் கட்டி விடுகிறார்கள்.''

''எல்லாம் இடப் பிரச்னைதான். கட்டிடங்கள் நெருக்கமாக இருக்கலாம். வசிப்பவர்கள் மனது மற்ற வர்களுடன் நெருக்கமா இருப்பதில்லையே?''

குப்பென்று மறுபடியும் முகம் சிவந்து போனாள் நீலா.

''ஏதேச்சையாகத்தான் கேள்விப்பட்டேன். இதற்கு முன்னால் குடியிருந்த கீதா கோதண்டராமனுக்கு நீங்க ரொம்ப உதவி செய்தீர்களாமே.''

''மாரியாயிதானே உங்களுக்கு வேலை செய்கிறாள். அவள் ரொம்பவே கதை அளப்பாள்.''

''உண்மையாக நீங்கதான் உதவினீங்களாம். கீதாவை உங்கள் வீட்டில் வைத்துக் கொண்டு காப்பாத்தினீங்க ளாம். இந்த வட்டாரத்திலே உங்களைப் போல மற்றவர் கள் சிரமம் பார்த்து உதவுகிறவங்க யாருமே கிடையா தாம். உங்களுக்கு ரொம்பவே சேவை மனப்பான்மை இருக்குன்னு தெரிஞ்சு சந்தோஷப்பட்டேன்.''

''பொழுது போகாம ஏதோ செய்து கொண்டிருக் கேன். சிலர் என்னைத் தப்பாகவும் புரிந்து கொண்டிருக்

காங்க. அதிகப் பிரசங்கித் தனமாக நடக்கிறதாகவும் நினைக்கிறாங்க.'''

''அப்படியெல்லாம் நான் கேள்விப்படலை. உங்க கட்டிடத்திலேயே குடியிருந்த மல்லிகா என்கிற பெண்ணை மாமியார் கொடுமைப் படுத்துவதை நிறுத்தி அந்தப் பெண்ணுக்கு அந்தக் கல்யாணத்திலிருந்து விடுதலை வாங்கித் தந்து அவளுக்கு மறுமணம் செய்து வைத்தீர்களாமே! பெரிய காரியம் செய்திருக்கீங்க.''

சாரதாவுக்குக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது. யாராவது மிதமிஞ்சிப் புகழ்ந்துவிட்டால் நாணிக்கொள்ளும் பழக்கம் உண்டு.

காது மடல்கள் சூடாவதை உணர்ந்தாள். ''என்னவோ என்னால் ஆன உதவி'' என்றாள் அடக்கமாக.

''உங்களைப் பற்றி நல்லதையெல்லாம் கேள்விப்பட்ட போது எனக்கும் உங்களைச் சந்தித்துப் பேசணும்னு ஆவல் ஏற்பட்டிருக்கு.''

''பக்கத்திலேதான் குடியிருக்கீங்க. தாராளமா வந்து என் ஃபிளாட்டுக் கதவைத் தட்டலாமே'' என்றாள் சாரதா.

''நாளைக்கு உங்களுக்கு சௌகர்யமா இருக்குமா? மாலைவேளை நீங்க வெளியில் போகாதிருந்தால் நான் உங்க ஃபிளாட்டுக்கு வரப் பிரியப்படுகிறேன்.''

'தாராளமா வரலாம்.''

''ஆசை. சட்டுன்னு வந்து உங்ககிட்டே பேசத்தான் தயக்கமா இருந்தது. மாரியாயி உங்களைப் பத்தி ரொம்ப புகழ்ந்து பேசினதாலே மனசிலிருந்த பயம் மறைந்து போச்சு. உங்களைக் கட்டாயம் பார்க்கணும், பேசணும்னு தோணுது. ஒரு பெரிய பிரச்னை ரொம்ப நாளா வாட்டிக்



கொண்டிருக்கு. சமீபத்திலே அது அசுர வடிவெடுத்து விட்டிருக்கு.''

தாழ்ந்த குரலில் பேசிய நீலா தொடர முடியாது தடுமாறினாள். மீண்டும் அவளது கண்களில் நீர் பெருக்கெடுத்தது. சாமர்த்தியமாக அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு தொண்டையைச் செருமிக் கொண்டாள்.

''நான் நாளை மாலை கட்டாயம் வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சட்டென்று கூட்டத்தில் புகுந்து...ஹாலை விட்டு வெளியேறினாள். அவளுக்காகத் தயாராக வாயிலில் காரைக் கொண்டு வந்து டிரைவர் நிறுத்தி வைத்திருந்தார்.

யாரையும் திரும்பிப் பார்க்காது தனது வெள்ளை பியட்டில் ஏறிக்கொண்டு விரைந்து விட்டாள்.

## 2

மறுநாள் மாலைப் பொழுதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள் சாரதா.

வாயில் அழைப்பு மணி அழுத்தமாக அடித்ததும் வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

கஞ்சியில் மொட மொடத்ததொரு பச்சை வண்ண வாயில் சேலையைத்தான் நீலா அணிந்து கொண்டிருந்தாள்.

நாற்பது வயதை எட்டிக் கொண்டிருப்பாள் என்பது சாரதாவின் ஊகம். ஆனால் முகத்திலே இன்னும் இளமை மாறவில்லை.

நல்ல நிறம். இயற்கையாகவே கருத்த சுருண்ட முடி. இங்குமங்கும் ஓரிரு வெள்ளிக் கம்பிகளாக நரை ஓடிக் கொண்டிருந்தது. ஒப்பனை அதிகம் இல்லாமலே பளிச்

சென்று காணப்பட்டாள். இள வயதிலே ரொம்ப அழகாகவே இருந்திருப்பாள் நீலா...என்று எண்ணியபடி கதவை அகலத் திறந்து வந்தவளை வரவேற்று உள்ளே வந்து உட்காரும்படி உபசரித்தாள்.

நீலா சிறிது நேரம் வரவேற்பறையைப் பிரமிப்புடன் கண்களால் துழாவினாள்.

அறுபது வயதைத் தாண்டியவள். ஒடுங்கிப் போன உடல்வாகு... தன்னந்தனியாக வாழ்கிறவள் வீட்டை ரொம்பவே சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறாளே?

வேலைக்காரி மாரியாயி ஐந்து வீடுகளுக்கு வேலை செய்கிறவள். நின்று நிதானித்து எதுவும் செய்ய மாட்டாளே. பெருக்கினேன், பாத்திரங்களைக் கழுவினேன் என்று பேர் சொல்லிவிட்டு ஓடி விடுவாளே! அதிசயப் பட்டாள்.

''நீங்க வீட்டை ரொம்ப அழகா வச்சுக் கொண்டிருக்கீங்களே.''

''தனியா இருக்கேன்...வேறே என்ன வேலை இருக்கு? அதனாலே வீட்டை மியூசியம் போலத் துடைச்சு வச்சிருக்கேன்...ஆனால் வீடு வீடாக இருக்கணும். மியூசியமா இருக்கக் கூடாது என்பது என் கொள்கை...''

''உங்களுக்கு உறவினர்கள் யாரும் கிடையாதா?''

''நிறையப் பேர் இருக்கிறார்கள். நான்தான் தூர இருக்க விரும்புகிறேன்.''

''என்னைப் போல் என்று சொல்லுங்கள்...'' சிரித்தாள் நீலா...முதல் நாள் அவள் மனதைக் கப்பிக் கொண்டிருந்த அந்தத் துயரம் சிறிது குறைந்து விட்டிருந்ததால்... முகம் தெளிவாக இருந்தது. அவளால் மனம் விட்டுச் சிரிக்க முடிந்தது.



''வாங்கோ...சாப்பாட்டறைப் பக்கம் போவோம். முதலில் வயிற்றுக்கு ஏதாவது போட்டுக் கொண்டு' என்று பரிவுடன் அழைத்தாள் சாரதா.

சாப்பாட்டு அறையும் மிகவும் சுத்தமாகத் தெரிந்தது.

பளபளத்த ஸ்டீல் தட்டுகளில் சாரதா சொஜ்ஜியையும் ஓட்டுப் பக்கடாவையும் முன்னதாகப் பரிமாறி விட்டிருந்தாள். தட்டுகள் மீது ஈ மொய்க்காதபடி கொசு வலை போன்றதொரு துணியால் மூடி வைத்திருந்தாள். ''உட்காருங்கள் ஒரு நிமிஷத்தில் டீ தயார் பண்ணி எடுத்து வரேன்...'' என்றபடி சமையலறைக்குள் புகுந்தாள். நீலா மெல்ல நகர்ந்து அவளது படுக்கையறையை எட்டிப் பார்த்தாள்.

படுக்கை மீது விரித்திருந்த நீல வண்ண விரிப்பு மிகச் சுத்தமாகத் தெரிந்தது.

அறைக்குள் அனாவசிய சாமான்கள் இல்லாது மிகவும் கச்சிதமாக இருந்ததைக் கவனித்தாள்.

பழக்க வழக்கங்களில் மிக சுத்தமாகத் தெரியும் சாரதா அம்மா தன் பேச்சிலும், நடத்தையிலும் சுத்தமாக, நாணயமாகத்தான் இருப்பாள். இவளை நம்பி மனம் திறந்து பேசலாம் என்றதொரு நம்பிக்கை உள்ளத்தில் துளிர்த்தது.

சாரதா மரத்தட்டில் போன்சைனா கெட்டிலுடன் கோப்பைகளை வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள். தட்டுகளைப் போர்த்திய கொசுவலையை எடுத்து அப்பால் பத்திரமாக வைத்துவிட்டு...கோப்பையில் தேநீரை வார்த்து, தேவைப்பட்ட பாலை ஊற்றினாள்.

''இனிப்பு சாப்பிடுவீர்கள் என்று நினைத்து சொஜ்ஜி கிளறினேன்'' என்று விசாரித்தபடி தேநீர்க் கோப்பையை அவளது தட்டருகே நகர்த்தினாள்.

சாப்பிட்டு எழுந்த பின் கொஞ்சநேரம் இருவரும் பல பொது விஷயங்களைப் பேசிக்கொண்டு முன்னறையில் அமர்ந்திருந்தனர்.

''பகல் வேளையில் என் வேலைக்காரி வரமாட்டாள். அநேகமாக என்னை யாரும் இந்தச் சமயம் தொந்தரவு செய்வதில்லை—அதனால்...'' என்று கூறிவிட்டுக் குறிப்பாக சாரதா அவளது முகத்தைப் பார்த்தாள்.

''பகல் வேலையை முடித்ததும் வேலைக்காரியை அனுப்பி விட்டு நான் நிம்மதியாக வந்திருக்கேன்'' என்று கூறிவிட்டு நீலா கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு தரையைப் பார்த்தாள். சட்டென்று நிமிர்ந்தவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

''சாரதா அம்மா! உங்களை என் தாய் போல நினைத்துச் சொல்கிறேன். எனக்கு நீங்கதான் தக்க ஆலோசனை சொல்லி உதவணும். எனக்குப் பெற்றோர்கள் கிடையாது. சில ஆண்டுகளுக்கு முன்தான் அவர்கள் இருவரும் ஒருவர் பின் ஒருவராய்ப் போய் விட்டார்கள். என் கணவரும் அவர்கள் வீட்டுக்கு ஒரே பிள்ளை. இரு பக்கமும் ஏகப்பட்ட சொத்து. என் கணவர் என் தந்தையின் நண்பரின் மகன். தொழிலில் கூட்டாக இருந்த இருவரும் சம்பந்தம் செய்து கொண்டு ஒற்றுமையாக வாழ விரும்பினார்கள். ஆனால் எனது நிச்சயதார்த்தத்திற்குப் பிறகு இருவருக்குள்ளும் பெரியமனத்தாங்கல் ஏற்பட்டது; கல்யாணம் நின்றுவிடும் போன்ற அளவுக்குப் பெருத்த மனஸ்தாபம். ஆனால் நானும் என் கணவரும் பெற்றோர்கள் முடிவு செய்யு முன்னேயே ஒருவரையொருவர் ரொம்பவும் விரும்பினோம்—காதலித்தோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

''காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள்னு சொல்லவரீங்க, இல்லையா?'' மெல்லச் சிரித்தாள் சாரதா.



''காதலர்கள் பாதையில் கல்லும் முள்ளும் நிறைந்திருக்க வேண்டாமா? அந்தக் கைங்கர்யத்தை என் தந்தையும் அவரது தந்தையும் செய்து முடித்தனர். நிச்சயதார்த்தத்திற்குப் பின்னர் என் தந்தை, தமது மகளை, தம் நண்பர் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கபோவதில்லை. இத்துடன் உறவை முறித்துக் கொள்ள வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தார்.

'நிச்சயத்தை உடைத்து விட்டேன். வேறு இடத்தில் நீங்கள் உங்கள் பெண்ணை தாராளமாகக் கல்யாணம் செய்து கொடுக்கலாம்' என்று அகந்தையோடு கடிதம் எழுதிவிட்டார் என் மாமனார்.

தன் மகன் என்னை மறந்துவிட வேண்டுமென்று அவசரமாக அவரை மேற்படிப்புக்கு என்று அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டார்.

''பிறகு அவர் திரும்பி வந்ததும் மனத்தாங்கல் மறைந்து திருமணம் நடந்ததாக்கும்?'' சாரதா மெல்லிய குரலில் கேட்டாள்.

''நடந்தது. ஆனால் அதற்கு முன் ஒரு விபத்து நேர்ந்துவிட்டது.''

''யாருக்கு விபத்து?'' என்று திகைப்புடன் கேட்டாள் சாரதா.

''எனக்குத்தான். கல்யாணமாகு முன் — நிச்சயம் நடந்தவுடனேயே நானும் என் வருங்காலக் கணவரும் மிகவும் நெருங்கிப் பழகத் தொடங்கினோம். பெற்றவர்கள் தடுக்கவில்லை. அதன் பயனாக நாங்கள் அன்பின் எல்லையை மீறிவிட்டோம்.''

''புரிகிறது. கல்யாணமாகு முன் நீங்கள் கர்ப்பமாகி விட்டீர்கள்.''

தலையை அசைத்து விட்டுக் கன்னத்தில் வழியப் பயமுறுத்திய கண்ணீரை நீலா துடைத்துக் கொண்டாள்,

''அந்தச் சமயம் பெரியவர்களின் மனத்தாங்கல் காரணமாகக் கல்யாணம் நின்று போனது.என் தந்தையின் நண்பர் தமது மகனை அமெரிக்காவுக்கு அனுப்பியதும், நான் அரண்டு போய்விட்டேன். அப்போது நான் மூன்று மாதக் கர்ப்பிணியாக இருந்தேன். பெற்றோருக்கு என் நிலை தெரிந்து விட்டது.''

'கருவைக் கலைத்து விட முயன்றிருப்பார்கள்'. தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

''கருக்கலைப்புக்கு நான் சம்மதிக்கவில்லை. எப்படியும் பின்னால் எங்களது கல்யாணம் நடந்தேறி விடும் என்ற நம்பிக்கை இருந்தது. எங்களது அன்பின் அடையாளமான அந்தக் குழந்தையை நான் பெற்று எடுக்க விரும்பினேன். அப்பாவின் அந்தஸ்திற்கு அவமானம் தேடித் தரும் சங்கதி அது. எனவே என்னை வடநாட்டு சங்கீதம் பயிலக் கல்கத்தாவுக்கு அனுப்பப் போவதாகக் கூறி அப்பா அங்கே தமது உயிருக்கினிய நண்பர் வீட்டிற்கு அனுப்பி விட்டார்.

அங்கே எனது அஞ்ஞாத வாசத்தின் போது ஒரு பெண் குழந்தை பிறந்தது. நான் தாய்மை அடைந்திருப்பதை என் காதலருக்குத் தெரிவிக்கப் பயந்து கொண்டு இருந்து விட்டேன். பெருத்த பிசகுதான்! ஆனால் கையில் குழந்தையுடன் ஊருக்குத் திரும்ப முடியாதே எங்கள் நண்பர் அதற்கு ஒரு ஏற்பாடு செய்தார். அவருக்குத் தெரிந்த ஒரு குழந்தையில்லாத் தம்பதியரிடம் என் மகளைக் கொடுத்து வளர்க்க ஏற்பாடு செய்து விட்டார். அவர் ஒரே பிடிவாதமாக இருக்கவே...எங்கள் திருமணம் நடந்தது. ஆனாலும் நான் குழந்தை பிறந்த விஷயத்தைச் சொல்லப் பயந்து என்னுள்ளேயே ரகசியமாக வைத்துக் கொண்டிருந்தேன். என் பெற்றோரும் அதைப்பற்றி மூச்சு விடவில்லை.''

''உங்களுக்குப் பிறகு குழந்தைகள் ஏதும் பிறக்கவில்லை. அதைத்தானே சொல்ல வருகிறீங்க...'' சாரதா மெல்லக் கேட்டாள்.



''எங்களுக்குப் பிறகு குழந்தையே பிறக்கவில்லை. அப்பொழுதுதான் என் மனம் ஏங்கத் தொடங்கியது. ஏதாவது சொல்லி என் குழந்தையைத் திரும்ப அந்தத் தம்பதிகளிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற துடிப்புடன் கல்கத்தா பயணமானேன். எங்கள் குடும்ப நண்பர் நோயாகப் படுத்துக் கிடந்தார். அவர் சொன்ன முகவரியைத் தேடிக்கொண்டு என் மகளைப் பார்க்கப் போனேன் அப்போது எனக்குக் கல்யாணமாகி ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்டிருந்தன. ஆறு வயதுச் சிறுமியாக வளர்ந்து நிற்கப் போகும் என் மகளைப் பார்க்க நான் மிகவும் ஆசைப்பட்டேன். பணத்தைக் கொடுத்து அவளைத் திரும்ப வாங்கி வந்துவிடவேண்டும். பிறகு எனது வளர்ப்பு மகளாக எங்கள் குடும்பத்திற்குள் நுழைத்துவிட வேண்டுமென்ற ஆவல்.

''ஆனால் நீங்க தேடிக்கொண்டு போன இடத்தில் அந்தத் தம்பதிகள் இருக்கவில்லை. இடம் பெயர்ந்து போய் விட்டிருந்தார்கள் என்று சொல்லப் போகிறீங்க. அது சரிதானே?'' சாரதா கேட்டதும் நீலாவின் கண்கள் கலங்கிப் போயின.

''ஆமாம். அவர்களைக் காணவில்லை. எங்கு போனார்கள் என்று தெரியவில்லை. குழந்தைக்கு அவர்கள் என்ன பெயர் வைத்திருந்தார்கள் என்பதுகூட எங்கள் நண்பருக்குத் தெரிந்திருக்கவில்லை.மனம் உடைந்து வீடு திரும்பினேன். கொஞ்ச நாட்களில் எங்கள் நண்பர் இறந்து போனார். அவருடன் அந்த ரகசியமும் மறைந்து போனது.

''பின்னர் எங்கள் வாழ்க்கையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டன. பெற்றோர்கள் மறைந்து போனார்கள்.''

''உங்கள் மாமனார்—மாமியார் இருவரும் இறந்த போனார்கள். உங்கள் கணவரும் மறைந்த பின் தொழில்

தொடர்ந்து நடத்த முடியாது விற்று விட்டு, பங்களாவை யும் விற்று இந்த ஃபிளாட்டில் வந்து குடியேறியிருக்கீங்க. உண்மைதானே?...''

''ஆமாம். எங்களுக்கு இருந்த அடையாறு பங்க ளாவைவிற்றுவிட்டேன். ஆனால் நுங்கம்பாக்கத்திலிருக்கும் என் பெற்றோர்களின் வீட்டைச் சீர்திருத்தி வாடகைக்கு விட்டு இங்கே குடியிருக்கிறேன்—என் மன நிலையில் என்னால் பெரிய வீட்டை நிர்வகிக்கப் பொறுமை இல்லை. மனமும் இல்லை...''

''எங்கே அவள்...எங்கே அவள் என்று உங்க மனம் உங்க மகளைத் தேடிக் கொண்டிருக்கிறது...என்று சொல்ல விரும்புகிறீர்கள்.''

''பதினெட்டு வருஷங்களுக்கு மேலாக...என் மனம், 'எங்கே அவள்'...எங்கே என்மகள்? என்று நாள் பூரா, இரவும் பகலும் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. நான் அழுத கண்ணீர் கொஞ்ச நஞ்சமில்லை. நான் புலம்பிய நாட்கள் எண்ணில் அடங்காது. முடிவில் அவளை நான் கண்டு பிடித்து விட்டேன்.''

''ரொம்ப நல்லதாப் போச்சு.'' சாரதா சிரித்தாள்.

''பெருத்த சிக்கல் இருக்கு—அவளை எனக்கு மீட்டுத் தர என் சார்பில் நீங்க உதவணும். பலருக்கு உதவியிருக் கிறீங்க. இந்தப் பாவிக்கு உதவணும்'' கேட்டபடி அவளது கையைப் பிடித்துக் கொண்டு குலுங்கி அழுதாள் அவள்.

சாரதா மனம் இளகிப் போனவளாக அவளது கண்ணீ ரைத் துடைத்து விட்டு சமாதானப்படுத்தினாள்.

''விவரம் முழுவதும் சொன்னால் என்னால் முடிந்த உதவியைக் கட்டாயம் செய்வேன்'' என்று ஆறுதலாகச் சொன்னதும் நீலா நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

''தெரியும். எனக்கு உதவுவீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும்—அதனால் தான் இங்கே வந்திருக்கேன்—முழுதும் சொல்லிடறேன்.'' ஆரம்பித்தாள்.



திருமணத்திற்குப்பின் குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை என்ற குறையைவிட ஏற்கெனவே பிறந்த ஒன்றை உயிரோடு பறி கொடுத்து விட்டோமே என்ற துயரம் நீலாவை அணு அணுவாக வதைத்துக் கொண்டிருந்தது.

எத்தனையோ இரவுகள் அவள் உறக்கமின்றி மனத் திற்குள்ளே புதைத்து வைத்திருந்த அந்தப் பயங்கர ரகசியத்தைத் கணவனிடம் சொல்லி ஆறுதல் பெற முடி யாது ரகசியமாக அழுதாள்.

ஒவ்வொரு ஆண்டும் அவள் தனது குழந்தையின் பிறந்த நாள் அன்று கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்வது வழக்கம். ஒவ்வொரு தடவையும் அதே தப்பைச் செய்துவிட்டுப் பின்னர் தான் மாற்றிக்கொள்வாள்.

''குழந்தை மேலே அர்ச்சனையா? பெயர் என்ன நட்சத்திரம் என்ன? கோத்திரம் என்ன?'' என்று அர்ச்சகர் வேகமாகக் கேட்கும்போது நிலைகுலைந்து போய் விழித்தாள்.

ஆமாம் அவள் குழந்தையின் பெயர் என்ன?

அதைக்கூட அறிந்துகொள்ள முடியாத துர்பாக்யம்.

''ஸ்வாமி மேலேயே அர்ச்சனை பண்ண விடுங்கோ'' என்று கூறி விட்டுக் கண்ணீரை அடக்க முடியாது தரை யைப் பார்ப்பாள்.

கற்பூர ஜோதியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளும்போது உடல் பதறிப் போகும்.

''எங்கேயோ நீ சௌக்கியமா இரும்மா. பெத்தவ ஆசீர்வதிக்கிறேன்'' என்று தன்னுள்ளே சொல்லிக் கொண்டு நெஞ்சை அமுக்கும் துயரத்தை விழுங்கிக் கொண்டு வீட்டுக்கு வருவாள்.

''கோவிலுக்குப் போனியா என்ன விசேஷம்? ஆமாம் ஒவ்வொரு வருஷமும் இந்தத் தேதியில் மறக்காமல்

கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்துவிட்டு வறியே? யாருக்கு?'' ஒரு தடவை அவள் கணவன் கங்காதரன் கேட்டபோது துடிதுடித்துப் போனாள்.

'நம்ம குழந்தையின் க்ஷேமத்திற்காகத்தான். இன்று அவள் பிறந்த நாள்' என அவளால் சொல்ல முடியாத துர்பாக்கியம்.

''என் சிநேகிதி ஒருத்தி சின்ன வயசிலே போயிட்டா. தாயில்லாத அந்தக் குழந்தையை நினைச்சு மனம் வேதனைப்படறது. அவ பிறந்த நாள்போது அவளை நினைச்சு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வரேன்.''

''அப்படியா! பாவம். அந்தக் குழந்தை எங்கே இருக்கா? அவள் பிறந்த நாள் போது நம் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்து கொண்டாடுவோமே?''

''அவ இங்கே எங்கே இருக்கா? அப்பாவோட அமெரிக்காவிலே இருக்காளாம்.''

''உனக்கு அந்த அமெரிக்க முகவரி தெரியுமா? இந்த டிஸம்பர்லே நான் நம்ப கம்பெனி காரியமா ஒரு மாசம் அமெரிக்காவுக்குப் போக வேண்டியிருக்கு. நீயும் கூட வா. உன் சிநேகிதியின் குழந்தையைப் பார்த்துட்டு வரலாமே.''

''வேண்டாம். என் சிநேகிதி அவள் கணவன்கிட்டே ரொம்பவே கஷ்டப்பட்டா. அவர் ஒரு மாதிரி. நம்மை ஒரு சமயம் பார்க்க அவருக்குப் பிடிக்காமப் போயிட்டா? வேண்டாதவா வீட்டு வாசலில் நாம் ஏன் போய் நிக்கணும்? மேலும் இப்போ அவர் அமெரிக்காவில் எங்கே இருக்காரோ—எனக்கு சமீபத்திய அட்ரஸ் தெரியாதே. நமது ஆசிகள் அந்தக் குழந்தைக்குப் போதும். எங்கேயோ அவள் நன்றாக இருந்தால் போதும்.'' சொல்லி முடிக்கும் போதே அவள் தொண்டையைத் துயரம் அடைத்தது. கண்களில் நீர் பனித்தது. அப்பப்பா... ஒன்றுக்கு மேல் ஒன்றாக, தொடர் சங்கிலியாக எத்தனை பொய் சொல்ல வேண்டியிருக்கு?



ஒரு உண்மையை மறைத்ததின் பாவம் அது.

பெற்றவனிடமே உண்மையைச் சொல்ல முடியாத ரகசியமாகி விட்டதே அவள் மகளின் பிறப்பு?

''கடவுளே! எனக்கு இந்தச் சோதனை வேண்டாம். வேண்டாம்'' என்று பல தடவை கதறி அழுதிருக்கிறாள். பயன்?

நாளுக்கு நாள் மகளின் நினைவு மனதை வருத்தியது அதிகரித்ததே ஒழிய அது குறையவேயில்லை.

கங்காதரனுக்குக் குழந்தைகள் மீது கொள்ளை ஆசை தனக்கு ஒன்று பிறக்கவில்லை என்பதைப் பற்றி அவர் வெளிப்படையாகப் பேசியதில்லை.

ஆனால் அவர்கள் வீட்டுக்கு வந்த உறவினர்கள், நண்பர்களின் குழந்தைகளை ரொம்பவே கொண்டாடினார்.

யாராவது தெரிந்தவர்கள் வீட்டுக்கு அவர்கள் போக நேர்ந்தால்...மறக்காது அந்த வீட்டுக் குழந்தைகளுக்குப் பொம்மை—பிஸ்கட், சாக்லெட் முதலியவைகளை வாங்கிக் கொண்டு போக மறக்கவே மாட்டார்.

அவர் வீட்டு டிரைவர் சுந்தசாமியின் குழந்தையை அவருக்கு ரொம்பவே பிடித்திருந்தது.

செக்கச் செவேலென்று...தங்கப் பொம்மை போல இருந்தாள் குழந்தை மாலினி.

தீபாவளி - பொங்கல் போன்ற பண்டிகை தினங்களுக்கு கங்காதரன் குழந்தைகளுக்குப் புதுத்துணி எடுத்துக் கொடுத்தார்.

பள்ளிக்கூடத்தில் சேர்த்த போது புத்தகம்—சிலேட்டு வாங்கித் தந்தார். பின்னர் தொடர்ந்து அந்தப் பெண்ணின் கல்விக்குத் தாமே செலவழித்து மகிழ்ந்தார்.

ஒரு சமயம் அந்தக் குழந்தைக்குக் காய்ச்சல் வந்து ரொம்ப அபாயகரமாகி விட்டபோது கங்காதரன் துடித்துப் போனார். பெரிய ஸ்பெஷலிஸ்டுகளை வரவழைத்து மாலினிக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார்.

கல்லூரித் தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் மாலினி பாஸ் செய்தபோது கங்காதரன் அடைந்த மகிழ்ச்சிக்குக் கங்கு கரையில்லை.

அவர் மாலினியைக் கொண்டாடிய போதெல்லாம் நீலாவின் மனதிலே ஒரு உறுத்தல்.

'ஐயோ நம் குழந்தை இருந்திருந்தால்...ஆமாம் இப்போ அவள் பள்ளிக்கூடம் போகும் வயசாச்சே... தத்தெடுத்துக் கொண்டவர்களின் வசதி எப்படி? அவளுக்குத் துணிமணி வாங்கிக் கொடுத்து...நன்றாக வளர்க்கிறார்களா...?'

பள்ளிக்கூடத்திற்கு குழந்தை பஸ்ஸிலா போகிறாள்?

இத்தனை பணம் இங்கே கொட்டிக் கிடக்கும்போது அவள் பெற்ற மாணிக்கம் வேறு ஒரு இடத்தில் இல்லாமையால் கஷ்டப்பட்டால்...அதைவிட வேறு ஒரு கொடுமை தேவையில்லையே. தன்னையே குத்திக் குதறிக் கொண்டு வதைபட்டாள் அவள்.

மாலினிக்குக் கல்யாணம் நிச்சயமாகியது.

கங்காதரனுக்குத்தான் எத்தனை ஆனந்தம்?

சொந்த மகளுக்குச் செய்வதுபோல அவரே அந்தத் திருமணத்தை எடுத்து மிகவும் சிறப்பாகச் செய்தபோது நீலா வயிற்றெரிச்சல் படவில்லை. ஐயோ நம் மகளுக்கு இப்படிச் செய்ய முடியலையே...



அவள் எங்கேயிருக்கிறாள் என்று தெரியலையே என வேதனைப்பட்டாள். அழுதாள்.

மாலினியின் திருமணம் முடிந்த சில நாட்களுக்குப் பின்னர்தான்—

கங்காதரன் மாரடைப்புக்காக, பிரபலமானதொரு நர்ஸிங் ஹோமில் அனுமதிக்கப்பட்டார்.

ஒருநாள் மாலை நோயாளி அருகில் நீலா உட்கார்ந்திருந்தாள்.

குழந்தையைப் பிரிந்து விட்டோமே என்ற ஆதங்கம் தந்த தீரா வேதனையுடன்—கணவர் பிழைப்பாரா என்ற கலக்கமும் சேர்ந்து கொள்ள அவள் துயரத்தின் உச்ச நிலையில் இருந்தபோது கங்காதரன் அவளை மெல்ல அழைத்தார்.

''என்கிட்டே நீ ஒரு பெரிய ரகசியத்தை மறைச்சு வச்சிருக்கியே! நியாயமா?''

பதறிப் போனாள் அவள்.

''ஆமாம் நமக்குப் பிறந்த குழந்தை என்ன ஆச்சு? பிறந்தவுடனேயே இறந்து போச்சா?''

''குழந்தையா?'' குழறினாள் அவள்.

''ஆமாம். அப்படித்தானே உன்னைப் பரிசோதித்த டாக்டர் ரேவதிகிட்டே சொன்னே?''

குழந்தை பிறக்கவில்லை என்ற ஆதங்கத்தால் அவள் டாக்டர் ரேவதியைக் கலந்து ஆலோசிக்கப் போனபோது அவள் கணவரும்கூட வந்திருந்தார், குழந்தை பிறக்கவே பிறக்காது என்று ரேவதி கூறிவிட்டால் மனம் நொறுங்கிப் போய்விடுவாளே மனைவி என்ற பரிவுதான் காரணம். அப்பொழுது ரேவதி அவளைக் கேட்டு விட்டாள். ''ஒரு குழந்தை பிறந்திருக்கணுமே?'' என்று

வயிற்றைத் தொட்டதுமே கேட்டபோது அவளால் ஒளிக்க முடியவில்லை, ''பிறந்தது உடனேயே இறந்து போய்விட்டது'' என்று சட்டென்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டாள்.

''கவலைப்படாதீங்க. உடம்பில் ஒரு கோளாறும் இல்லை. இளம் வயது. கட்டாயம் குழந்தை பிறக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது''என்றாள். ஆனால் அவள் கங்காதரனிடம் அதிகம் பேசவில்லையே?

''டாக்டர் ரேவதியை நான் ஒரு கல்யாண வரவேற்பிலே சந்தித்தேன். அப்போ என்கிட்ட சொன்னாள். ''உங்க மனைவி மனம் ரொம்ப நொறுங்கிப் போயிருக்கா. பாவம் முதலில் பிறந்த குழந்தை இறந்துபோன துக்கத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியலை. அதனாலேயே ஒரு மாதிரி உணர்ச்சிக் குழப்பத்திலே இருக்கா. எங்கேயாவது குளிர் பிரதேசத்துக்குக் கொஞ்ச நாள் ஓய்வா அழைச்சிட்டு போய்ட்டு வாங்கோன்னு சொன்னாள். எனக்கு நிலைமை புரிஞ்சு போச்சு. கல்யாணத்துக்கு முன்னாலே கர்ப்பமாகிவிட்ட உன்னால் அதைத் தனியே சமாளிக்க முடியலை. நான் ஊரில் இருந்தால் உடனடியாக் கல்யாணம் செய்துகொண்டு விட்டிருப்பேன். வெளியே சொல்லப் பயந்து நீ கருவைக் கலைச்சு விட்டிருக்கே. இல்லை குழந்தை பிறந்ததும் அதை யாரிடமாவது தத்துக் கொடுத்திருப்பே, உண்மையைச் சொல்லு நீலா. நம் குழந்தை என்ன ஆச்சு?''

கையும் காலும் பதற, நெஞ்சு படபடக்கக் கணவனை அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

''சொல்லிடறேன், என்னை நீங்க மன்னிக்கணும்.''

''பயப்படாதே சொல்லு. இப்போதாவது நான் உண்மையைத் தெரிஞ்சுக்கிறேன்.''

''குழந்தை உயிருடன்தான் பிறந்தது. பெண் குழந்தை. இல்லெஜிடிமேட் குழந்தை என்ற பட்டத்



துடன் வளர்க்கப் பயந்து, சமூகத்தை எதிர்த்து நிற்கத் துணிவில்லாது கௌரவப் போர்வைக்குள்ளே ஒளிந்து கொண்டு அந்தக் குழந்தையை அப்பாவோட நண்பர் கிட்டே கொடுத்து எங்கேயாவது வளர்க்க ஏற்பாடு செய்யச் சொன்னேன். அவர் தமக்குத் தெரிந்த ஒரு தம்பதியிடம் கொடுத்துவிட்டார்.''

''அவ்வளவுதானே...? நாம் அவர்களைத் தேடிப் போய் நம் குழந்தையை மீட்டுக்கொண்டு விடுவோம்.'' ஆவலுடன் முனகினார் கங்காதரன்.

'முடியாதே... அவர்கள் பெயர்தான் தெரியும். முகவரி தெரியாது.''

''என்ன சொல்றே? இப்போ நம் குழந்தை எங்கே இருக்கான்னு தெரியாதா?'' துயரத்துடன் அவர் கேட்ட போது நீலாவின் நெஞ்சு வேதனையில் வெடித்தது. எத்தனை பெரிய துர்பாக்கியம்? பெற்றவளுக்குக் குழந்தையின் இருப்பிடம் தெரியாது—பெயர் தெரியாது—வாழும் வசதி தெரியாது போய்விட்டிருக்கிற அலங்கோலம்.

''உன்னை நான் நொந்துக்கமாட்டேன். கவலைப்படாதே நீலு. அந்தச்சங்கடத்திற்குப் பொறுப்பாளி நான் தானே? நான் திரும்பி வந்தப்போ என்கிட்ட சொல்ல உனக்குப் பயமா இருந்திருக்கலாம். நீ மிரண்டு கொண்டிருக்கவே தேவையில்லை. உன் அன்பிலே நான் களங்கம் காணவே மாட்டேன். உனக்கு என்னைத் தெரியாதா? இப்போ கூட நான் உன்னைக் குத்தம் சொல்லலை. பிழைச்சு எழுந்துட்டா முதல் காரியமா நான் நம்ப குழந்தையைத் தேட முயலப் போறேன். கட்டாயம் வெற்றி கிடைக்கும். ஒரு சமயம் எனக்கு ஏதாவது நடந்துட்டா...''

''ஐயோ அப்படியெல்லாம் பேசாதீங்க.''

''நெருப்புன்னா வாய் வெந்துடுமா? எனக்கு மரணம் சம்பவிச்சுட்டா, நீ மனம் தளர்ந்து போகாம நாம் எடுத்த

இந்த முயற்சியைக் கைவிடாதே. நம் குழந்தையைத் தேடிக் கண்டு பிடி. அவள் அனுபவிக்காத சுகபோகங்களை அள்ளிக் கொடு. இந்தச் சொத்து அனைத்தையும் அவளுக்கு வாரி வழங்கு. மறக்காதே. என் ஆன்மா அப்போதுதான் சாந்தியடையும் நீலா.''

அவர் தழுதழுத்த போது அவள் பேச முடியாது தலையை ஆட்டினாள். அவரது கையைப் பற்றிக்கொண்டு கண்ணீரை மாலையாக உகுத்தாள்.

இரண்டு தினங்களுக்குப் பின் கங்காதரன் இறந்து போனார். நீலாவின் போலி கௌரவத்திற்குப் பலியான தம் குழந்தையின் முகத்தைப் பார்க்க முடியாது போய் விட்டார்.

அந்தக் குற்ற உணர்வு வேறு அவளைக் கொத்திப் பிடுங்கத் தொடங்கி விட்டது.

உறவினர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஆனால் யாரையும் அவள் அண்டி உதவிகள் பெற விரும்பவில்லை. கணவன் விட்டுப்போன பெரிய கம்பெனியை நிர்வகிக்க இயலவில்லை. ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் விற்றுவிட்டுச் சொந்த வீட்டில்கூட வசிக்க முடியாது வாடகைக்கு விட்டுவிட்டு இப்போது அந்த ஃப்ளாட்டில் வாடகைக்குத் தங்கியிருக்கிறாள்.

''கேட்க ரொம்பக் கஷ்டமாகத்தான் இருக்கு. இப்போ கல்கத்தாவில் தொடங்கி உங்கள் மகளைச் சல்லடை போட்டுச் சலித்துத் தேட வேண்டும். நாள் பிடிக்கும். சில சமயம் சில வருஷங்கள் கூட ஆகலாம். நிறையப் பணச் செலவு ஏற்படும். தத்து எடுத்துக் கொண்டவர்களின் பெயர் தெரிவது நல்லதாப் போச்சு. அவர்களைக் கல்கத்தா முகவரியிலிருந்து தேடத் தொடங்க வேண்டும். ரொம்ப சிரமமான காரியம்.'' பெருமூச்செறிந்தாள் சாரதா.



''வேண்டாம். தேவையில்லை. அவளை நான் கண்டு பிடித்து விட்டேன்.''

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் சாரதா. ''கண்டு பிடித்து விட்டீர்களா?''

''ஆச்சர்யகரமான சம்பவம். என் மனதிலே பொங்கிக் கொண்டிருந்த ஆதங்கம் போலும்! எதிர்பாராத விதமா, கதைகளில் வருகிறதுபோல அவளை நான் நேருக்கு நேர் பார்த்து விட்டேன். சாரதா அம்மா, என் குழந்தையின் பேர் என்ன தெரியுமா? மாயா! அழகான பேர். இத்தனை நாள் என் கண்ணில் படாது மாயமாக இருந்தாளே! பொருத்தமான பேர். என் பச்சைக்கிளி எத்தனை அழகா இருக்கா தெரியுமா...! அப்பாவை அப்படியே உரிச்சு வச்சுக்கொண்டு...அவர் உசிரோட இருந்தா பார்த்துப் பூரிச்சுப் போயிருப்பார். உடனடியாக அவளைத் தம்மோடு அழைச்சுக்க ஏற்பாடுகள் செய்திருப்பார். என்னால் முடியுமா என்கிற சந்தேகத்தாலேதான் உங்ககிட்டே வந்திருக்கேன்.'' குலுங்கி அழுதாள் நீலா.

''உணர்ச்சி வசப்படாம மீதியையும் சொன்னால் நல்லது. கண்களைத் துடைச்சுக்கோங்க. மேலே என்ன செய்யணும்னு தீவிரமா நினைச்சுப் பார்க்கனும்.''

முகத்தைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் நீலா. ''என் மனதிலே தீவிரமாக வளர்ந்து விட்டிருந்த அந்த ஆசையேதான் காரணம்னு நான் நம்பறேன்.

கேட்டால் உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். எனக்கே நம்ப முடியாத அதிசயம் அது. என் சிநேகிதி கல்லூரித் தோழியோட இரண்டாவது பிள்ளை அமெரிக்காவில் வேலை பார்க்கிறவன் லீவுக்கு வந்திருந்தான். ஊருக்குக் கிளம்பும்போது அவனுக்கு ஒரு பார்ட்டி ஏற்பாடு பண்ணியிருந்தா. என்னைக் கூப்பிட்டிருந்தா. நான் ஒரு பரிசுப் பொட்டலத்தோட போனேன்.

கணவனை இழந்து துக்கத்திலே மூழ்கிக் கிடக்கும் நான் அவனை என் வீட்டுக்குக் கூப்பிட்டு விருந்து கொடுத்து உபசாரம் செய்ய முடியாது என்பதை என் சிநேகிதி புரிந்து கொண்டாள். என் மனம் குழம்பிக் கிடக்கு. என்னாலே விருந்திலே கலந்துக்க முடியாதுன்னு மறுத்ததை என் சிநேகிதி ஒப்புக்கொள்ளலை. ''கட்டாயம் நீ வரணும். ஒரேயடியா துக்கத்திலே நீ அமுங்கிப் போறதும் நல்லதில்லை. நடந்தது நடந்துட்டுது. நாம் வாழ வேண்டும். போனதை நினைச்சு நீ அழுது கொண்டு தனிமையிலே தவிக்கிறது எனக்குக் கஷ்டமா இருக்கு. வந்து நாலு பேரோட கலகலன்னு இரு. துயரம் கொஞ்சம் அடங்கும்'' என்று வற்புறுத்தினாள். அவளது வற்புறுத்தலினால்தான் நான் மாதர் சங்கத்திலும் சேர்ந்தேன்.

அமைதி வேணும்னு அதை வெளியே தேடிக்கொண்டு போனால் கிடைக்காது. உள்ளே மனதிலிருந்து தானே அது உருவாக வேண்டும்? எனக்கு இதெல்லாம் தெரியும். என்ன பயன்? பல ஆண்டுகளாக அமைதி இன்றித் தவித்துக் கொண்டுதான் இருக்கிறேன். மூணு வருஷத்துக்குப் பிறகு வந்திருக்கான் குழந்தை. மறுபடி அமெரிக்காவுக்குப் போகப் போறான். பிறகு எப்போ பார்க்கப் போறோம் என்றுதான் புறப்பட்டேன்

என் சிநேகிதி மங்களத்துக்கு எதையுமே சின்னதா செய்யத் தெரியாது. வசதியா வாழ்கிறவள். காசு பணத்தைக் கணக்கில்லாம செலவழிப்பா. விருந்துக்கு ரொம்பப் பேரைக் கூப்பிட்டிருந்தா.

கூச்சலும் சிரிப்புமாக சாப்பாட்டுக் கடை ஆரம்பமாகியது. எனக்கு ஒரே தலைவலி—குளியலறையில் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு ஒரு மாத்திரை சாப்பிட்டால் தான் வலி குறையும் போலத் தோன்றவே எழுந்து அருகிலிருந்த குளியலறைக்குள் புகுந்தேன். வாஷ்பேசின் அருகே முகத்தைக் கழுவி முடியை வாரிப் பொட்டிட்டுக் கொண்டு நின்றாள் ஒரு பெண்.



என்னைக் கண்டதும் வேகமாகத் திரும்பினாள். அப்படியே அதிர்ந்து போனேன்.

''நீ யார் அம்மா? மங்களத்துக்கு உறவா?'' என்று கேட்டபடி என் கணவரின் சாயலில் நின்ற அந்த இளம் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தேன்.

வயது இருபது இருக்கும் அவளுக்கு. தங்கக் கொடி போல மூக்கும் கண்களும் கதை பேச என் கணவரைப் போன்று கோணலாகச் சிரித்தபடி என்னைப் பார்த்தாள்.

''மங்களம்மாளின் பேரக் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் டியூஷன் எடுக்கிறேன். இன்னிக்கு இங்கே விருந்து நடக்கிறதாலே குழந்தைகளைக் கொஞ்சம் கட்டி மேய்க்க என்னைக் கூப்பிட்டனுப்பினாங்க. எனக்கு இன்னிக்குப் பள்ளிக்கூடம் லீவு. வரமுடிஞ்சது. என்னையும் விருந்திலே கலந்துக்கக் கூப்பிட்டிருந்தாங்க...முதல் பந்தி முடிஞ்சதும் இரண்டாவது பந்தியிலேதான் உட்கார முடியும்.'' மெல்லச் சிரித்தாள்.

''உன்னை எங்கேயோ பார்த்தாப்பலே இருக்கே அம்மா...''என்று தடுமாற்றத்துடன் கேட்டேன். என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. உடம்பெல்லாம் வியர்த்து கொட்டிவிட்டது.

''என்னை நீங்க பார்த்திருக்கவே முடியாது. ஆரம்ப காலத்திலே நாங்க கல்கத்தாவில் இருந்தோம்.''

''கல்கத்தாவிலேயா?'' அதிர்ச்சியுடன் கேட்டேன்.

''ஆமாம். என் தந்தை அப்போ அங்கே லலிதா அண்ட் சன்ஸ் என்கிற கம்பெனியில கணக்கரா வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கம்பெனி நஷ்டத்திலே மூழ்கிப் போனதும் மூடிவிட்டாங்க. வேலையைத் தேடிக்கொண்டு அப்பா ஹைதராபாத்துக்கு வந்தார். பின்னாலே அங்கிருந்து பம்பாய் போனோம். இப்படி

ஊர் சுற்றிவிட்டுக் கடைசியா இங்கே வந்திருக்கோம்.'' சிரித்தாள்.

முல்லை மொக்கைச் சேர்த்து வச்சதுபோல அவளது வரிசையான பற்களின் அழகு என்னை ரொம்பவே மயக்கியது.

''உன் பேர் என்ன?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''மாயா கணபதி'' என்ற போது தலையில் ஓங்கி அடித்தாற் போன்றதொரு திகைப்பு.

''கணபதி என்கிறது உன் அப்பா பேரா? இல்லாட்டா உனக்குக் கல்யாணம் ஆகினதாலே...''

களுக்கென்று அவள் சிரித்தாள். ''எனக்கு இன்னும் வயசாகலே அம்மா. சாதாரணமா கல்யாணம் என்கிறது பெண்களுக்குப்பெரிய பிரச்னையாகிட்டு வர காலம் இது. அதுவும் எங்களைப் போன்றவங்களுக்கு ரொம்ப ரொம்பப் பெரிய பிரச்னையாச்சே?!''

''ரொம்பப் புத்திசாலியா இருக்கியே அம்மா'' சிலாகித்தபடி அவளை மேலும் கீழும் பார்த்தேன். ''ஆசிரியர் வேலை பார்க்கிறியா?'' மெல்லக் கேட்டேன். என் மனம் அவளைக் கண்டு மெழுகாக உருகியதை உணர்ந்தேன்.

''நாங்க இருக்கிற தெருவுக்குப் பக்கத்திலே ஒரு தனியார் நர்ஸரி பள்ளிக்கூடம் நடக்கிறது. அதிலே கஷ்டப்பட்டு வேலை தேடிக் கொண்டிருக்கேன். இரண்டு மூணு இடத்திலே டியூஷன் வச்சிண்டு இருக்கேன்.''

''உன் அப்பா என்ன வேலை பண்றார்.''

''அப்பா போய்விட்டார். அம்மாவுக்குத் தள்ளலை. வேலை செய்ய முடியலை.''

''அப்படியா?'' கேட்டு விட்டு அவள் நகர்ந்ததும் பேசினில் முகத்தைக் கழுவிக் கொண்டு சமையலறைப் பக்கம் போனேன்.



மங்களத்து வீட்டு சமையற்காரியை எனக்கு நன்றாகவே தெரியும். அந்த வீட்டில் வெகுகாலமா அவள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறவள். ''கொஞ்சம் சூடா தண்ணி கொடுங்கோ. தலை வலிக்கிறது'' என்றபடி அவள் அருகே வந்து நின்றேன். அவளைக் கேட்க வேண்டும் என்று துடித்த ஆவலை அடக்க முடியலை.

''யார் இந்த மாயா என்கிற பெண்? எங்கேயோ பார்த்தாப்பல இருக்கு. மங்களத்துக்கு உறவென்று சந்தேகப்பட்டேன்'' என்றபடி வெந்நீர் டம்ளரை எடுத்துக் கொண்டேன். தலைவலி மாத்திரையைப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டு ஒரு வாய்த் தண்ணீருடன் விழுங்கினேன்.

''நம்ம அம்மாவுக்கு உறவுக்காரப் பெண் இல்லே. உண்மையைச் சொல்லப் போனா நான்தான் இரக்கப்பட்டு அந்தப் பெண்ணை இங்கே டியூஷனுக்கு அமர்த்தினேன். பாவம் அந்த ரத்னம்மாள், அதான் மாயாவோட அம்மா ஆர்த்ரைடிசிலே மூட்டு வலியோட அடிக்கடி படுத்துக் கொண்டு விடறா. சமீபத்திலேதான் எனக்கு மாயாவோட அம்மா பரிச்சயமானா. கோவிலிலே சந்திச்சுக் கொண்டோம். ரொம்ப சிரமப்படற குடும்பம். கல்கத்தாவிலே அவ ஹிந்தி ஆசிரியையாக ஒரு பள்ளிக்கூடத்திலே வேலை செய்துகொண்டு இருந்தாளாம். புருஷனுக்கு வேலை போய் ஊரை விட்டுக் கிளம்ப நேர்ந்தப்போ வேலையை அவள் விட்டுட்டாளாம்.

''பிறகு நிரந்தரமா ஒரு இடமில்லாம குடும்பம் சுத்திகிட்டிருந்ததாம். அதனாலே எங்கேயும் வேலை பார்க்க முடியாம அங்கங்கே டியூஷன் சொல்லிக் கொடுத்துக்கிட்டிருந்தாளாம். பெண்ணை எப்படியோ படிக்க வச்சிருக்கா. பாவம், பம்பாயிலே சிநேகிதர் வீட்டிலே தங்க வச்சுப் படிக்க வைக்க நேர்ந்ததாம். நாடோடி போலப் புருஷனும் பெண் ஜாதியும் அலைஞ்சு கொண்டிருந்ததாலே பெண்ணோட படிப்பு கெட்டுவிடக்கூடாதுன்னு பாவம்

ரொம்பவே சிரமப்பட்டிருக்கா. ஆரம்பத்திலே கொஞ்ச நாள் இங்கேயும் இந்தி டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாளாம். வியாதி வந்துவிடவே முடியலையாம். அப்படி அந்தம்மாளுக்கு ரொம்ப வயசாகி விடலை. அம்பதுக்குள்ளே தான் இருக்கும். அவ ஒத்த வயசுக்காரி நான் 'வேலை' செய்யறேனே—வியாதி அவளை ஒடுக்கி விட்டிருந்தது. பி.ஏ. படிச்சும் மாயாவுக்கு வேலை கிடைக்கலை. கொஞ்ச நாள் கழிச்சு அந்த நர்சரி பள்ளிக் கூடத்திலே வேலை கிடைச்சுது. என்ன பிரமாதமான சம்பளம்? நூற்றம்பது ரூபாய்—வாடகைக்கு நூறு ரூபாய் போவதில் ஐம்பது ரூபாயில் கஞ்சியா குடிக்க முடியும்? நம்ப அம்மா வீட்டிலே டியூஷன் அமர்த்திக் கொடுத்தேன், இருநூறு ரூபா சம்பளம் கொடுக்கறாங்க. இன்னொரு இடத்திலே நூத்தம்பது கிடைக்கிறது. வேறே ஒரு வீட்டிலே—இருநூத்தம்பது. பாவம் குழந்தை நிக்க நேரமில்லாமே ஓடறா...இவ ஓடறதாலேதான் குடும்பம் நடக்கிறது'' என்று படபடவென்று பேசினாள்.

அடிவயிற்றைச் சங்கடம் புரட்ட நான் எச்சிலை விழுங்கிக் கொண்டு நகர்ந்தேன். மயக்கம் வரும் போல என் தலை சுற்றியது.

என்ன அநியாயம் செய்து விட்டேன். மாயா என் மகள் தான். சந்தேகமில்லை. கல்கத்தாவிலே லீலா அண்ட் கோவில் வேலை பார்த்த கணபதி தம்பதிகளுக்குத்தான் அவளைத் தத்துக் கொடுத்துவிட்டுத் தலைமறைவாக ஓடி வந்தேன். வருஷங்களை எண்ணிப் பார்த்தால் அவள் வயதுக்கு ஒத்து வருகிறது. பெயர் சரி... வயது சரி... தோற்றமும் சரி. ஐயோ என் பெண்ணை வறுமையிலே வாடவிட்டு விட்டேனே பாவி, உள்ளம் ஓவென்று புலம்பச் சாப்பாட்டறைக்குள் வந்து உட்கார்ந்தேன். பாயசம் பாஷாணமாகக் கசந்தது.

கொஞ்ச நேரம் பொறுத்து மறுபடியும் சமையலறைப் பக்கம் எட்டிப்பார்த்தேன்.



மாயாவின் முகவரியைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல்தான் காரணம்.

வந்த விருந்தினர்களுக்குச் சாப்பாடு போட்ட பின்பு —வேலைக்காரர்களுடன் பின் பக்கத்து ஹாலில் தரையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் மாயா...

என் குடல்கள் எல்லாம் முறுக்கிக் கொண்டு விட்டது போன்ற வேதனை.

என் அருமை மகள். வேலைக்காரர்களுக்குச் சமமாகி விட்டாளே என்று வயிற்றெரிச்சலாக இருந்தது.

என்னைக் கண்டு புன்முறுவலுடன் சாப்பிட்ட கையைக்கழுவ எழுந்திருந்தாள் மாயா.

அப்பொழுதுதான் கவனித்தேன். அவள் உடுத்தியிருந்த புடவை ஓரம் நைந்து காணப்பட்டது.

சமையலறை பக்கம் எட்டிப் பார்த்தேன். 'ஐயோ பாவம் அந்தப் பெண் மாயா...ரொம்பச் சிரமப்படுகிறா போலிருக்கு. புடவை கூட...' என்று நான் முடிக்கு முன் சமையல்காரம்மா குறுக்கிட்டாள்.

''வேலைக்கு வந்ததும் நம்ப அம்மாதான் தினம் உடுத்திக்க தன்னோட பழைய புடவைகள் இரண்டைக் கொடுத்தாங்க. அந்தப் பெண் வாங்க மறுத்துட்டா ''எனக்கு தேவைப்பட்டது இருக்கு—தப்பா நினைச்சுக் காதீங்க. எங்கம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. யார் கிட்டேயும் பரிசுகள்—உதவிகள் வாங்கிறதை வெறுப்பவங்க...எனக்கும் அதே மாதிரியான எண்ணம்—கர்வம் பிடிச்ச பெண்ணுன்னு கணக்குப்-போட்டுடாதீங்க'' என்றாள். அம்மாவுக்குக் கொஞ்சம் கோபம்தான் ஏற்பட்டது. அதைக் காட்டிக்காம சிரிச்சு மழுப்பிட்டாங்க.

''எனக்கு மாயாவோட தன்னம்பிக்கை சுய கௌரவம் எல்லாம் ரொம்பப் பிடிச்சது. அவ என்னைப்போல. நான்

இந்த வீட்டிலே என் சம்பளத்துக்கு மேலே எதையும் எதிர் பார்ப்பதில்லை—கேட்கவும் மாட்டேன்—கொடுத்தாலும் எடுத்துக்க மாட்டேன்.''

சம்மட்டி கொண்டு என் இதயத்தை யாரோ அடிப்பது போன்ற துயரத்தில் நான் துடித்துப் போனேன்.

என் பீரோவிலே...அடுக்கடுக்கா நான் எத்தனை புடவைகள் வச்சிருக்கேன்!

என் குழந்தை—இப்படித் தரித்திரத்திலே தவிக்க ணுமா...'

கண்களில் பெருகிய கண்ணீரை விழுங்கிக் கொண் டேன், எல்லோரும் சிறிது நேரத்தில் புறப்பட்டோம்.

என் கார் தோட்டத்தினின்று புறப்படும்போது கவனித்தேன். கையில் குடைகூட இல்லாது மாயா நல்ல வெய்யிலில் சில புத்தகங்களை நெஞ்சோடு இறுக்கி அணைத்துக் கொண்டு, வேகமாகக் கேட்டைத் தாண்டிச் சாலையிலிறங்கிக் கொண்டிருந்தாள். காரை அவள் அருகே நிறுத்தச் சொன்னேன்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். நெற்றியிலும்—முகவாயிலும் அரும்பி நின்ற வியர்வையை என் புடவைத் தலைப்பில் துடைத்து விட்டு, 'மாயா! என் கண்ணே' என்று மார்போடு அணைத்துக்கொள்ள வேண்டும் போன்றதொரு ஆவேச உணர்வு ஏற்பட்டது.

''ஏம்மா, நீ எங்கே போகணும்? மறுப்பு இல்லேன்னா உன்னை உன் வீட்டிலே கொண்டு விட்டுடறேன்.'' மெல்லிய குரலில் பரிவுடன் கேட்டேன்.

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள் ஒரு கணம்—பிறகு சங்கோஜத்துடன் புன்னகைத்தாள்.

''உங்களுக்கு ஏன் சிரமம்? கொஞ்ச நேரத்தில் பஸ்ஸில் போய் வீடு சேர்ந்து விடுவேன்.''



''உனக்கு மறுப்பு இல்லேன்னா உன்னைக் கொண்டு விட எனக்கு ரொம்ப சந்தோஷம். எந்தவிதச் சிரமமும் கிடையாது. ஏறிக்கோம்மா'' உபசரித்தேன்.

கொஞ்சம் தயங்கி விட்டுக் காரில் ஏறிக் கொண்டாள்.

''அப்பாடா'' என்று ஆசனத்தில் சாய்ந்தாள்.

''உங்களுக்குக் குழந்தைகள்—பேரன் பேத்திகள் ஏதாவது இருக்காம்மா?''

தன் முல்லை மொக்குப் பற்களைக் காட்டி மெள்ளச் சிரித்தாள் அவள்.

வலது கன்னத்திலே விழுந்த குழியை விரலால் தொட்டு மகிழ வேண்டும் போன்றதொரு ஆவல் என்னை உசுப்பியது.

உணர்வுகளை அடக்கிக் கொண்டேன். ''ஏன் கேட் கிறே?'' பதிலுக்குச் சிரித்தேன்.

''இன்னொரு இடத்திலே டியூஷன் கிடைச்சுட்டா அந்தப் பள்ளிக்கூட வேலையை உதறி விடலாம்னு கேட்டேன். இப்ப சத்தியமா கிடைக்கிற பணத்தை வச்சுக் கொண்டு நானும் அம்மாவும் நல்லாத்தான் இருக்கோம். காலை பத்து மணியிலிருந்து மூன்று மணிவரை அந்தப் பள்ளிக்கூடத்திலே நேரம் போய் விடுவதாலே... அம்மாவை என்னால நல்லா கவனிக்க முடியலை.''

அம்மா என்று அவள் உச்சரித்த அந்த வார்த்தையைக் கேட்டதுமே என் அடிவயிற்றில் நெருப்புப்போன்றதொரு உணர்வு. ஐயோ அந்த பாக்கியத்தை இன்னொருத்திக்கு விட்டுக் கொடுத்து விட்டோமே என்றதொரு ஆதங்கம்.

''எனக்கு அந்த பாக்கியம் இல்லேம்மா...'' என்றேன் தடுமாற்றத்துடன்.

''ஸாரி நான் ரொம்ப பர்சனலா கேட்டுவிட்டதுக்கு மன்னிச்சுக்கோங்க. நான் போக வேண்டிய முகவரியைச்

சொல்லிடறேன். செளகர்யப்பட்ட இடத்திலே என்னை இறக்கிவிட்டா போதும். வீட்டு வாசல்வரை வரணும்னு அவசியமில்லே'' என்றாள்.

''செய்கிற காரியத்தை முழுசாச் செய்து முடிக்க ணும்னு என் கொள்கை. எங்கேன்னு சொல்லும்மா'' என்றேன் ஆவலுடன். அவள் வசிக்கும் இடத்தைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை.

''மந்தைவெளி, மகராஜன் தெரு. பத்தாம் எண்.''

''வீட்டு வாசலிலேயே கொண்டு விட்டுட்டுப் போறேன் அம்மா'' என்றேன் நான்.

''மகராஜன் தெருன்னு பேரே ஒழிய குறுகலான தொரு சந்து. காரைத் திருப்ப முடியாது கஷ்டப்படுவீங்க. சந்தின் ஆரம்பத்திலேயே என்னை விட்டுட்டாப் போதும்'' முறுவலித்தாள்.

ஆனால் நான் அவளை வீடுவரை கொண்டுவிட விரும்பினேன். பிறந்த பொழுதுதான் அவளை அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்தேன். இப்போது புரிந்து கொண்ட போது நடுவழியில் விட்டுவர மனம் இருக்கவில்லை.

மகராஜன் தெரு ஒரு குறுகிய சந்துதான். காரைப் பின்னாலேயே நகர்த்திக் கொண்டுதான் வெளிவர வேண்டும். டிரைவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். ''உள்ளே போ. பத்தாம் நம்பர் வீட்டு வாசலில் நிறுத்து'' என்றேன்.

வழியில் நின்று கொண்டிருந்த எருமைமீது இடிக்காது டிரைவர் மெள்ள வண்டியை ஓட்டி வீட்டெதிரே நிறுத் தினார்.

அழுக்கும் குப்பையும் நிறைந்த தெரு. எல்லாம் பழங் காலத்து ஓட்டுக்கூரைக் கட்டிடம். தெரு ஓரத்திலே எச்சில் இலையும், அதைச் சுற்றிச் சில சொறி நாய்களும் நின்றதொரு கோலம்.



உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு இறங்கினேன்—என் மகள் இத்தனை அழுக்கான சூழ்நிலையிலா வாழ்கிறாள்? பாவி! நான் என்ன காரியம் செய்து விட்டிருக்கிறேன். அவளது வசதியான வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறேனே என்று மனம் புலம்ப, துக்கம் தாளாது அவள் பின்னால் உள்ளே நுழைந்தேன். மனம் பக்பக்கென்று அடித்துக் கொண்டது. கல்கத்தா விலே நான் என் மகளை பிறந்த ஏழாவது நாள் பிரிந்த போது... டாக்டரின் உத்திரவுபடியே நான்—திருமதி ரத்னா கணபதியைப் பார்க்கவில்லை.

அவளும் என்னைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

ஆனால் அங்கிருந்து கிளம்பும்போது நான் ரொம்ப அழுதேன். எங்கள் நண்பர் மனம் கரைந்துபோய் என் வேண்டுகோளுக்குத் தலையசைத்தார். என் குழந்தையை வளர்க்கப் போகிறவர்களின் வீட்டைக் காட்டினார். குழந்தையுடன் வாசலில் நின்று கொண்டிருந்த ரத்னாவை எனக்குக் காரிலிருந்தபடி காட்டிக் கொடுத்தார்.

என்னால் அவளை மறக்க முடியாது. இடது கன்னத் திலே பாதியளவுக்கு ஒரு நிழல் மச்சம் முகத்தைச் சிறிது கடுமையாக்கிக் கொண்டிருந்தது. இந்த ஒரு அடை யாளமே போதும். எங்கே அவளைப் பார்த்தாலும் கண்டு பிடித்து விடுவேன் என்றதொரு தெம்பு ஏற்பட்டது. அத் துடன் பிரிய மனமின்றி என் பரிசாக நான் பெற்ற மக ளுக்கு என் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து சுவீகாரத் தாயிடம் சேர்க்கும்படி சொல்லி யிருந்தேன். அந்தச் சங்கிலியில் எங்கள் குலதெய்வம் வெங்கடாசலபதி டாலர் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் பின்புறத்திலே நகைசெய்த கம்பெனியின் பெய ரான மஞ்சுநாத் என்பதின் சுருக்கம் எம். என். என்று பொறிக்கப்பட்டிருந்தது. அதைப் பிற்காலத்தில் அடை யாளமாகச் சொல்லலாம் என்றுதான் அப்போது நினைத் தேன்.''

மாயாவின் கழுத்தில் போலி முத்துமாலை ஒன்று கிடந்தது.

'ஒரு சமயம் வறுமையைச் சமாளிக்க அந்தச் சங்கிலியை விற்று விட்டார்களோ?' மனது தவியாய்த் தவித்தது. நடையைத் தாண்டிக் கூடத்திற்கு வந்தேன்.

முற்றத்தில் இறங்கிக் காலைக் கழுவிக் கொண்டாள் மாயா.

''அம்மா...வாங்கோ'' என்று குரல் கொடுத்தாள். ''நாங்க முன்போர்ஷனில் குடியிருக்கோம். ஒரு விஷயத்தில் மிகவும் சௌகர்யம். வாசலில் காய்கறிக்காரன் வந்தால் சீக்கிரம் வெளியே போய் வாங்கிக்க முடியும். அதே சமயம் மத்த மூணு போர்ஷன்காரங்க இந்தத் தாவாரம் வழியா வருவதும் போவதுமாக இருப்பதாலே கூடத்திலே நிம்மதியாப் படுக்க முடிகிறதில்லை. அம்மா பாவம், அறைக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கு.'' யதார்த்தமாகத் தங்களது வறுமை நிலையை விவரிப்பதில் கூச்சமின்றி அவள் பேசியபோது என் வயிறு பற்றி எரிந்தது.

இத்தனை அடக்கமான — அறிவான, அழகான பெண்ணை உயிரோடு பறிகொடுத்து விட்டேனே என்று கத்திக் கதற வேண்டும் போலத் துயரத்தில் துடித்தேன்.

ரத்னா கணபதி வெளியே வந்தாள், ஒத்த வயசுதான். ஆனால் வறுமையில் மிகவும் துவண்டு விட்டிருந்தாள். முன் •நெற்றிக் கூந்தல் பட்டையாக வெளுத்துக் காணப்பட்டது. உள்ளடங்கிய கன்னங்களும் அலுப்புத் தெரிந்த முகமுமாக இருந்தாள்.

இடது கன்னத்தில் நிழலாடிய அந்த மச்சத்தைப் பார்த்ததும் என் உடல் நடுங்கியது. அவளேதான். இந்த மாயா நூற்றுக்கு நூறு என் மகள்தான் என்ற உண்மை வெளிச்சமாகியதும் என் மனம் பட்ட பாட்டைச் சொல்லவே முடியாது.



''உட்காருங்கள் ' என்று ஒரு ஒட்டை நாற்காலியைக் காட்டினாள்.

''உட்கார நேரமில்லை. உங்க குழந்தையைக் கொண்டு வந்து பத்திரமா சேர்த்துட்டுப் போக வந்தேன்'' என்றேன்.

''நன்றி அம்மா. நீங்க சிரமம் எடுத்துக் கொண்டிருக்க வேண்டாம். வீச நாழியில் அவள் பஸ்ஸில் வீட்டுக்கு வந்துடுவா. கெட்டிக்காரி'' என்றாள் பெருமையுடன்.

''அம்மாவுக்குக் காப்பி கலந்து தரப் போறேன். நீங்களும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுப் போகலாமே'' என்று மாயா உபசரித்தபோது வேதனையாக இருந்தது.

அவளது பிஞ்சு விரல்களைப் பரிவுடன் பார்த்தேன். 'ஐயோ என் குழந்தையா வீட்டு வேலைகளையும் செய்கிறாள்? என்ன கொடுமை! மனம் இடித்தது.

''பிறகு பார்க்கிறேன்'' என்றபடி வெளியே வந்தேன். அன்றிலிருந்து நடைப்பிணமாகி விட்டேன். பலமுறை அந்தச் சந்துவரை காரில் போய் வருகிறேன்.

ரத்னா கணபதியைப் பார்த்து, 'மாயா, என் மகள். அவளை இப்படி வறுமையால் வாட்டாதே. என்னிடம் திருப்பிக் கொடுத்து விடு. உனக்கு எத்தனை லட்சம் வேண்டுமானாலும் தந்து ஈடு செய்து விடுகிறேன்' என்று கதற வேண்டும் போல மனம் துடிக்கிறது. ஆனால் துணிவு இல்லை.

''அம்மா சாரதா! நீங்க எத்தனையோ பேருக்கு உதவி இருக்கீங்க. இது சம்பந்தமா எனக்கு உதவி என் மகளை எனக்கு வாங்கித் தாருங்கள். உங்களை உயிர் உள்ளளவும் மறக்க மாட்டேன்.'' கைகளால் முகத்தை மூடிக் கொண்டு இருதயம் இரண்டாகி விட்டது போலக் குமுறி அழுதாள் நீலா.

## 3

**வே**லைக்காரி புறப்பட்டுப் போன பின்பு சாரதா வெளியே செல்ல ஆயத்தமானாள்.

கஞ்சியில் விறைத்துக் கொண்டிருந்த பெட்டி போட்ட காஞ்சிபுர நூல் சேலையும் வெள்ளை ரவிக்கையுமான அலங்காரத்தில் வெளியில் செல்லப் புறப்பட்டாள்.

கதவுகளைச் சாத்து முன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். காலை பத்து மணியளவிலேயே கோடை காலச் சூரியன் சுள்ளென்று கொளுத்தத் துவங்கி விட்டிருந்தது.

சமீபத்தில் தலை சுற்றல் என்று வைத்தியரிடம் போன போது அவர் அவளை மிகவும் எச்சரித்து விட்டிருந்தார்.

அறுபது வயதைத் தாண்டியவர்கள் எல்லோருமே இயற்கை தந்த போனஸ் வயதில்தான் வாழ்கிறார்கள். அதனால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இரத்த அழுத்தம் லேசாக இருக்கிறது. மருந்துகள் தேவையில்லை. பத்திய உணவோடு—அலைச்சலை மிதப் படுத்திக் கொண்டு அமைதியாக வாழ வேண்டும். தகிக்கும் வெய்யிலில் தலை நீட்டாதிருப்பது நல்லது. அவசியம் போக வேண்டுமென்றால் குடையுடன் — கருப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு செல்வது நல்லது. பளிச்சென்ற சூரிய வெளிச்சம் வயதானவர்களின் கண் களைப் பாதிக்கும். உபதேசித்திருந்தார். அதனால் அவள் சாயங்கால வேளைகளில்தான் வெளியே கிளம்புவது வழக்கம். ஆனால் இப்போது அவள் அவசியம் வெளியே செல்ல வேண்டியிருந்தது. தோளில் பையை மாட்டிக் கொண்டு கதவைப் பூட்டிவிட்டு வெளியே வந்தாள்.

பளிச்சென்ற வெளிச்சம் கண்களைக் கூசியது. பையிலிருந்த கருப்புக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டாள்.



மெல்லப் படியிறங்கித் தெருவுக்குள் நுழைந்த போது இரண்டாவது தளத்திலிருந்த இரண்டு இளசுகள்—கல்லூரி மாணவிகள் வெளியே கிளம்பிக் கொண்டிருந்த னர். அவர்கள் கிசுகிசுத்தது அவளுக்குத் துல்லியமாகக் கேட்டது.

''அங்கே பார், நம்ம ஃப்ளாட்டுக்கு மேலே குடி யிருக்கிற சாரதா அம்மா கிழவிக்கு வயசு ஆனாலும் ஃபாஷனில் குறைச்சல் இல்லை. கூலிங்கிளாஸ் போட்டுண்டு ஜம்முனு கிளம்பிட்டா.'' திரும்பிப் பாராது சாரதா நடந்தாள்.

''தினம் இந்தக் கிழவி எங்கேயாவது சவாரி விட்டுண்டு இருக்காளே. அப்படித் தலை போகிற காரியம் என்னவாக இருக்கும்?''

''பிள்ளை குட்டியின்னு பிடுங்கல் ஏதும் இல்லாத ஒண்டிக்கட்டை. டிராமா சினிமான்னு கிளம்பிடறாப் போல இருக்கு.'' சாரதா தன்னுள் சிரித்துக் கொண்டாள். 'இது தான் உலகம். உலகிற்குப் பயந்து கொண்டு நீலா பெரியதொரு தவற்றைச் செய்து விட்டாள்.'

பெற்றவள் குழந்தையை எங்கேயாவது கொஞ்ச காலம் பாதுகாப்பாக வளர்க்கக் கொடுத்து விட்டு—பின்னர் கல்யாணமானதும் திரும்பப் பெற்றுக் கொண்டு தன் குழந்தை என்று பகிரங்கமாக வளர்த்திருக்கலாம். சமுதாயத்திலும் சட்டத்திலும் அந்தஸ்தைத் தந்திருக் கலாம். கணவனிடம் கூடச் சொல்லாது மறைத்து விட்டிருந்தாள். சே! இப்போது தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாகி விட்டதே!

பஸ் நிலையத்திற்கு வந்து குடையை மடக்கிக் கொண்டு கால்வலிக்க வெகுநேரம் நின்றாள்.

நீலா அவளுக்குக் கார் கொடுத்து உதவ முன் வந்தாள். ஆனால் சாரதா அதை ஏற்கவில்லை.

தான் எடுத்துக் கொண்ட காரியத்தைத் தானே செய்து முடிக்க வேண்டும் என்றதொரு பிடிவாதம் அவளுக்கு எப்பொழுதும் உண்டு. இம்மாதிரியான பணிகளில், பல இடங்களுக்குப் போய் வர அவள் தன் சொந்தக் காசைச் செலவழிக்கச் சிறிதும் அஞ்சியதில்லை. பஸ்ஸை விட்டு இறங்கி அவள் குடையை விரித்துக் கொண்டு மெல்ல நடந்தாள்.

நீலா சொன்னது போல மகராஜன் தெரு ஒரு குறுகலான சந்தாக இருந்தது. அவள் சொன்னது போல அழுக்கான தெருவாகவும் இருந்தது. புடவை ஓரம் அழுக்காகி விடாதிருக்க அவள் தூக்கிப்பிடித்துக் கொண்டு நடந்தபடி பத்தாம் எண் வீட்டு வாசலை அடைந்தாள்.

கதவு திறந்தபடி கிடந்தது. நடையைத் தாண்டி மெல்லத் தாழ்வாரத்தில் வந்து நின்றாள்.

''ரத்னா அம்மா இருக்காங்களா?''... உரத்துக் குரல் கொடுத்தாள்.

''யாரது?'' என்று இனிமையாகக் கேட்ட வண்ணம் உள்ளேயிருந்து கூடத்தின் வெளிச்சத்தில் வந்து நின்ற இளம் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தாள் சாரதா... நெஞ்சிலே ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

நீலா சொன்னதில் எள் அளவும் பிசகில்லை.

தாழம்பூ நிறம், கூர் மூக்கு—பளபளத்த கண்கள்—சுருண்ட முடி...வேலை செய்து அலங்கி விட்டிருந்த வாயில் சேலைக்குள் அடங்கிவிட்ட கொடியாக நின்றாள் அவள்.

''உன் பெயர் மாயா தானே?'' கேட்டபடி அருகில் நகர்ந்தாள் சாரதா...

''என் கணவரது சாயலை உரிச்சுக் கொண்டு வந்திருக்கா'' என்று புலம்பினாள் நீலா...ஆனால் சாரதாவின் கண்களில் அந்தப் பெண் நீலாவின் சாயலை அதிகமாகக் கொண்டு நிற்பது நன்றாகவே தெரிந்தது...



எந்தவிதமான அத்தாட்சிகளும் தேவையில்லை... பார்த்த அளவிலேயே சாரதா உறுதியாகச் சொல்லிவிட முடியும். இவள் நீலாவின் மகள் என்று சத்தியம் கூடச் செய்ய முடியும்...அப்படி ஒரு பிரமிப்பை அவள் உண்டு பண்ணினாள்.

''யாரது வந்திருக்கிறது?'' உள்ளேயிருந்து கரகரப்பாக ஒரு பெண்ணின் குரல் கேட்டது. தொடர்ந்து இருமும் சப்தம்.

''அம்மா...யாரோ உன்னைத் தேடிக்கிட்டு வந்திருக்காங்க'' என்றாள் மாயா.

''யாருன்னு கேளும்மா'' என்றபடி மெல்ல உள்ளேயிருந்து வந்து எட்டிப் பார்த்தாள் ரத்னா.

நீலா விவரித்தபடியே...வறுமையில் நலிந்து முதுமையில் தளர்ந்து நோயில் குலைந்து காணப்பட்டாள் அவள்.

''வாங்கோ உட்காருங்கோ...உங்களுக்கு என்ன வேணும்?'' என்று கேட்டபடி கூட்டத்தில் கிடந்த நாற்காலியைக் காட்டினாள்.

மெல்ல அதைத் தொட்டுப் பார்த்துவிட்டு... உட்கார்ந்து கொண்டாள் சாரதா...

''உங்களை நான் வந்து தொந்திரவு செய்கிறதா நினைக்கக் கூடாது. சாப்பாட்டு நேரத்திலே வந்துட்டேனோ என்னவோ?'' இழுத்தாள் சாரதா.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஒன்பது மணிக்கே நாங்க சாப்பிடற பழக்கம். நீங்க வந்த காரியத்தைச் சொன்னா?'' கேட்டாள் ரத்னா...

பம்பாய் வாசத்தில் பல காலம் தங்கி விட்டவள் சாரதா. ஹிந்தி, மராத்தி இரு மொழிகளிலும் அவளுக்கு எழுத, பேச, படிக்க நன்றாகவே தெரியும். அறிந்து கொள்ளும் ஆவலில் அவள் தெலுங்கு, கன்னடம், மலை

யாளம் என எல்லாவற்றையும் கற்றுக் கொண்டிருந்தாள். சுற்றுலாப் பயணங்களில் அவள் எந்த மாநிலத்திலும் மொழிப் பிரச்சனையில் சங்கடப்பட்டதில்லை.

''மாயாவுக்கு ஹிந்தி கற்றுக் கொடுக்க நல்லாத் தெரியும்னு கேள்விப்பட்டிருக்கேன். எனக்கு ஹிந்தி கத்துக்க ஆசையா இருக்கு...'' கூறிவிட்டு ரத்னாவை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

மௌனமாகத் தன்னை அவள் கவனிப்பதை அறிந் தாள் சாரதா.

''போன வருஷம் டெல்லிக்குப் போயிருந்தேன். ஹிந்தி தெரியாமல் நான் கூட ஒருத்தன் வாலைப் பிடிச்சுண்டு வெளியே போக வேண்டியிருந்தது. ரொம்பக் கஷ்டப் பட்டுட்டேன்...வடக்கே போய் வரணும்னா ஹிந்தி தெரிஞ்சிருப்பது நல்லது இல்லையா?...எதுவும் கத்துக் கறத்துக்கு வயசு ஒரு தடை இல்லையேன்னு உங்க பெண் ணைத் தேடிக் கொண்டு வந்தேன்.''

மீண்டும் மௌனமாகத் தன்னை ரத்னா வெறிப்பதை உணர்ந்தாள் சாரதா. ''மங்களாவின் மூலம்தான் எனக்கு உங்க முகவரி தெரிஞ்சது. மங்களாவின் பேரக் குழந்தை களுக்கு மாயா ட்யூஷன் எடுக்கிறாள் இல்லையா...?''

மாயாவின் முகம் பிரகாசமடைந்தது ''ஆமாம்...உங்க வீடு எங்கேயிருக்குன்னு சொன்னா...'' என்றாள் ஆவலுடன்.

''இந்த விசிட்டிங் கார்டில் என் பேர் முகவரி இருக்கு... என்னைப்பற்றித் தெரிஞ்சுக்கணும்னா மங்களா அம்மா கிட்டே கேட்டுக்கலாம். அந்தம்மா சிபாரிசு செய்தா எனக்கு டியூஷன் கொடுக்க வரலாம். தீர விசாரிச்சுக் கொண்டு தினமும் எந்த நேரத்திலே டியூஷன் தர முடியும்னு சொன்னாப்போதும். கேட்கிற தொகையைக் கொடுக்கிறேன்'' என்றாள்.



''நாளைக்கு நான் மங்களா அம்மா வீட்டுக்கு டியூஷன் எடுக்கப்போவேன். அவங்களைக் கேட்டுட்டுப் பிறகு உங்களை வந்து சந்திக்கிறேன்'' என்றாள் மாயா. ரத்னா மகளின் முகத்தைப் பார்த்தபடியே தலையை அசைத்தாள்.

''உன் சிரமத்துக்குத் தக்க பணத்தைக் கொடுக்க நான் தயங்கமாட்டேன். கூடியவரை காலை வேளையா இருந்தா எனக்கு ரொம்ப சௌகர்யமா இருக்கும். சரி அப்ப நான் வரட்டுமா?'' என்று கேட்டபடி சுருக்கமாகத் தன் காரியத்தை முடித்துக் கொண்டு கிளம்பினாள். ஃப்ளாட் டுக்குள் நுழைந்ததும் போனில் நீலாவைக் கூப்பிட்டாள்.

''மகராஜன் தெருவிலிருந்து இப்போதான் திரும்பி னேன். மாயா உங்கள் பெண்தான் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. இந்தச் சங்கதியில் நீங்க கொஞ்சம் பொறுமையாக இருக்கணும்'' என்றாள்.

''நான் இருபது வருஷமா பொறுமையா இருக்கி றேனே, இன்னும் கொஞ்ச காலம் இருக்க முடியாதா? ஆனால் மாயாவை நேரே பார்த்துவிட்ட பிறகுதான் எனக்கு ரொம்பத் தவிப்பா இருக்கு...''

''நான் சொன்னபடியே மங்களம்மாள் கிட்டே சொல்லி எனக்கு டியூஷன் கொடுக்க சிபாரிசு செய்து விட்டீங்க இல்லையா...?''

''சொல்லி விட்டேன். மங்களம் சிரிச்சுட்டா. இத்தனை வயசுக்கு மேலே உன் சிநேகிதிக்குப் படிக்கணும்னு ஆசை வந்திருக்கேன்னு அதிசயப்பட்டா.''

''அவங்க அதிசயப்பட்டுக் கொண்டிருக்கட்டும். எனக்கு ஆக வேண்டியது காரியம். சரி, பின்னால் ஒருநாள் உங்களைக் கூப்பிடும் போது இங்கே வாங்கோ'' என்று கூறிவிட்டு போனை வைத்தாள். கை கால்களைக் கழுவிக் கொண்டு வெளியே போய்வந்த புடவை ரவிக்கையைக் களைந்து விட்டு வேறு உடுத்திக் கொண்டு சமையலறைக் குள் புகுந்தாள், வெளியே கிளம்பு முன் சமைத்து வைத்து

விட்டுப் போன உணவை ஹாட்கேஸிலிருந்து எடுத்துச் சாப்பாட்டறை மேஜைமேல் வைத்து விட்டு, தன் சாப்பாட்டுத் தட்டையும் தண்ணீர் டம்ளரையும் வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவளால் சாப்பிடவே முடியவில்லை. சாம்பார் சாதத்தை விழுங்க முடியாது போலத் தொண்டையிலே ஒரு இறுக்கம். நீலாவின் அழைப்பிற்கிணங்கி அவன் வசித்த அந்த பிளாட்டுக்குப் போனாள் சாரதா. கோதண்டராமன் தம்பதியர் வசித்தபோது அங்கே பல தடவை போயிருக்கிறாள். ஆனால் இப்போது அந்த ஃப்ளாட் புதுமுகத்துடன் ரொம்பப் பொலிவுடன் இருந்தது. சாப்பாட்டறையை ஒட்டியிருந்த டிவைடர் தட்டுகளில் வைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த அழகுப் பொருட்கள், தேக்குமரத்தில் மின்னிய மேஜை, நாற்காலிகள், சுவரில் தொங்கிய ஓவியங்கள்... ஏ. சியின் குளிரில் மூழ்கியிருந்த படுக்கையறையில் கிடந்த பெரிய கட்டில்—அதன் மீது பரத்தப் பட்டிருந்த உயர்ந்த விரிப்பு...தரைமீது கிடந்த பாதம் பொதிந்த ரத்னக் கம்பளம் என்று ஒவ்வொன்றும் நீலாவின் செல்வத்துக்குத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தது.

மகராஜன் தெருவுக்குப் போய்விட்டு வந்த போதுதான் அந்த ஏற்றத்தாழ்வை அவள் மனம் தாங்க முடியாது தவித்தது. என்ன அநியாயம்? தேவையில்லாத ஒரு சங்கடம்... என்று எண்ணியபடி சாப்பாட்டுத் தட்டை வெறித்துக் கொண்டு வெகுநேரம் உட்கார்ந்து விட்டாள். அன்று பொழுது முழுவதும் விவரிக்க இயலாத வேதனையில் மனம் குமுறியது. இந்தப் பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்க இயலுமா என்ற ஒரு சந்தேகம் உணர்வுகளைக் குழப்பியது. இரவு படுக்கை மீது சாய்ந்த பொழுது...அவளது கற்பனையில் பலமுறை மாயா வந்துபோய்க் கொண்டிருந்தாள். அந்த சிறு ஓட்டுக் குடித்தனப் பகுதியில்...கொசுக்கடியில் புழுங்கிக்கொண்டிருந்த இளம்பெண்ணை எண்ணிப் பெருமூச்செறிந்தாள். தாய் செய்த தவற்றுக்கு மாயா



தண்டனை அனுபவிப்பது போன்றதொரு பிரமையில் அவள் வேதனைப்பட்டாள்.

இரண்டு தினங்களுக்குப் பின், அன்று காலை அழைப்பு மணியின் ஓசை கேட்டுச் சாரதா வேகமாக வந்து கதவில் பதித்திருந்த கண்ணாடியில் பார்த்தாள்.

மாயா வெளியே நின்று கொண்டிருந்தாள்.

மகிழ்ச்சியுடன் கதவைத் திறந்தவள், ''வாம்மா... உட்கார்'' என்று உபசரித்தாள்.

''மன்னிக்கணும், அம்மா. மறுநாளே வரமுடியலை' என்றபடி வரவேற்பறையில் தயக்கமாக நின்றாள்.

''உட்கார். இப்போ நீதானே எனக்கு குரு''...சிரித்தபடி எதிரே தெரிந்ததொரு சோபாவைக் காட்டிவிட்டு உட்கார்ந்தாள் சாரதா.

மிகவும் கூச்சத்துடன் மாயா எதிரே அமர்ந்தாள். தோளினின்று நழுவிய தன் வாயில் புடவைத் தலைப்பை அவள் சரி செய்து கொண்டபோது சாரதா பார்த்து விட்டாள். கழுத்தோரத்திலே ஒரு பெரிய கிழிசல்—தைக்கப்பட்டிருந்தது. அதை அவள் மறைக்க முயன்று கொண்டிருந்தாள்.

'இந்தக் குழந்தைக்கு இது வேண்டாத ஒரு வறுமை' என்று எண்ணிய சாரதாவுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அந்தக் கிழிசலைப் பாராதவள் போல முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''காலையில் இந்த வேளையில் உன்னால் வர சாத்யப்படுமா, மாயா?'' என்று வினவினாள்.

''இந்த நேரம் எனக்கும் சௌகர்யமானது—வாரத்துக்கு மூன்று தரம் வந்தால் போதும்னு நினைக்கிறேன். பாடப் புத்தகம் நோட்டு முதலியன நீங்க வாங்க வேண்டியிருக்கும்.''

''அதுக்குத் தேவையான பணத்தை நான் உன்கிட்டேயே கொடுத்திடறேன். நீ எனக்காக வாங்கிக்கொண்டு வந்து விடு. மாசம் நீ என்ன எதிர்பார்க்கிறே? நான் உனக்கு இருநூற்றைம்பது ரூபாய் தரலாம்னு திட்டம் போட்டிருக்கேன்.''

''ஐயோ! அது ரொம்ப அதிகம்...நான் பேராசைப் படக்கூடாது. நூற்றம்பது கொடுத்தாலே அதிகம்.''

''இப்போ இருக்கிற விலைவாசிகளுக்கு நான் கொடுக்கிறது ரொம்ப அதிகமில்லை. நீ கேட்கலை. நான் கொடுக்கிறேன். உன் உழைப்புக்குக் கொடுக்கிறேன்னு வச்சுக்கோ...சரி...நீ இந்த வாரத்திலே நாளையிலிருந்து எனக்குப் பாடம் ஆரம்பிக்கலாம். சரிதானே?'' என்றபடி எழுந்துசென்று பீரோவைத் திறந்து ஐம்பது ரூபாய் நோட்டொன்றை எடுத்து வந்தாள். ''புத்தகம், நோட்டு இத்யாதிகளை வாங்கிக்கொண்டு வந்துடு. இது போதுமில்லையா?'' என்றபடி அவள் சொல்லிக் கொடுத்த போது துள்ளிக்கொண்டு எழுந்தாள் மாயா.

.'ரொம்ப அதிகம். இருபது ரூபாய் போதும். மீதிப் பணத்தை நாளைக்குக் கொண்டுவந்து தந்துவிடுகிறேன். அப்போ நான் வரட்டுமா?'' என்று கைகூப்பி விட்டுத் திரும்பினாள்.

''வெய்யில்ல வந்திருக்கே, ஏதாவது சாப்பிட்டுட்டுப் போம்மா'' குழைவாகச் சொன்னாள்.

'மங்களம் அம்மா வீட்டில் மட்டும்தான் சாப்பிடற பழக்கம், மற்ற ட்யூஷன் இடத்திலே எதுவும் சாப்பிடறதில்லை.' மெலிதாக முறுவலித்தாள் மாயா.

''இந்தச் சாரதா அம்மா வீட்டில் சாப்பிட்டால் தவறு இல்லை. உனக்குச் சில கொள்கைகள் இருக்கிறது போல எனக்கும் சில இருக்கு. எங்க வீட்டுக்குள்ளே வர யாரையும் நான் ஏதாவது சாப்பிடாம அனுப்பறதில்லை,



வா. வந்து இப்படிச் சாப்பாட்டறையிலே உட்கார்'' என்று உபசரித்ததை மறுக்க முடியாது மாயா ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். சமையலறை அலமாரியிலிருந்து மைசூர்ப்பாகும் ரெப் முறுக்கும் ஒரு தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு வந்தாள் சாரதா. பிரிட்ஜிலிருந்து குளிர்பானத்தைக் கண்ணாடி டம்ளரில் நிறைத்து எல்லாவற்றையும் மேஜைமேல் அவள் அருகில் வைத்தாள்.

''நீங்க எதுவும் வச்சுக்கலையே, நான் மட்டுமா சாப்பிடறது?'' தயக்கத்துடன் கேட்டாள் மாயா

''நான் காலையில் டிபன் சாப்பிடற பழக்கம். பகல் ஒரு மணிக்குத்தான் சாப்பாடு. நீங்க காலை ஒன்பது மணிக்கே சாப்பிட்டு விடுவீங்கன்னு உங்கம்மா சொன்னாங்களே. வழியிலே கடையிலே டிபன் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுட்டு டியூஷன் வீட்டுக்குப் போறதுக்குப் பதில் இங்கே சாப்பிட்டுட்டுப் போகலாமே?''

''காலையில் சாப்பிட்டபிறகு...சாயங்காலம் மங்களம்மாள் வீட்டுக்குப் போற வரை எதுவும் சாப்பிடறதில்லை. மங்களம்மா வீட்டு சமையற்கார அம்மா எனக்குத் தெரிஞ்சவங்க. யஜமானியும் அவங்களும் ரொம்ப வற்புறுத்தினதாலே டியூஷனுக்குப் போற நாளில் அங்கே காப்பி டிபன் ஏதாவது கொடுத்ததைச் சாப்பிடுவேன். விடுமுறை நாளில் வீட்டில் காலை சாப்பாட்டுக்குப் பிறகு டிபன் சாப்பிடறதில்லை. ராத்திரிதான் வேளையோடு மறுபடி சாப்பாடு...''

''சின்னப் பொண்ணு நீ—வேளைக்கு நன்னா சாப்பிடணுமே...இடையிலே டிபன் காப்பி சாப்பிடாதிருப்பது தப்பு...''

''எனக்குத் தெரியும். ஆனால் சாப்பிடக் கட்டுப்படியாகிறதில்லை. அப்பா போன பிறகு அம்மாவுக்கு உடம்புக்கு வந்ததும் நாங்க ரொம்பச் சிரமப்பட்டுட்டோம். சிக்கனமா இருக்கணும்னு பகல் டிபனை நிறுத்திக் கொண்

டுட்டோம்.'' சொல்லியபடி மைசூர் பாகைப்பிட்டு வாயில் போட்டுக் கொண்டாள்.

நெஞ்சுவரை வந்த துயரத்தைச் சாரதா விழுங்கிக் கொண்டாள்.

'நீலா! என்ன காரியம் செய்து விட்டே? உன் கௌரவத்திற்காக உன் மகளுக்கு எத்தனை பெரிய தண்டனை!' தாய்மை உணர்வில் கரைந்து போனது அவள் உள்ளம். அனுதாபம் கண்ணை ஈரமாக்கியது.

''இன்னொரு மைசூர்பாகையும் சாப்பிடு. கூச்சப் படாம சாப்பிடு. இதை உன் வீடு போல நினைச்சுக் கோம்மா.''

''நன்றி அம்மா...ஒரு உண்மையை இப்போ சொல் லட்டுமா?'' மெல்லச் சிரித்தாள் மாயா.

''சொல்லு. ஓரளவு என்னால் அதை ஊகிக்கவும் முடியும்.''

''அப்படியா? அப்ப நீங்கள் சொல்லுங்க பார்க் கலாம்.'' மிகவும் பழகி விட்டது போன்ற நெருக்கத்தில் சிரித்தாள் மாயா.

பளிச்சென்று சிரிப்பில் ஒளியிட்ட அந்த அழகு முகத்தை ஆர்வத்துடன் கையில் ஏந்திக் கன்னங் கனிய முத்தமிட வேண்டும் போன்றதொரு பரிவில் மனம் நெகிழ்ந்து சொன்னாள் சாரதா.

''மங்களம்மா வீட்டிலே என்னைப் பற்றி நன்றாக விசாரித்துக் கொண்ட பிறகுதான் ட்யூஷனை எடுத்துக் கொள்ளணும்னு உங்க அம்மா சொல்லியிருப்பாங்க.''

''சரியா சொல்லிட்டீங்களே! உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?''

''இதிலே அதிசயம் ஒண்ணுமில்லையே. இள வயசுப் பெண் நீ. கொஞ்சம் அழகா வேறே இருக்கே உன்



நிலைமையைச் சாதகமா வச்சுக்கொண்டு யாராவது உன்னை மோசம் செய்யலாம் இல்லையா? டியூஷனுக்குன்னு அழைச் சுட்டு...வேறே தவறாக உன்னைப் பயன்படுத்தலாம் இல்லையா? வெளிக்கு ரொம்பக் கௌரவமாகத் தெரிஞ்சு கொண்டு உள்ளே விபரீத காரியம் செய்யும் கேவலமான வங்களும் இருக்காங்களே!''

''அம்மாவுக்கு என்னைப் பத்தி ரொம்பக் கவலை. தவறானவங்க கையிலே சிக்கிவிடுவேனோன்னு ரொம்பப் பயம்.''

''இருக்காதா பின்னே? பெத்தவ பெண் குழந்தைன்னா எப்பவும் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் இருப்பா.''

''அம்மாவுக்கு நான் ரொம்ப நாள் கழிச்சுப் பிறந்த குழந்தை. என் மேலே அவங்க உசிரையே வச்சுண்டு இருக் காங்க.''

சுருக்கென்று ஊசியால் நெஞ்சிலே குத்தியது போன்ற ஒரு வேதனையில் முகத்தைச் சுளுக்கினாள் சாரதா.

''அப்பாவுக்கும் என் மேல் ரொம்பப் பிரியம். எனக்குத் தெரிஞ்சு என் அப்பா என்னை ஒரு தடவை கூட அடிச்ச தில்லை.''

''நீ நல்ல குழந்தை. உன்னை ஏன் அடிக்கணும்—செல்லமா வளர்ந்த நல்ல புத்திசாலிப் பொண்ணு.''

முறுக்கை ஒடித்து வாயில் போட்டு மென்று சுவைத்த படி பேசினாள் மாயா. ''உங்க கிட்ட மனம் விட்டுப் பேசணும் போல ஒரு உணர்வு ஏற்பட்டது. மற்ற டியூஷன் வீடுகளில் நான் இப்படிச் சரி சமமா உட்கார்ந்து கொண்டு பேசற பழக்கம் இல்லை. இந்த டியூஷன் கிடைச்சது என் பாக்கியம்னு நான் நினைக்கிறேன். இந்தக் கோடை விடு முறைக்குப் பிறகு நான் வேலை பார்க்கும் நர்ஸரி பள்ளிக் கூடத்திற்குப் போக மாட்டேன். அங்கே ரொம்ப வேலை—

சம்பளம் குறைவு. இந்த டியூஷன்கள் இல்லாதிருந்தா அம்மாவும் நானும் பட்டினி கிடக்க வேண்டியிருக்கும்—நான் உங்களுக்கு ரொம்ப நன்றி பாராட்டறேன். உங்களுக்கு ஹிந்தி பேசப் படிக்க நன்றாக வந்ததும் நீங்க வேற யார் வீட்டிலாவது எனக்கு டியூஷன் அமர்த்திக் கொடுத்தால் உபகாரமா இருக்கும்.''

'உனக்கு நல்ல' வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க நான் ஆசைப்படறேன் குழந்தை!' தன்னுள் சொல்லிக் கொண்டாள் சாரதா...

''அதைப்பத்தி இப்போ என்ன? நான் கத்துக்க ரொம்ப நாளாகும். உன்னைப்போல எனக்குச்சின்ன வயசா? இந்த வயசிலே படிக்கிறது கொஞ்சம் கஷ்டம்...''சிரித்தாள்.

''அப்போ நாளையிலிருந்து டியூஷன் ஆரம்பிக்கலாம். ரொம்ப நேரம் உட்கார்ந்துட்டேன். ரமாதேவி வீட்டு டியூஷனுக்குப் போகணும்'' என்று சொல்லியபடி எழுந்து கையை அவசரமாகக் கழுவிக் கொண்டாள். குளிர் பானத்தை ஒரே வாயாகக் குடித்து விட்டு வாயைத் துடைத்துக் கொண்டாள்.

''ரொம்ப தாங்க்ஸ். வரட்டுமா'' என்றபடி நகர்ந்தாள்.

''இரு. உன் அம்மாவுக்குக் கொஞ்சம் பலகாரம் கட்டித் தரேன். கொண்டு கொடு'' என்றபடி சமையலறைப் பக்கம் திரும்பினாள் சாரதா.

''அம்மா வேண்டாம். அவங்களுக்குப் பிடிக்காது. டியூஷனுக்குப் போன இடத்திலே கை நீட்டி இதுகளை வாங்கிக் கொண்டு வரது என்ன பழக்கம் என்று கோபித்துக் கொள்வாங்க. நான் சாயங்காலம் வீட்டுக்குப் போற போது வழியிலே கடையிலே அம்மாவுக்கு இரண்டு பூவம்பழம் வாங்கிண்டு போயிடுவேன்.மாசக் கடைசியிலே கையில் காசு தட்டுப்பாடா இருந்தா பஸ்ஸுக்கு அம்மா



கொடுக்கிற காசிலே பழம் வாங்கிக் கொண்டு நடந்தே வீட்டுக்குப் போயிடுவேன்.''

''உங்கம்மா மேலே உனக்கு அத்தனை பிரியம்னு சொல்ல வரே...''

''அவங்க எனக்காகச் செஞ்சிருக்கிற தியாகம் கொஞ்ச நஞ்சமில்லே. என்னைப் படிக்க வைக்க அவங்க எத்தனை சிரமப் பட்டாங்கன்னு வார்த்தையால் சொல்ல முடியாது. அவங்களை நான் ரொம்பவே நேசிக்கிறேன்''

''கொஞ்ச நாள் கூட அவங்களைப் பிரிஞ்சிருக்க உன்னால முடியாது போலிருக்கே?'' வேடிக்கையாகக் கேட்டாள் சாரதா.

''உண்மைதான். அவங்களைப் பிரிஞ்சு என்னால இருக்கவே முடியாது. இப்போ நேர்யாளியாப் போயிட்ட பிறகு எனக்கு அம்மாவுடைய நினைப்புதான் எப்பவும். சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாதிருந்தா நான் அம்மாவுக்குப் பணிவிடை செய்து கொண்டு வீட்டிலேயே இருப்பேன். நேத்திக்குப் பாவம் கால்வலியிலே ரொம்பத் துடிச்சுப் போயிட்டாங்க. நான் டியூஷன் முடிஞ்சு வீட்டுக்குப் போனதும் அம்மாவை உடனடியா டாக்டர்கிட்ட அழைச்சுக்கொண்டு போய்க் காட்டினேன், மருந்தைச் சாப்பிட்ட பிறகு தான் அம்மா நிம்மதியாத் தூங்கினாங்க.''

''பாவம் சம்பாதிச்சுப் போடறதோட அம்மாவுக்குப் பணிவிடைகளும் செய்யறே! நீ நல்ல பெண்''.

''அவங்க ஒரு நல்ல தாய்னு சொல்லணும். எனக்கு ஒரு ஜலதோஷம் வந்துட்டாக்கூடத் தாங்க மாட்டாங்க. நெற்றிக்குப் பத்துப் போட்டு—மூக்கின் மேலே விக்ஸ் தடவி, சீரக ரசம் பத்தியமா வச்சு...ரொம்பவே பாடு பட்டுடுவாங்க.

ஒரு தடவை எனக்கு நாலு நாள் சேர்ந்தாப்பலே கடும் காய்ச்சல் வந்துட்டது. ஜுர வேகத்திலே நான் பேத்தினேனாம். அம்மா அந்த நாலு நாளும் ராத்திரி வேளையிலே ஒரு பொட்டுக் கூடத் தூங்கலை. என்பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாங்க. தன் கைவளைகளை வித்து டாக்டருக்கும் மருந்துக்கும் செலவழிச்சாங்க. எனக்கு ஏதாவதுன்னா அம்மா தன் உயிரையே கொடுத்துடுவாங்க...''

''இத்தனை பிரியம் ஒருத்தர் மேலே ஒருத்தர் வச்சிருக்கீங்க. கல்யாணம் ஆனா நீ உன் புருஷன் வீட்டுக்குப் போகணுமே அப்போ? பிரிஞ்சு தானே ஆகணும்?''

முகம் சிவந்து போனாள் மாயா—''அதைப்பற்றி நான் நினைத்துப் பார்த்ததே இல்லை. பார்க்கவும் அவசியமில்லே. கல்யாணம் எங்களைப் போன்றவங்களுக்குப் கட்டுப்படியாகாத ஒரு லக்ஷரியாச்சே!'' முறுவலித்துக் கொண்டு விடைபெற்று வெளியேறினாள்.

சாரதா வெகுநேரம் அந்த விசித்திரப் பெண்ணைப் பற்றி நினைத்தபடி உட்கார்ந்திருந்தாள்.

மறுநாளிலிருந்து அவளுக்கு டியூஷன் ஆரம்பமாகியது. ஹிந்தி எழுத்துக்களை உச்சரிக்கவும் எழுதவும் மாயா பொறுமையுடன் கற்றுக் கொடுக்க, சாரதா அவைகளைக் கற்கச் சிரமப்படுவது போலத் தடுமாற, நேரம் மிகவும் சுவாரசியமாகக் கழிந்தது.

அன்று புறப்படுமுன் மாயாவுக்குச் சாப்பிட டிபன் கொடுத்து உபசரித்தாள் சாரதா.

நாட்கள் வேகமாக நகர்ந்தன. ஒரு மாத காலம் ஓடிச் சென்று விட்டது. இந்தக் குறுகிய காலத்திற்குள் அவர்களிருவரிடையே மிகவும் நெருக்கமானதொரு நேசம் வளர்ந்து விட்டிருந்தது.

சாரதாவின் வீட்டு டியூஷனை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு குறித்த நேரத்தில் தினமும் வந்து கொண்டிருந்தாள் மாயா.



அவளை வரவேற்று அவளுடன் பேசி மகிழ்வதிலே மிக்க மகிழ்ச்சியடைந்தாள் சாரதா.

டியூஷன் முடிந்ததும் சாரதா டிபன் கொடுக்க எழுந்தால் கூடவே சகஜமாக மாயா எழுந்து சமையலறைக்கு வந்து அவளுக்கு உதவினாள்.

''அட! பெட்டி போட்டு வச்சிருக்கிற துணிகளை எடுத்து அலமாரியில் வைக்க மறந்துட்டீங்களே! நான் அடுக்கி வைக்கிறேன்'' என வலியத் தானே உதவினாள் மாயா.

''இங்கேயே இப்படித் தரையிலே உட்கார்ந்துண்டு சாப்பிடறேன். உங்களுக்கு வீண் சிரமம் எதற்கு?'' என்று தானே தட்டை எடுத்து வைத்துக்கொண்டு — சாரதா பரிமாறிய டிபனைச் சாப்பிட்டு, பின்னர் தட்டைக் கழுவித் துடைத்து வைத்துவிட்டுப் போனாள்.

''மங்களம்மாள் தோட்டத்திலேயிருந்து பறிச்சிக் கொண்டு வந்தேன். அவங்க உத்தரவு கொடுத்தாங்க. இல்லாட்டாப் பறிக்க மாட்டேன். உங்கள் வீட்டுப் பூச்சாடியில் வச்சா அலங்காரமா இருக்கும்'' என்றபடி ஒரு கொத்துப் பூவைக் கொண்டு வந்தாள் அவ்வப்பொழுது.

''என்னத்துக்குக் காசை வீணா அடிச்சுத் திராட்சைப் பழம் வாங்கிக் கொண்டு வந்தே?'' ஒருநாள் சாரதா அன்போடு அதட்டினாள்.

''முதல் மாசம் நீங்க கொடுத்த சம்பளத்தைக் கைநிறைய வாங்கிக்கொண்டு போன மகிழ்ச்சி எனக்குக் கட்டுக் கொள்ளலை. என் அம்மாவுக்குத் திராட்சைப் பழம் வாங்கினேன். அப்போ...''

''இந்தம்மாவுக்கும் வாங்கிண்டு வந்தியா?''

''ஆமாம். உங்களையும் என் தாயைப் போலத்தான் நினைக்கிறேன்.''

''தாயைப் போலத்தானே நினைக்கிறே? தாயாக நினைக்கலை ... லையா?''

''உண்மையை ஒத்துக்கறேன். என் தாயாக நான் வேறே யாரையும் நினைக்க முடியாது. அவங்களுக்கு ஈடாக வேறு ஒருவரை என் மனதிலே ஏத்துக்க முடியாது.''

''உனக்கு அம்மா காம்ளெக்ஸ் ரொம்ப அதிகம் இருக்கு.''

''என்ன வேண்டுமானாலும் வெச்சுக்கோங்க. அம்மா வாக வேறே யாரையும் என்னால் நினைக்க முடியாது.''

''நீ ரொம்ப ஆச்சர்யமானவள்.'' சாரதா வியப்புடன் கூறினாள்.

அவள் மனதிலே ஆழமானதொரு சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. மெள்ள இந்தப் பெண்ணோடு பழகி, அன்பைக் கவர்ந்து பிறகு அந்தத் திடுக்கிடும் உண்மையைச் சொல்லத் திட்டமிட்டது சரியா?

இவள் நம்பவே மாட்டாள் போலிருக்கே. கவலைப் படத் தொடங்கினாள். அடிக்கடி தொலைபேசியில் நீலா தன் மகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள். நேரில் பார்க்கவேண்டும் என்று துடித்தாள். ஆனால் சாரதாவின் பேச்சிற்குக் கட்டுப்பட்டு அடுத்த கட்டிடத்தில் வசித்த போதிலும் நேரில் வரவில்லை. ஒதுங்கிக் கொண்டிருந்தாள்.

''அம்மா! என்னை உங்க வீட்டுக்கு வர அனுமதியுங்கோ. என் மகளை நேரில் பார்க்கணும்னு துடியாத் துடிக்கிறேன்.'' ஒருநாள் போனில் புலம்பினாள்

''சரி என் ஏற்பாட்டுப்படி ஒரு காரியம் செய். நாளைக்கு நீ இங்கே வந்து என்னையும் உன் மகளையும் உன் பிறந்த நாளுக்குச் சாப்பிடக் கூப்பிடு.''



''ஐயோ என் பிறந்தநாள் போன மாதமே முடிந்து போயிற்றே!''

''சரி நாளைக்கு வெள்ளிக் கிழமையல்லவா? லக்ஷ்மி விரதம்னு சொல்லிட்டுக் கூப்பிடேன். ஏதோ ஒரு காரணம் சொல். நான் இப்போ ஹிந்தி டியூஷன் எடுத்துக்கலையா —அதைப் போல ஒரு கதையைக் கட்டேன்.''

''சரி நாளைக்கு சக்தி பூஜைக்குச் சாப்பிட வாங் கோன்னு அழைக்கிறேன்.''

திட்டப்படி மறுநாள் காலை நீலா வந்து அழைப்பு மணியை அழுத்தினாள்.

''அட! நீலா வராப்பல இருக்கு. உன் கிட்டே சொல்ல மறந்துட்டேன். அவ ஏதோ பூஜை பண்றாளாம். சாப் பிடக் கூப்பிட்டா. உன்னையும் அழைச்சிண்டு வரச் சொன்னா. நான் சொன்னேன். அந்தப் பெண் ரொம்பக் கூச்ச சுபாவமுடையவ. எதுக்கும் நீ நேரேயே வந்து கூப்பிடு என்றேன்'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறக்க விரைந்தாள்.

நீலா தன் மகளை நேருக்கு நேர் மறுபடியும் பார்த்த போது உணர்ச்சி வசத்தில் பதறிப் போனாள்.

''சாரதா அம்மா...நீங்களும் மாயாவும் சாப்பிட எங்க வீட்டுக்கு வரணும்...கூப்பிட வந்தேன்''—திணறினாள்.

''இவங்க எங்க பக்கத்துக் கட்டிடத்திலே குடியிருக்கிற நீலா...'' அறிமுகப்படுத்தினாள் சாரதா.

''தெரியும். இவங்களை நான் ஏற்கனவே மங்களம் மாள் வீட்டில் சந்திச்சிருக்கேன். என்னை எங்க வீடு வரை காரில் கொண்டு போய் விட்டாங்க.'' மெல்லச் சிரித்தாள் மகிழ்ச்சியுடன் மாயா.

''அப்படியா! நல்லதாச்சு. அவங்க வீட்டுக்கு நாம ரெண்டு பேரும் சாப்பிடப் போறோம்.''

முகம் மாறிப் போய் மௌனமாக நின்றாள் மாயா...

''உங்கம்மா எதுவும் சொல்ல மாட்டாங்க. உனக்கு நான் எப்படி நெருக்கமோ—அதை விட இவங்க உனக்கு நெருக்கமானவங்கன்னு நினைச்சுக்கோ. மறுக்காதேம்மா. இவங்க வீட்டுச் சாப்பாட்டை எதிர்பார்த்து நான் இன்னிக்குச் சமையல் கடையை மூடி வச்சுட்டேன்.'' உரத்துச் சிரித்தாள் சாரதா...

''ஆமாம் மாயா, உன்னையும் சாரதாவையும் நேரில் கூப்பிடவந்தேன். இன்னிக்கு சக்தி பூஜை செய்தேன். யாராவது ரெண்டு பேருக்குச் சாப்பாடு போடணும்னு ஆசை'' என்று திணறினாள்.

''சரி...வரேன்'' என்று ஒப்புதல் கொடுத்தாள் மாயா.

நீலாவின் ஃப்ளாட் பூஜையறையில் தெய்வங்களின் படங்களின் மீது ஏகப்பட்ட பூமாலைகள். புவனேஸ்வரி மாதா பெரியதொரு ரோஜா மாலையில் புன்னகைத்துக் கொண்டிருந்தாள். இடுப்பளவு உயரமானதொரு வெள்ளிக் குத்து விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. கற்பூரம் சந்தனம் ஊதுபத்தியின் கலவை மணம் ஃப்ளாட்டைத் திணற அடித்துக் கொண்டிருந்தது.

நுனி வாழை இலைகளைத் தயாராக மேஜைமேல் விரித்து ஸ்டீல் டம்ளரில் நீர் நிறைத்துத் தயாராக வைத்திருந்தாள்.

''நான் பரிமாறுகிறேன். உட்கார்ந்து சாப்பிடுங்கோ- அதான் பூஜையின் சம்பிரதாயம்'' என்று நீலா சொல்லி விட்டாள்

''ஆச்சர்யமா இருக்கே அம்மா... எனக்குப் பிடிச்ச உருளைக்கிழங்கு பட்டாணிக் கூட்டு, கோஸ் பொரியல்... புதினா தயிர்ப் பச்சடி பண்ணியிருக்கீங்களே? அட பால் பாயசமா? எனக்கு ரொம்பப் பிடிக்கும்.'' கண்களை இடுக்கிக்கொண்டு ப்ச்சிளங் குழந்தை போல மாயா ஆர்ப்பரிப்பதைக்கண்டு நீலா மனம் உருகிப் போனாள்.



''இதெல்லாம் என் கணவருக்குப் பிடிச்ச அயிட்டங்கள்.'' அடிக்குரலில் மெல்லச் சொன்னாள்.

சாப்பாடு முடிந்ததும் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு பழத்துடன் ஒரு பிரிண்டெட் சில்க் புடவையும் ரவிக்கையும் வைத்துக்கொண்டு வந்து மாயாவின் முன் நீட்டினாள்.

''ஐயோ! இதெல்லாம் எதுக்கு? சாப்பாடு போட்டீங்க, ரொம்பத் தாங்க்ஸ்.''

''உங்கம்மா இதை வாங்கிண்டு வந்தா கோவிச்சுப்பாங்கன்னு தெரியும். ஆனால் பூஜை நாள் அன்று ஒரு கன்னிப் பெண்ணுக்குப் புடவை ரவிக்கை கொடுக்கணும்னு நீலாவின் ஆசை. இது அம்பாள் பிரசாதம். எடுத்துக்கோ. நான் அப்படிச் சொன்னதாக உன் அம்மாகிட்டே சொல்லு. கோவிக்க மாட்டாங்க.'' தாஜா செய்தாள் சாரதா.

''நீலா அம்மா...ரொம்ப தாங்க்ஸ்'' என்று கூறி விட்டுத் தட்டிலிருந்தவைகளை எடுத்துக் கொண்டு சட்டென்று அவள் காலில் விழுந்து கும்பிட்டாள்.

மெல்லத் தன் பாதங்களை அந்தப் பிஞ்சு விரல்கள் தொட்ட போது உடல் சிலிர்த்துப் போய் விட்டாள் நீலா...

கட்டுக் கொள்ள முடியாது, சட்டென்று குனிந்து மாயாவை வாரித் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

''சகல சௌபாக்கியத்தோட நீ வாழணும்னு வாழ்த்தறேன்...'' தழுதழுத்தாள்.

சாரதாவின் கடுமையான பார்வையைக் கண்டு அவள் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு...மாயாவின் பட்டுக்கன்னங்களைத் தடவிக் கைகளைத் தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் மாயா விடைபெற்றுக் கொண்டு போய் விட்டாள்.

''நான் ரொம்பப் பயந்து விட்டேன். எங்கே நீங்க ஏதாவது உளறி விடுவீங்களோன்னு ரொம்பக் கலவரமாகி விட்டது.'' சாரதா அன்புடன் கடிந்து கொண்டாள்.

''என் கையாலேயே என் மகளுக்குச் சாப்பாடு போட்ட ஒரு ஆனந்தத்தை என்னால் அடக்கிக் கொள்ளவே முடியலை. சாரதா அம்மா ஒரு விந்தையைக் கவனிச்சீங்களா? மாயாவுக்கு அவ அப்பாவுக்குப் பிடிக்கும் உணவு வகைகள் ரொம்பப் பிடிச்சிருக்கு. அவர் கருப்பா, சிவப்பான்னு பார்த்தவ கூடக் கிடையாது. வாஷ்பேசின் கிட்டே கையலம்பப் போன போது துவாலையை எடுத்துக் கொடுத்தேன். அவ அப்பாவைப் போலவே சோப்பைக் கையில் தேய்த்துக் கொண்டு கையைக் கழுவின முறை, துவாலையில் துடைத்துக் கொண்ட விதம்...கையால் முகவாயைத் தாங்கிக் கொண்டு உட்காரும் பாணி எல்லாம் தத்ரூபம் அவளது அப்பா போலவே செய்கிறாளே, என்ன ஆச்சரியம்...!''

''இதில் ஆச்சரியம் ஒன்றுமே இல்லை... பாரம்பரியமாக வரும் சாயல், தோற்றம்...அங்க அமைப்பும் பேச்சும், பழக்கவழக்கங்களும் கூடவே வரும்...அவ்வளவுதான். மாயா உங்க மகதான் நூற்றுக்கு நூறு உங்க மகதான்னு ஒவ்வொன்றும் நிருபிக்கிறது. அவ்வளவுதான்.''

''ஒரு மாசத்துக்கு மேலே பல்லைக் கடிச்சுக் கொண்டு காத்திருந்தேன். இன்னும் ஒத்திப் போடணுமா? நாம் எப்போ ரத்னாவைப் போய்ப் பார்க்கப் போறோம்? எப்போ உண்மையைச் சொல்லி என் மகளை என்னோடு அழைச்சுக்கப் போறோம்?'' கண்ணீருடன் கலங்கினாள் நீலா.

''இன்னும் கொஞ்சம் பொறுமையா இருங்கோ. முள்ளில் போட்ட சேலையாகப் பிரச்னை ரொம்பச் சிக்கலாக இருக்கு. அவசரப்பட்டா முதலுக்கே மோசமாயிடும்...எனக்கு நானே சிந்திக்க முடியாத சங்கதிகளை என் சிநேகிதி மகன் ரங்கனோட ஆலோசிச்சுச் செய்கிற பழக்கம்...''



''ரங்கன் யார்?'' நீலா வியப்புடன் கேட்டாள்.

''அவன் ஒரு காவல் துறை அதிகாரி. முன்னே இங்கேயே இந்த வட்டாரத்திலே வேலை பார்த்துக் கொண்டிருந்தான். இப்போ போக்குவரத்துப் பகுதியிலே வேலை பார்க்கிறான்.''

''போலீஸ்காரர் உதவி இதற்கு எதற்கு...?''

''போலீஸ் உதவி தேவையில்லை—ஒரு புத்திசாலியின் யோசனை தேவை. ரங்கன் மகா புத்திசாலி. எனக்குப் பல சமயம் பல பிரச்னைகளுக்கு ஆலோசனை சொல்லி ரொம்ப உதவியிருக்கான்.''

''இந்த ரகசியத்தை அவர்கிட்டே கட்டாயம் சொல்லணுமா?''

''அவன் எனக்குச் சொந்தப் பிள்ளையைப் போல. நான் எடுத்துக் கொள்ளும் எந்த முயற்சியிலும் அவனைக் கலந்து கொள்ளாது செய்ததே இல்லை. அவன் கலந்து கொண்டாலே என் பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு விடும்—எல்லாம் வெற்றிகரமாக, சுகமாக முடியும்...''

''எப்படியோ சாரதா அம்மா...என் மகளை என்னோடு சேர்த்து விடுவீங்கன்னு நான் ரொம்ப நம்பறேன்.''

''நம்பிக்கையோடேயே இருங்கோ...நல்லது நடக்கும்.'' கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

# 4

அழைப்பு மணியை அழுத்திவிட்டு...நெற்றியில் பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு ரங்கன் என்னும் ரங்கநாதன் வெளியே நின்றான்.

எதிர்புறத்து ஃபிளாட்டிலிருந்து ஒரு வயதான மனிதர் வெளியே வந்தார். சாரதாவின் ஃபிளாட்டுக்கு எதிரே ஒரு போலீஸ் அதிகாரி நிற்பதைக் கண்டு பயந்து விட்டார்.

ஆனாலும் நகரவாசிகளுக்கே உண்டான தனித் தன்மை. நமக்கேன் பாடு என்று எண்ணுகிறவர் போல... மெல்ல எதிர்ப்புறமாக நடந்து கீழே இறங்கிப் போய் விட்டார்.

அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

அவர் வசித்த அந்த ஃபிளாட்டில் அமிர்தம், சிவநேசன் என்ற தம்பதியர் வசித்தனர்.

அமிர்தம் என்ற அந்த அம்மாள் தன் மருமகளை வரதட்சணைப் பணத்திற்காகப் பாடுபடுத்தி வைத்த போது சாரதா தலையிட்டு ரங்கனை வரவழைத்து அவர் களைப் பயமுறுத்தி அந்தப் பெண் மல்லிகாவை வாழ வைத்தது ஒரு சுவாரசியமான கதை.

சாரதா அம்மா ஒரு சமூக சேவகி. தன்னந்தனியாக வயதைப் பொருட்படுத்தாது பெண்களுக்காகப் போர்க் கொடி தூக்கும் வீராங்கனை.

ஆமாம். இப்போது அவனை அவசரமாக எதற்காக அழைத்திருக்கிறாள்? தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகையின் போதுதான் அவள் அவனை அழைத்து டிபன் காப்பி வழங்குவது வழக்கம். அவன் பிறந்த நாளை மறக்காது அவனைத் தொலைபேசியில் கூப்பிட்டு வாழ்த்தி



விட்டுப் பின்னர் வீட்டுக்கு வரச் சொல்லி ஏதாவது ஒரு பரிசு கொடுப்பது வழக்கம்.

பெற்ற தாயைப்போல அன்பு காட்டிய அவள் மீது அவனுக்கு மிக்க பிரியம் உண்டு.

காரணமில்லாது அவள் அவனை அந்த நேரத்தில் அழைக்கவில்லை. இப்போது எந்தப் பெண்ணிற்கு என்ன கொடுமை நடந்துவிட்டது?

கற்பழிப்பா? வரதட்சிணை விவகாரமா? வீட்டை விட்டு ஓடிப்போன பெண்ணை மீட்டுப் பெற்றோர்களிடம் சேர்க்க உதவி தேவையா? என்னத்திற்கு சாரதா அவனைத் தொலைபேசியில் கூப்பிட்டாள்? முதல் நாள் அவனுக்கு நல்ல தலைவலி—ஓய்வு எடுத்துக் கொள்ள முடியாது காவல் துறையில் பல பணிகள். அன்று காலை அவன் ஒரு கேஸ் சம்பந்தமாக இந்தப் பகுதிக்கு வர நேர்ந்தது. அப்படியே சாரதாவைப் பார்த்து என்ன என்று விசாரித்து விட்டுப்போக வந்திருந்தான்.

அழைப்பு மணியை இன்னொரு தடவை அழுத்தி விட்டுத் தொப்பியைக் கழற்றிக் கைமடக்கில் பிடித்தபடி உஸ் எனப் பெருமூச்சு விட்டான்! கச்சிதமாகத் தன் உடல் எடையைக் காப்பாற்றிக் கொண்டுவந்தவன். சமீபத்திலே ஒரு கிலோ எடை கூடிவிட்டிருந்தது. அதை உடனடியாக இறக்கிவிட வேண்டும். பம்பாயிலிருந்த மூத்த பிள்ளையை விட்டு,அம்மா அவனுடன் கூட இருக்க வந்ததின் விளைவு.

''இன்னொரு தோசையைப் போட்டுக்கோ—ஓடி உழைக்க உடம்பில் தெம்பு இருக்க வேண்டும்'' என வற் புறுத்தி, காலை அவனது அளவுக்கு மீறி டிபன் சாப்பிடச் செய்து விட்டிருந்தாள். தேவைக்கு மீறிச் சிறிதளவு சாப்பிட்டாலும் பலன் உடனடியாகத் தெரிந்து விடு கிறதே! லிஃப்ட் இல்லாததினால் மாடிப்படிகளைத் தாவி ஏறி வந்தான்—லேசாக மூச்சு இரைத்தது. வயிற்றின்மீது கையை வைத்துத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

தொந்தி, தொப்பையை வளர்க்காது அவன் கச்சிதமாக உடம்பை வைத்துக் கொள்ளவேண்டும். போக்குவரத்துப் பகுதியிலிருந்து கிரைம் பிராஞ்சுக்கு மாற்றப்பட்டு மூன்று நாட்கள் தானாகியிருந்தது. அங்கே வேலை எக்கச்சக்க மாக இருக்குமே?

பலவாறு எண்ணியபடி வாயில் அழைப்பு மணியை மீண்டும் அழுத்தினான்.

நடையில் காலடி ஓசை கேட்டதும்—முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

கதவு திறக்கப்பட்டது. வெளிர்நீலப் பிரிண்டெட் சேலையில் அழகாகத் தெரிந்த அந்த இளம் பெண்ணை ஆச்சர்யமாகப் பார்த்தான்.

''உள்ளே வாங்கோ - அம்மா கைவேலையாக இருக்காங்க'' என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டுத் திரும்பியவன் பின்னே அவன் உள்ளே நுழைந்து கதவைச் சாத்தி விட்டு, 'குட்மார்னிங்' என்று குரல் கொடுத்தான்.

''வாப்பா ரங்கா...உனக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்'' என்று வரவேற்ற சாரதா புன்முறுவலுடன் உள்ளேயிருந்து வந்தாள்.

முன்னறையில் எப்பொழுதும் உட்காரும் ஜன்னலைப் பார்த்த சோபாமீது அமர்ந்து கொண்டான்.

''நீ கிளம்பிட்டியா மாயா...போறதுக்கு முன்னாடி அந்தத் தேநீர்க் கெட்டிலையும் பலகாரத் தட்டையும் இப்படி வச்சுட்டுப் போறியா?''

''சரி அம்மா'' என்று பதிலளித்த மாயா மின்னலாக மறைந்து போனாள்.

மரத்தட்டில் கெட்டில், கோப்பை - பலகாரத் தட்டு இத்யாதிகளுடன் அவள் முன்னறைக்குள் வந்தபோது மறுபடியும் ரங்கன் அவளை அதிசயமாகப் பார்த்தான்.



தேன் குழலும், குலோப்ஜாமூனும் இருந்த ஸ்டீல் தட்டைக் காப்பி மேஜைமீது வைத்தபோது அந்தப் பிஞ்சு விரல்களின் அழகிலே ஒரு கணம் லயித்துப் போனான்

''அம்மா! டிபன் வேண்டாம்-இதெல்லாம் சாப்பிடக் கட்டுப்படியாகாது'' என்று அவன் உரத்துக் கூறியபோது அந்தப் பெண் மெல்லச் சிரித்தாள். கன்னத்திலே லேசாக விழுந்த குழியின் அழகிலே சொக்கிப் போய் அவளையே ஒரு விநாடி பார்த்துக் கொண்டிருந்தான்.

''ரொம்ப அதிகம் இல்லே...மாயா தான் எனக்குக் குலோப்ஜாமூன் செய்யக் கத்துக் கொடுத்தா. அவளது செய்முறை. ஒரு துளி சாப்பிடு, உப்பிப் போக மாட்டே.

''அம்மா சௌக்யந்தானே—காலா காலத்திலே ஒரு கால்கட்டு போட்டுக் கொண்டிருந்தா அம்மா பம்பாய்க்கும் மெட்ராசுக்கும் இப்படி அலைய வேண்டாம்...'' என்று உரிமையோடு அதட்டியபோது அவன் கண்கள் மாயாவைப் பார்த்துப் பிரமித்துக் கொண்டிருந்தன.

''நான் வரட்டுமா?'' தோள் பையை மாட்டிக் கொண்டு நின்ற மாயாவும் அவனைத்தான் பார்த்தாள்.

''போயிட்டு வா. மறுபடி நாளன்னிக்குத்தானே வருவே? ஓ. கே. கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு போ. குடையை மறக்காம எடுத்துக்கோ. வெய்யில் இன்னிக்கு ரொம்பக் கடுமையாக இருக்கு.'' படபடவென்று பேசினாள்.

க்ளிக்கென்று வாயிற்கதவு வெளியே இழுத்துப் பூட்டப்படும் ஓசை கேட்டதும் அவன்...துளியளவு ஸ்பூனால் குலோப்ஜாமூனை வெட்டி வாயில் போட்டுக் கொண்டான்,

''ரொம்ப நல்லா இருக்கு. டிபனை இனிமேல் சாப்பிட முடியாது. தேநீர் அரைக் கப் போதும். ஆமாம், அந்தப் பெண் யார்?''

''டியூஷன் வாத்தியார்...'' சாரதா சிரித்தாள்.

''என்ன டியூஷன்?'' நிமிர்ந்து உட்கார்ந்தவன் அவளை வேடிக்கையாகப் பார்த்தான்.

''ஹிந்தி கத்துக்கறேன். இப்பத்தான் சின்ன வாக்கியங்கள் படிக்க வந்திருக்கு.''

'இது என்ன புதுக்கதை—உங்களுக்கு ஹிந்தி நன்றாகத் தெரியுமே!''

'இப்படிக் கதை செய்யாட்டி அந்தப் பெண்ணுக்கு என்னால் உதவ முடியாது.''

''ஆமாம். யார் இந்தப் பெண்? என்ன உதவி? வரதட்சணைப் பிரச்னையா...?'' முறுவலித்தபடி ஒரு வாய்த் தேநீரைப் பருகிவிட்டுக் கோப்பையை வைத்தான்.

''தேநீர் கூட அந்தப் பெண்தான் தயாரித்தாள். எப்படி இருக்கு? சமையலில்கூடக் கெட்டிக்காரி. ஆமாம் ரங்கா, பெண் எப்படி இருக்கா?'''

''இதென்ன? பெண் பார்க்கவா என்னைக் கூப்பிட்டீங்க?''

''அப்படித்தான் வச்சுக்கோயேன். நல்ல வரன்களை நல்ல இடத்திற்கு அறிமுகம் செய்து வைக்கிறது என் சமூக சேவைகளில் ஒன்று. உனக்குத்தான் இன்னும் கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணலையே. என் சிநேகிதியோட பிள்ளை நீ. உனக்கு நான் ஒரு பெண்ணைப் பார்த்து முடிவு செய்கிறதிலே தப்பு இல்லையே?''

''சாரதாம்மா நீங்க ரொம்ப வேடிக்கை செய்கிறீங்க.'

''உண்மையைச் சொல்றேன். மாயா படிச்ச பெண். அழகா இருக்கா. அடக்கமானவள்னு எனக்குத் தெரியும். ஜாதிப் பிரச்னை ஏதும் கிடையாது. நம்ப வகுப்புப் பெண். அவளைப் பார்த்ததும் எனக்கு உடனே உன் ஞாபகம் வந்தது.''



''மறுபடியும் கேட்கிறேன். இந்தச் சமயம் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்னை என்ன?''

''மாயாவுக்குத் தக்க இடத்திலே கல்யாணம் செய்து கொடுக்க வேணும் என்பதற்காக வரதட்சிணை இல்லாமசீர் கேட்காமப் பெண்ணை அவளது தகுதிக்காகக் கல்யாணம் செய்துக்கிற இடம் ஏதாவது தெரிஞ்சா சொல்.''

''நான் ஒரு போலீஸ்காரன்.''

''நாலு இடத்திலே பழகறே. அதனாலே கேட்டேன். இந்த மாயாவுக்குத் தகுந்த பிள்ளை யாராவது உன் கண்களில் படும்.''

''என் கண்களில் குற்றவாளிகள்தான் தென்படுவாங்க.'' சிரித்தான் ரங்கன்.

''நல்லவனா எவனாவது தென்பட்டா சொல்லு அப்பா. உன் அம்மா எப்படியிருக்கான்னு விசாரிக்கவும், உன்னைப் பார்க்கவுந்தான் கூப்பிட்டேன். மாயாவின் கல்யாணம் தவிர இப்போ எனக்கு வேறே எந்தவிதமான பிரச்னையுமில்ல.''

''அம்மா நல்லாத்தான் இருக்காங்க. ஒரு தடவை இங்கே கூட்டிக் கொண்டு வரேன். அப்போ நான் கிளம்பறேன்'' என்றபடி அவன் எழுந்திருந்தான்.

''நான் சொன்னதை மறக்காதே. உன் காவல்துறை நிலையத்திலே நல்ல குணமுடைய, உன்னைப் போல, பண்பான நல்ல பிள்ளை எவனாவது கிடைச்சா பார்த்துச் சொல்லப்பா. மாயாவுடைய தாய் வியாதியா கிடக்கா. தகப்பன் இல்லாத குடும்பம். பண வசதியில்லாமத் தவிக்கிறாங்க. அவ தகுதிக்கு ஏற்ற மாப்பிள்ளை பத்தாயிரத்துக்குக் குறையாம வரதட்சிணை கேட்பான். பணம்—சீர்—எதுவும் கேட்காத இடமாப் பார். நல்லவன், உன்னைப் போல ஒரு பண்பாளனாகப் பார். உனக்கும் புண்ணியம் உண்டு.''

''காவல்துறை வேலையை விட்டுக் கல்யாணத் துறையில் தரகனாகி விடுன்னு சொல்றீங்க. பார்க்கிறேன். சாரதா அம்மா, சில சமயம் எனக்கு உங்களைப் புரிஞ்சுக்கவே முடியறதில்லை.''

''ரங்கன் இந்தத் தடவைப் புரிஞ்சுக்க முயன்று பார்.'' சாரதா சிரித்தபடி விடை கொடுக்க அவன் வெளியேறினான். கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வருமுன் தொலைபேசி சிணுங்கியது.

''நான்தான் நீலா பேசறேன். எங்க ஃபிளாட்டு முன்னாலிருந்தபடி நான் சாலையையே பார்த்துக் கொண்டு நின்றேன்.''

''அப்படியா?''

''என் மக மாயா நான் கொடுத்த அந்த சில்க் புடவையைக் கட்டிக் கொண்டு வந்ததைப் பார்த்துப் பூரித்துப் போனேன். கொஞ்ச தூரத்திலிருந்து பார்த்தப்போவே அவ ரொம்ப அழகா இருந்தா. கிட்டக்க நின்னு பார்க்க முடியலையேன்னு மனம் ரொம்ப வேதனைப் படறது. நல்லவேளை, ரத்னா அந்தப் புடவையைப் பற்றி எதுவும் சொல்லாம மாயா உடுத்திக்க அனுமதிச்சாளே. அதுவே பெரிய காரியம்...எப்போ நாம அவளைப் போய்ப் பார்க்கிறதுன்னு முடிவு செஞ்சிருக்கிறீங்க?'' பதட்டமாகக் கேட்டாள்.

''இத்தனை காலம் அமைதியா இருந்த உங்களுக்கு இப்போ ஏன்தான் அவசரம்? இன்னும் சில நாட்கள் போகட்டும். இந்த மாசமும் எனக்கு மாயா டியூஷன் எடுக்கட்டும். அவ அம்மாவுக்கு மருந்து வாங்க நான் கொடுக்கும் பணம் தேவைப்படும். அடுத்த வாரம் ஒரு நாள் மாயா வீட்டில் இல்லாதபோது நான் உங்களை அழைத்துப் போகிறேன்'' என்றாள்.

பின்னர் தோள் பையை மாட்டிக்கொண்டு கதவைப் பூட்டிவிட்டு வெளியே கிளம்பினாள்.



பஸ்ஸை விட்டிறங்கிய சாரதா, சிவம் சாலையின் குறுக்கே ஓடிய மார்க்கபந்து தெருவுக்குள் புகுந்தாள்.

கோர்ட் விடுமுறையாதலால் வரதன் வீட்டில்தான் இருந்தார்.

அழைப்பு மணி ஓசையைக் கேட்டதும் கதவைத் திறந்தவர் புன்முறுவலுடன் வரவேற்றார்.

மல்லிகாவின் விவாகரத்து வழக்கை எடுத்து நடத்தி உதவியவர் வரதன்.

அப்போது ஏற்பட்ட பரிச்சயம் — சாரதாவுக்குச் சட்டம் பற்றிச் சந்தேகம் தோன்றும் போதெல்லாம் அவரை அணுகுவது வழக்கம். வீட்டின் வாயில் புறத்திலிருந்த ஆபீஸ் அறைக்குள்ளே அழைத்துச் சென்று அமர்த்தினார்.

மாயாவின் விவகாரத்தை விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டு சாரதா முகத்தைத் துடைத்துக் கொண்டாள். ஏனோ அவளது நெஞ்சு படபடத்தது.

சமீப காலத்திலே நெருங்கிப் பழக நேர்ந்ததாலே அந்தப் பெண் மீது அவளுக்கு மிக்க பரிவு ஏற்பட்டிருந்தது.

எப்படியாவது பெற்ற தாயையும் மகளையும் சேர்த்து வைக்க வேண்டும் என்றதொரு தீவிரமான ஆசை அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

''குழந்தையை மனப்பூர்வமாகக் கொடுத்துவிட்டு—பல ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பக் கேட்டால் வளர்த்தவள் லேசில் விட்டுக் கொடுக்க மாட்டாள்.

''இதில் சட்டப்படி போராட எந்த வகை ஆதாரமும் இல்லே. அதனாலே உங்க சிநேகிதி...வளர்த்தவகிட்டே மனம் விட்டுப் பேசித்தான் சமாளிக்க முயல வேண்டும். தன் சொத்துக்களைத் தனக்குப் பின் உங்கள் சிநேகிதி அந்தப் பெண்ணுக்கு எழுதி வைப்பதில் எந்தக் கஷ்டமும்

ஏற்படாது. அவளது சொத்து. அதை அவள் யாருக்கு வேணுமானாலும் தரலாமே. ஆனால் தன் மகள் என்று உரிமை பாராட்டச் சட்டத்தை அணுகுவதில் எந்தப் பயனும் இருக்காது.''

வீட்டுக்குத் திரும்பிய சாரதாவுக்கு மிகவும் களைப்பாகவும் சலிப்பாகவும் இருந்தது—சாப்பிடப் பிடிக்காது பலவும் எண்ணியபடி படுத்து விட்டாள்.

மறுநாள் காலை, வேலைக்காரி புறப்பட்டுப் போன போதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

திடீர் எனக் காப்பிப் பொடி தீர்ந்து விட்டிருந்தது. அடுத்த கட்டிடத்தின் கீழ்ப் பகுதியிலிருந்த சிறப்பு அங்காடியில் தேவைப்பட்ட வேறு சில சாமான்களையும் வாங்கிக் கொண்டு வர அவள் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

''அடடா! நீங்க வெளியிலே போறாப்பல இருக்கே—கொஞ்சம் நேரம் கழிச்சு வரட்டுமா...? இல்லாட்டா உங்களோட துணையா வரவா?'' கேட்டபடி மாயா வந்து எதிரில் நின்றாள்.

''ஒரு காரியம் செய். கதவைத் திறந்து விடறேன். அடுப்பை மூட்டி சமைச்சு வச்சிருக்கிற பட்டாணி பாத்தைச் சூடு பண்ணி—தட்டுகளை எடுத்து மேஜை மேலே வை. நான் சாப்பிட வந்துடறேன்...'' என்றபடி கதவைத் திறந்துவிட்டு விரைந்து விட்டாள்.

சாரதா தன்னிடம் காட்டிய நம்பிக்கையும் பரிவும் கண்டு மாயா மகிழ்ந்து போனாள்.

அடுப்பைப் பற்ற வைத்து மேடை மேல் வைத்திருந்த உணவுப் பாத்திரத்தை அடுப்பில் ஏற்றினாள்.

தட்டுகளைக் கழுவித் துடைத்து மேஜை மேல் வைத்து விட்டு, சூடாகிவிட்ட உணவை இறக்கி வைத்துவிட்டு,



தனக்குள்ளே மெல்லப் பாடிக்கொண்டு நடைப் பக்கம் வந்தாள்.

மனதிலே மகிழ்ச்சி ஏற்படும் போது அவளுக்குப் பாட்டு வந்துவிடும். இனிய குரல் இருந்தது. சங்கீதம் கற்றுக் கொள்ள வசதி இருக்கவில்லை. அம்மா அடிக்கடி பாடும், 'குயிலே உனக்கனந்த கோடி நமஸ்காரம்' என்ற பாடலைப் பாடிக்கொண்டே முன்னறையில் வந்து உட்கார்ந்தாள்.

வாயில் மணி ஒலித்தது. ''குமரன் வரக் கூவாய்'' என்று முணுமுணுத்தபடி கதவைத் திறந்தவள் முகம் சிவந்து போனாள்.

வெளியில் ரங்கன் நின்று கொண்டிருந்தான்.

''உங்களுக்கு நல்ல குரல் இருக்கே! உங்களுக்குப் பாடவும் தெரியும்னு சாரதா அம்மா சொல்லலையே!'' சிரித்தான் ரங்கன் மோகனமாக. மாயாவின் நெஞ்சு மகிழ்ச்சியில் படபடத்தது.

முதல் நாள் அவன் சந்தித்த போதே மனதிலே ஒரு இனிய உணர்வு. வீட்டுக்குப் போன பிறகும் வெகுநேரம் அவனையே நினைத்துக் கொண்டிருந்தாள். 'சே! என்ன ஆசை 'இது...அவர் யாரோ? நாம் யாரோ?' என்று தன் உணர்வுகளைச் சாடிக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் ஏற்பட்ட அந்தச் சந்திப்பில் அவள் மகிழ்ச்சியில் திளைத்தாள். அவளிடம் அவர் சகஜமாகப் பேசி விட்டாரே...! தாங்க முடியாத வியப்பு...

''உட்காருங்கள். சாரதா அம்மா வந்து விடுவாங்க'' என்று உபசரித்து விட்டுக் கதவைத் திறந்து வைத்தபடி அவள் உள்ளே சென்று விட்டாள்.

மூச்சிரைக்கக் கூடையுடன் வந்த சாரதா வாயிற் கதவு திறந்து கிடப்பதைக் கண்டு ஒருகணம் துணுக்குற்றுப் போனாள்.

உள்ளே நுழைந்தவள் முன்னறையில் ரங்கன் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

தன்னந் தனியாக இருக்கும்போது உள்ளே அவனை உட்காரவைத்துக் கதவைத் தாளிட்டுக் கொண்டால்—பார்ப்பவர்களுக்கு நல்லதாகப் படாது என்று மாயா கதவைத் திறந்து போட்டிருக்கிறாள். பலே பெண், ரொம்பக் கெட்டிக்காரி-விஷயம் தெரிந்தவள். தன்னுள்ளே எண்ணி மகிழ்ந்தபடி, '' ஹலோ ரங்கன், எங்கே இப்படி?'' என்று உபசாரமாக விசாரித்தாள்.

''உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம்னு வந்தேன். அம்மா உங்களை நாளை மறுநாள் வந்து பார்ப்பதாகச் சொல்லியிருக்காங்க'' என்று கூறிக்கொண்டு எழுந்து நின்றான்.

''என்னைப் பார்க்க வந்தியா, இல்லாட்டா?...'' என்று தணிவான குரலில் கேட்டுவிட்டுக் கண்களைச் சிமிட்டினாள்.

''நீங்க ரொம்பப் பொல்லாதவங்க'' என்று சிரித்தான் ரங்கன். காலைப் பலகாரத்தைக் குறைக்க வேண்டும் என்ற அவனது தீர்மானம் தவிடு பொடியாகியது.

மாயா பரிமாறும் போது சாரதாவுடன் அமர்ந்து சாப்பிடுவதை அவன் ரசித்தான். ''இன்னும் கொஞ்சம் போடட்டுமா?'' என்று இவள் கேட்ட போது, மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்துப் புன்னகைத்ததைச் சாரதா பாராதது போலப் பார்த்துக் கொண்டாள்.

விரைவில் ரங்கன் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டான்.

ஆனால் அவனது மனம் விடைபெற மறுத்தது போல, மாயாவின் பக்கம் இருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டே வெளியேறினான்.



''எங்க ரங்கனைப் பத்தி என்ன நினைக்கிறே?'' என்று சாரதா திடீரென்று கேட்டபொழுது மாயா திடுக்கிட்டுப் போனாள்.

''என்ன நினைக்கிறது? எனக்குப் புரியலையே.''

''எனக்குப் புரிகிறது. ரங்கன் ரொம்ப நல்ல பிள்ளை-உன்னோடு பேசினானே. அவனைப் பத்தி என்ன நினைச்சே...?''

''மரியாதை தெரிஞ்சவர்னு நினைச்சேன்.''

''அவனுக்கு உன்னைப் பிடிக்கிறதுன்னு என் யூகம்'' என்றபோது மாயா பேசத் தோன்றாது மௌனமானாள். அவளது தாழம்பூ முகம் சிவந்து போனது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் ரங்கனின் தாய் யசோதா அவளைப் பார்க்க வந்திருந்தாள்.

மாயா வழக்கம் போல டியூஷன் முடிந்ததும் சாரதாவுக்குக் கொஞ்சம் உதவியாகச் சமையலறையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

வந்தவளுக்கு பிஸ்கட்டும் தேநீரும் வழங்கி விட்டு, ''மாயா'' என்று அழைத்தாள் சாரதா.

சமையலறையிலிருந்து வெளிவந்த இளம் பெண்ணை யசோதா காலோடு தலைவரை கூர்ந்து பார்த்தாள்.

''இவள் எனக்கு ஹிந்தி கற்றுக் கொடுக்கும் ஆசிரியை.'' புன்முறுவலுடன் கூறி அறிமுகப்படுத்தி விட்டு, ''இவங்க தான் ரங்கனின் அம்மா. என்னைப் பார்த்துப் போக வந்திருக்காங்க'' என்றாள்.

மாயா அச்சத்துடன் மிரள மிரள விழித்தாள்-நெஞ்சு படபடத்தது. வந்தவளை உற்றுப் பார்க்க பயந்து எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

''வெகு நாளைக்குப் பிறகு இவங்க என்னைப் பார்க்க வந்திருக்காங்க. நாங்க பேசிக்கிட்டிருப்போம். நீ வீணா காத்திருக்க வேண்டாம்...'' என்றதும் மாயா விடை பெற்றுக் கொண்டு போய்விட்டாள். கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து உட்கார்ந்தாள் சாரதா.

''நீங்க என்னை மட்டும் பார்க்க வரலைன்று நினைக்கிறேன்.''

யசோதா மெள்ளச்சிரித்தாள். ''உங்களுக்கு எப்பவுமே ஊகம் அதிகம். ரங்கன் என்னிடம் நேற்றுத்தான் மனம் விட்டுப் பேசினான். உங்களுக்குத் தெரியும். நானும் மூணு வருஷமா பல இடத்தில் பார்த்து அலுத்துப் போனேன்—அவனுக்குப் பிடிச்ச வரன் இதுவரை எதுவுமே கிடைக்கலை. சாரதா அம்மா வீட்டிலே டியூஷன் கத்துக் கொடுக்க ஒரு இளம்பெண் வந்து கொண்டிருக்கா—அவளைப் பற்றின விவரம் அவனுக்குத் தெரியும். ரொம்பச் சாதாரணமான குடும்பம்—ஆனால் ரொம்ப கௌரவமானவங்கன்னு சொன்னாங்க—பெண்ணை அவங்க வீட்டில் ரெண்டு தடவை பார்த்துட்டேன். பார்க்க எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிட்டது. எதுக்கும் நீங்க பார்த்துடுங்கன்னான். காரியம் ரொம்ப சுலபமாயிட்டதேன்னு எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. எனக்குத் தெரியாதா? நீங்க திருப்தியடைஞ்சால் ஒழிய கண்டவர்களை வீட்டுக்குள்ளே அனுமதிக்க மாட்டீங்க. இந்த மாயாவை நீங்க உங்க பெண் போல நடத்துறதாக வந்து சென்னான்—அப்பவே மனசுக்குள்ளே தீர்மானிச்சுட்டேன். இப்போ நேரில் பார்த்தப்போ எனக்கும் பிடிச்சுட்டது...''

சாரதாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. நீலாவுக்குப் பெற்ற மகளைத் தேடிக் கொடுக்கும் காரியத்தில் வெற்றியோ—தோல்வியோ அக்கறை இல்லை. அவள் பெற்ற மகள் மாயாவுக்கு ஒரு கணவனைத் தேடிக்கொடுப்பதில் வெற்றி காணப் போகிறாள்.

அதுவும் அவள் சிநேகிதியின் மகன் ரங்கனை அவளுக்கு முடித்துவிடப் போகிறாள்.

''என்ன ஆச்சர்யம்? எதிர்பாராத ஒரு இனிய சங்கதி... அவள் அம்மாவைப் பார்த்து மேற்கொண்டு நான் பேசி முடிக்கிறேன். பிறகு நீங்களே வந்து ஆவன செய்யலாம்'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

# 5

**கா**லடி ஓசை கேட்டதும் கூடத்தில் படுத்துக் கிடந்த ரத்னா விருட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''நான்தான் சாரதா வந்திருக்கேன், இவங்க உங்களோட பேசணுமாம்'' என்று கூறியபடி சாரதா தன்னுடன் அழைத்து வந்த நீலாவை அறிமுகப்படுத்தினாள்.

''இவங்களை முன்னே ஒரு தடவை பார்த்திருக்கேன். நீங்கதானே குழந்தைக்குப் பட்டுப்புடவை பரிசு கொடுத்தவங்க...மாயா சொன்னாள்'' என்று கேட்ட வண்ணம் நீலாவை உற்றுப் பார்த்தாள்.

''வாங்க உட்காருங்க''—உபசரித்தபடி சிரமப்பட்டு எழுந்தாள்.

''உங்களோட ஞொளுசம அந்தரங்கமாப் பேசணுமாம்—இங்கே சௌகர்யப்படுமா?'' சாரதா கேட்டதும் ரத்னா முகம் சுருங்கிப் போனாள்.

''அந்தரங்கமா என் கிட்டே பேச என்ன விஷயம் இருக்கு?'' சந்தேகமாகக் கேட்டபடி அவள் மறுபடியும் நீலாவை ஏறஇறங்கப் பார்த்தாள். இனம் விளங்காத ஒரு கலவரம் மனதில் திடீரென்று ஏற்பட்டது. விவரிக்க இயலாத ஒரு பயம், நெஞ்செரிச்சல். அவள் ஆடிப் போனாள்.

''கூடத்து அறைக்குள்ளே உட்கார்ந்து பேசலாம் வாங்கோ'' என்று அழைத்தபடி நகர்ந்தாள்.

அறையின் ஜன்னல் வழியே வீசிய வெளிச்சம் மிகக் குறைவாக இருந்தது. லேசானதொரு மக்கல் வாசனை வந்தவர்களின் மூக்கைத் தாக்கியது. குழல் விளக்கை எரிய விட்டு - அறையின் மூலையில் அடுக்கி வைத்திருந்த இரு மோடாவையும் எடுத்துப் போட்டாள் ரத்னா. இருவரும் உட்கார்ந்ததும் படுக்கைகளைச் சுருட்டி வைத்திருந்த பெஞ்சின் ஓரத்தில் தான் அமர்ந்து கொண்டாள்.

''என் மகள் மாயாவை என்னிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்னு கேட்க வந்திருக்கேன்.'' நீலா சொன்னபோது வெடுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள் ரத்னா.

''என்ன சொல்றீங்க? உங்க மகள் மாயாவா?'' கோபம் தொனித்த குரலில் அதட்டினாள்.

''மாயா நீங்க பெத்த மகள் இல்லே—வளர்ப்பு மகள். நன்னா ஞாபகப்படுத்திப் பாருங்கோ. இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னால் கல்கத்தாவில் நான் பெற்ற குழந்தையை டாக்டர் சர்மா மூலம் என்னிடமிருந்து நீங்க தத்து எடுத்துக் கொண்டீங்க. அவ கழுத்திலே என்னுடைய சங்கிலியைப் போட்டு அனுப்பினேன். அந்த டாலர் பின்னல் கடையின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். அதைவிட முக்கியமானது... என் குழந்தையின் வலது தொடையில் மாங்காய் வடிவில் நிழல் மச்சம் இருக்கும். நீங்க மறுக்க முடியாது.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் ரத்னா. திடீரென்று ஆவேசம் வந்தவள் போல அலமாரியைத் திறந்தாள். ''புரிகிறது எனக்கு இப்போ. இந்த மாதிரியான எண்ணம் வச்சுக்கொண்டு என் மகளுக்கு நீங்க பட்டுப் புடவை பரிசு அளிச்சீங்களா? இந்தாங்க உங்க புடவை. என் குழந்தையை இதுக்கெல்லாம் நீங்க விலை பேசி விட முடியாது'' என்று கோபத்துடன் புடவையைச் சுருட்டி அவள் அருகே விட்டெறிந்தாள்.

''நான் விலை பேச வரலை. என் குழந்தை, அவள் அனுபவிக்க வேண்டிய போக பாக்கியங்களை அடையாமல் வறுமையிலே கஷ்டப் படுகிறா...அதனால் அவளை நான் திரும்ப அழைத்துக்கொண்டு...என் மகளாகக் கொண்டாடி நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து என் சொத்தைத் தர விரும்புகிறேன். அவள் அதிர்ஷ்டத்தின் குறுக்கே நீங்க நிற்கக் கூடாது. இதுவரை நீங்க அவளைப் பத்திரமாகப் பாதுகாத்து வளர்த்ததிற்கு ...உங்களுக்குத் தேவையான பணத்தைத் தந்துடறேன்.''



''அம்மா நீலா...உங்ககிட்டே ஏராளமான பணம் இருக்கலாம். ஆனால் என்கிட்டே இருக்கிற அன்புக்கு முன்னாடி அது துச்சம். இன்னிக்கு உங்க மகளைத் தேடிக் கொண்டு ஓடி வந்திருக்கீங்க. அன்னிக்கு அவளைக் கண்டு ஏன் நடுங்கினீங்க? உங்களது பத்தினி வேஷம் வெளிச்சமாகிடும்னு பயந்தீங்க. அன்னிக்கு நீங்க உங்களைப் பத்தித் தான் நினைச்சீங்க இல்லையா?''

''இருக்கலாம். ஆனாலும் நான் பெத்தவங்கிற உண்மையை மறுக்க முடியுமா?''

''அதைப் போல நான் வளர்த்தவங்கிற உரிமையைப் பறிக்க முடியுமா?''

''வீணா நமக்குள்ளே சண்டை எதுக்கு...நீங்க அவளை வளர்த்து ஆளாக்கினீங்க. நன்றி; ஆனால் நான் என் ரத்தத்தைக் கொடுத்து அவளை உருவாக்கியிருக்கேன். அந்த உரிமையை நீங்க அழிக்க முடியாது. அதனாலே உண்மையை நாம ரெண்டு பேரும் மாயாவிடம் சொல்லி விடுவோம். கட்டாயம் அவள் பெற்ற தாயை ஏற்க மறுக்க மாட்டா...'' கண்ணீர் பெருகத் தழதழத்தாள் நீலா.

''உண்மையை நீங்க என் மகளிடம் சொல்லலாம். ஆனால் நீங்க எண்ணுகிறாப்பல அவ உங்களைத் தாயாக ஏத்துக்க மாட்டா. முதல்ல அவ அந்தக் கதையையே நம்ப மாட்டா. நினைவு தெரிஞ்ச நாளிலிருந்து என்னைத் தானே அவ தாயாக எண்ணி வளர்ந்திருக்கா? அதனாலே உங்க பணம் - அந்தஸ்து எதுவும் இந்தத் தாய் உருவத்தை அழிக்க முடியாது. ஆனால் இந்த உண்மை தெரிஞ்சதும் அவளது உணர்வுகள் குழம்பிப் போகும். நம் அம்மா இப்படி ஒரு பொய் சொன்னாளான்னு அதிர்ந்துபோய் விடுவாள். மாயா மென்மையான உணர்வுகள் நிறைஞ்ச ஒரு பெண். பூப்போன்ற அவள் மனம் நொறுங்கிப் போகும். உண்மையைச் சொல்லாமல் மறைத்த என்னை அவள் வெறுக்கக்கூடும். அதே சமயம் அவள் உங்களையும் வெறுப்பாள். மறக்காதீங்க. பெற்ற சில நாளிலேயே தன்

மானத்தைக் காப்பாற்றிக்க முன்பின் தெரியாதவங்க கிட்டே தத்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாளே, இவளும் ஒரு தாயா என்று உங்களை அவள் கசந்து கொள்வாள். தாராளமா உண்மையை அவளிடம் சொல் லுங்கோ. நாம் மூன்று பேருமே நாசமாகப் போய் விடுவோம். உங்களுக்கு மகள் கிடைக்க மாட்டாள். எனக்கு என் பெண் போய் விடுவாள். மாயா எல்லாவற் றையும் இழந்து உணர்ச்சி குழம்பி...ஒரு சமயம் பைத்தியக்காரியானாலும் வியப்பதற்கில்லை'' என்று பட படவெனப் பேசியவள் துயரம் தாங்காது குமுறி அழுதாள்.

''எத்தனை காலம் நான் என் மகளைப் பிரிஞ்சிருப் பேன்? பெற்றவளுக்குக் கருணையோடு உதவி செய்யக் கூடாதா அம்மா?'' என்று கேட்ட நீலா விம்மினாள்.

மௌனமாக உட்கார்ந்திருந்த சாரதா இடை மறித்துப் பேசினாள்.

''நீலா கேட்பதிலும் நியாயம் இருக்கிறது. தன் மகள் வறுமையில் வாடும் போது இத்தனை பணத்தையும் வைத்துக் கொண்டு அவள் புழுங்கிக் கொண்டிருக்கிறாள். இது ஒரு சித்திரவதை அவளுக்கு. இத்தனை காலம் உயிராக வளர்த்த குழந்தையை ரத்னா அம்மாள் உங்க ளிடம் திருப்பித் தருவது என்பதும் சாத்தியப்படாது. பெற்றால்தான் தாயா-வளர்த்தால் கூட ஒரு பெண் தாயாகி விடுகிறாள் என்பது அவர்களுடைய வாதம்.

உங்க ரெண்டு பேரைவிட மாயாவின் உணர்வுகள் மிகவும் முக்கியம்.

இவ்வளவு காலம் அவள் நம்பியிருந்த ஒரு தாய் உருவத்தைத் திடீரென்று யாரும் அழிக்க முயலுவது தவறு.

அவளது மென்மையான உணர்வுகள் பாதுகாக்கப் பட வேண்டும். பணத்தைக்கொண்டு அலைகளைப் பகடையாடக் கூடாது.



நீலா, இப்போ உங்களுக்கு மாயா உங்கள் மகள்னு திட்டவட்டமாகத் தெரிஞ்சு போச்சு. அவளைத் தூர இருந்து பார்த்து மகிழ்வதில் நீங்க ஆனந்தம் கொள்ள வேண்டும்.

ரத்னா அம்மா, நீங்க இந்தப் பிரச்னையைத் தவிர்க்க ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

''எம்மா இதெல்லாம் உங்க ஏற்பாடா? என்னவோ டியூஷன்னு கதையோட என் வீட்டுக்குள்ளே வந்து இப்படி ஒரு கல்லைத் தூக்கிப் போட வச்சுட்டீங்களே!''

''இரண்டு பேருக்கும் நல்லது செய்யும் ஒரு யோசனை யைக் கூறத்தான் இங்கே வந்திருக்கேன். இரண்டு பேரும் சட்டென்று ஒரு முடிவுக்கு வர முடியாது கஷ்டப்படுவீங் கன்னு தெரியும். மாயாவை நீங்க பெத்த பெண்ணா நேசிக்கிறீங்க இல்லையா?''

''அதுக்கென்ன சந்தேகம்?''

''அவளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சு அவளைச் சுகமாக வாழவைக்க விரும்புகிறீங்க இல்லையா?''

''ஒவ்வொரு தாயும் விரும்பும் சங்கதி அது—அதில் என்ன சந்தேகம்?''

''உங்க பெண்ணுக்கு நான் ஒரு நல்ல இடத்தில் வரன் தேடிக் கொடுத்தா அவளைக் கல்யாணம் செய்து கொடுக்க மறுக்க மாட்டீங்களே?''

''அதைப் பெரிய புண்ணியமாக் கருதுவேன். ஆனால் அவள் என் மகளா இருக்கணும். இந்தப் பயங்கர உண்மையைத் தெரிஞ்சு கொள்ளக் கூடாது. எனக்குப் பணம் முக்கியமில்லை. என் மகளின் உணர்வுகள் பாது காக்கப் படவேண்டியதுதான் முக்கியம்.''

''ரெண்டு பேரும் அந்த விவகாரத்தைப் பேச வேண் டியதில்லை. மாயா உங்கள் மகளாகவே கல்யாணம் செய்து கொள்ளட்டும்.

''நீலா எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவளாகவே உங்கள் மகளின் நலன் மேல் அக்கரை கொண்டவளாகக் கல்யாணத்தில் பங்கு கொண்டு மகிழ்வதில் ஆட்சேபனை உண்டா?''

''கல்யாணத்திற்குச் செலவு செய்துவிட்டு, பிறகு சொந்தம் கொண்டாடக் கூடாது-அனுமதிக்க மாட்டேன்.''

''வரதட்சணை சீர் எதுவும் கேட்காத நல்ல இடம். நாம் எல்லோரும் சேர்ந்து எடுத்துச் செய்யப் போகும் கல்யாணம். அதில் ஏதேனும் மறுப்பு உண்டா?''

அழுது கொண்டிருந்த ரத்னா...கண்களைத் துடைத்துக் கொண்டாள்

''மறுப்பு இல்லை. அம்மா சாரதா...என்னை என் குழந்தையிடமிருந்து ஒரேயடியாகப்பிரிச்சுடாதீங்க. நான் கண்ணை மூடற வரை என் குழந்தைக்குத் தாயாக இருந்துவிட்டுப் போகணும். அதுதான் என் கோரிக்கை'' விம்மினாள்.

வெளியே வந்தபோது...அழுகையை அடக்க முடியாது கேட்டாள் நீலா.

''பெத்தவள் எனக்கு உரிமையே இல்லாதது போல வாதாடுகிறாளே. இது உங்களுக்குச் சரியெனப் படுகிறதா?'' தழுதழுத்தாள்.

''குடும்பத்து நண்பரின் மனைவி என்பது போல நீங்கள் என்றும் மாப்பிள்ளை பெண்ணோடு கலந்து கொண்டு வாழ முடியும். எல்லாவற்றையும் விட, தாய் என்கிற நிலையில் நீங்கள் இப்போது ஒரு காரியம் செய்தாக வேண்டும். பெற்றவுடன் அவளை வளர்க்கப் பயந்து உங்கள் மானத்தைப் பெரிதாக நினைத்துத் தத்துக் கொடுத்துட்டீங்க. அதற்குப் பிராயச்சித்தமாக இப்போ உண்மையை உங்க மனதிலே புதைத்துக் கொண்டு...அவள் வாழ்வதைத் தூர இருந்து பார்த்து



மகிழுங்கள். இந்தத் தியாகத்தை நீங்க தாய் என்கிற தகுதியில் செய்தால்தான் எல்லாருக்கும் நன்மை.

''வாழ்க்கையில் நாம் விரும்பினதை எடுத்துக்கொள்ளலாம்—ஆனால் ஒவ்வொன்றுக்கும் விலை உண்டு.

''அப்போ நீங்க சமூகத்தின் கௌரவத்தை எடுத்துக் கொண்டீங்க. அதன் விலை—தாய் என்கிற உரிமை. என்ன செய்வது?'' என்றாள், சாரதா.

வழிநெடுகக் காரில் கண்ணீர் உகுத்தபடியே வந்தாள் நீலா.

''எனக்கென்னவோ உதவி செய்வீங்கன்னு நம்பினேன்.'' மெல்ல விசும்பினாள் நீலா.

''உதவி செய்திருக்கிறேன். என் சிநேகிதியின் மகன் ரங்கன், காவல்துறை அதிகாரியாக வேலை செய்கிறவன். பார்க்க லட்சணமான பிள்ளை. கௌரவமான குடும்பம். வரதட்சணை இல்லாமல் உங்கள் மகளைக் கல்யாணம் செய்து கொள்ள ஒத்துக் கொண்டிருக்கிறான். நாம் எல்லோரும் கூடிக் கல்யாணத்தைச் சிறப்பா முடிக்கப் போகிறோம். உங்கள் மகள் வறுமையில் வாடாது வசதியாக வாழப் போகிறாள். இதுதான் என்னால் செய்ய முடிந்த உதவி. நீங்கள் பிற்காலத்தில் உங்கள் சொத்து முழுவதையும் அவளுக்கு விட்டுப் போகலாம். அதுதான் நீங்க உங்க மகளுக்குச் செய்யும் உதவி. ஒரு சமயம் பின்னால் அவள் உண்மையைத் தெரிந்து அவள் உங்களையும் தாயாகப் பார்த்து அன்பு காட்டினால்...அது கடவுள் செய்த உதவின்னு சந்தோஷப்பட வேண்டும். அவ்வளவுதான்'' என்றாள் சாரதா.

சில நாட்களுக்குப் பிறகு ரங்கனுக்கும் மாயாவுக்கும் திருமணம் மிகவும் எளிமையாக, இனிதாக நடந்தேறியது

மணமக்களுக்கு விருந்து கொடுக்க அழைத்தபோது—ரங்கனிடம் ரகசியமாக உண்மை நிலையைச் சொல்லிவிட்டாள் சாரதா.

''அப்படியா?'' எனச் சொல்லி ஆச்சரியப் பட்டுப போனான் ரங்கன்.

''மாயாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போறவன் ஒரு நல்லவனாக, பணத்திற்கு ஆசைப்படாதவனாக இருக்கணும்னு நினைச்சேன். நீ எங்களுக்குக் கிடைச்சே. மாயா ஒரு பெரிய சொத்தின் வாரிசு என்பது தெரியாமல் நீ அவளை அவளுக்காகவே விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டே. உன்னோட இரண்டு மாமியார்களையும் நீ அன்போடு கவனிக்கணும். அது தான் என் வேண்டுகோள்.''

''சாரதாம்மா, நீங்க ரொம்பவே கெட்டிக்காரர். இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது ரகசியம் இருக்கா?''

''இனி ரகசியம் சொல்லப் போறவன் நீ. மூன்று மாதம் கழிச்சு இங்கே வந்து சீக்கிரத்தில் நான் அப்பாவாகப் போகிறேன்னு வந்து ரகசியம் சொல்லப்போறே.''

''நீங்க படு பொல்லாதவங்க'' என்று கூறிவிட்டு ரங்கன் பலத்த சிரிப்பு சிரிக்க-சாப்பாட்டறையில் பேசிக் கொண்டிருந்த சம்பந்திகள் மூவரும் எட்டிப் பார்த்து என்னவென்று புரியாது கூடச் சிரிக்க, புதுமணப் பெண் மெள்ள அங்கே வந்து தன் கணவன் முகத்தைப் பார்த்துக் களிப்புடன் சிரிக்க,-

அந்த வீடே சிரிப்பில் குலுங்கியது.

**முற்றும்**